www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

[redacted]

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு



## நக்சலிசம் — மகத்தான மக்கள் எழுச்சி!

படிப்பகம்

www.padippakam.com



# மலிவுவிலை மது திட்டத்தை [redacted] எதிர்த்து இயககம்



மலிவு விலை மது திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார் கருணாநிதி. இதை எதிர்த்து தமிழகமெங்கும் மக்கள் கலை இலக்கியக் கழகம் மற்றும் விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய அமைப்புகள் இயக்கம் நடத்தி வருகின்றன.

● **வி.வி.மு. பட்டுக்கோட்டை:** மது அரக்கன் உருவ பொம்மை ஒன்று செய்து அதன் இரு கைகளிலும் பாக்கெட் சாராயம் இருப்பது போல் வடிவமைத்து அதிராம்பட்டினம் பேருந்து நிலையத்திற்கு எதிரில் கட்டப்பட்டது. ''சாராயத்தில் சமத்துவம் கண்ட கருணாநிதியே, உன் சாதனையே சாதனை ''கள்ளச்சாராயம் ஆனாலும் நல்ல சாராயம் ஆனாலும் அறுபடப் போவது ஏழைப் பெண்களின் தாலியே''... போன்ற முழக்கங்களைக் கொண்ட தட்டிகள் பொம்மைக்கருகே வைக்கப்பட்டது. இது வீச்சான பிரச்சாரமாக மாறியதால் தி.மு.க.வினரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. போலீசு அதிகாரிகளைத் தூண்டிவிடவே, அதிராம்பட்டினம் எஸ்.ஐ. தலைமையில் போலீசு பட்டாளம் ஒன்று வந்து பொம்மையை திருடிச் சென்றது. இது நடந்தது மே 1ந் தேதி பகலில. செய்தியறிந்து வி.வி.மு. தோழர்கள் மே தின ஊர்வலத்தை முடித்துக் கொண்டு திரளாக காவல் நிலையத்திற்குச் சென்று கண்டித்திருக்கின்றனர். ''எஸ்.பி. உத்திரவு. எனவே, நான் ஒன்றும் செய்ய இயலாது'' என எஸ்.ஐ. பொம்மையைத் திருப்பித்தர மறுத்திருக்கிறார். தொடர்ந்து விவாதம் நடந்தது. வெகுநேரமாக பிரதிநிதிகளை நிற்கவைத்தே எஸ்.ஐ. பேசியதைக் கண்டு ''சமூக விரோதிகளோடு கூடிக் குலாவும் போலீசே, மக்கள் பிரதிநிதிகளுக்கு மரியாதை கொடு'' என வெளியில் இருந்தவர்கள் கோஷமிட்டார்கள்.

ஒரு தோழர் வெளியிலிருந்து நாற்காலி எடுத்துக் கொண்டு போய் போட்டு பிரதிநிதிகளாகச் சென்ற தோழர்கள் இருவரையும் உட்கார வைத்திருக்கிறார். பொம்மையைத் திருப்பித் தராவிட்டால் களைய மாட்டோம். ஆர்ப்பாட்டம், சாலை மறியல் நடத்துவோம் என அறிவித்து 35க்கும் மேற்பட்டவர்கள் உறுதியுடன் காவல் நிலையத்திற்கு முன் வெகு நேரமாக நின்றனர். வேறு வழியில்லாமல் பட்டுக்கோட்டை இன்ஸ்பெக்டர் ''முன்னறிவிப்பு இன்றி எடுத்து வந்தது தவறுதான்'' என ஒத்துக் கொண்டு பொம்மையை ஒப்படைத்திருக்கிறார். பிறகு தோழர்கள் ஊர்வலமாக பொம்மையை காவல் நிலையத்திலிருந்து எடுத்து வந்து கட்டினர்.

● **ம.க.இ.க. - திருச்சி:** பிரசுரங்கள் அச்சிட்டு நகரெங்கும் விநியோகிக்கப்பட்டும், சுமார் 40 இடங்களில் சுவரெழுத்து எழுதப்பட்டும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. காந்திபுரம், செந்தண்ணீர்புரம் ஆகிய இடங்களில் மது அரக்கன் பொம்மையும் முழக்கத் தட்டிகளும் வைக்கப்பட்டது. இதையொட்டி வீடு வீடாகச் சென்று எதிர்ப்பு இயக்கத்திற்கு கையெழுத்துப் போடக் கோரி கையெழுத்தியக்கம் நடத்தப்பட்டது. பெண்கள் அனைவரும் கையெழுத்தோ, கைநாட்டோ இட்டு ஆதரவளித்தனர். செந்தண்ணீர்புரத்திற்கு அருகில் உள்ள வள்ளுவர் நகரில் சாராய - ஊறல் வைத்திருந்த சாராயப் பேர்வழிகள் இப்பிரச்சாரத்திற்கு அடுத்தநாளே இடத்தை காலி செய்து விட்டனர்.

● **புதிய கலாச்சார வாசகர் வட்டம் - சீர்காழி:** சைக்கிளில் ஊர்வலமாகச் சென்று தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது. 12.4.90 அன்று 11 இடங்களில் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தினர்.

● **வி.வி.மு. - அம்மாப் பேட்டை ஒன்றியம்:** ரேஷன் அரிசிவிலை உயர்வை எதிர்த்தும் - மலிவுவிலை மது திட்டத்தை எதிர்த்தும் ஊர்வலமும், ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டது. குருவரெட்டியூர், வெள்ளத் திருப்பூர், மாத்தூர் ஆகிய ஊர்களில் உள்ள கிராமக் கூட்டுறவு சங்கங்கள் (ரேஷன் கடை இணைந்தது) முன் ஆர்ப்பாட்டங்களை, ஊர்வலமாகச் சென்று நடத்தினர். மே 2ந் தேதி 3 இடங்களிலும் நடத்தப்பட்டதில் 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# [redacted] ஓட்டுக்கட்சிகளின் முகவிலாசம் [redacted] வெட்ட வெளிச்சமாகியது



திருவண்ணாமலை நகருக்கு அருகேயுள்ள மங்கலம் கிராமம். 6.3.90 அன்று இங்குள்ள அரசு உயர்நிலைப் பள்ளி சத்துணவுக் கூடத்தில் ரு.1800/- திருட்டுப் போனது. உள்ளூர் பிரமுகர்களின் - ஆதிக்க சக்திகளின் வாரிசுகள்தான் இதை செய்திருக்கிறார்கள். அ.தி.மு.க.வைச் சேர்ந்த ராஜமாணிக்கம், வேழராசு, அரங்கநாதன் மற்றும் தி.மு.க.வைச் சேர்ந்த பஞ்சாயத்து தலைவர் துரை, ம.வெ.கன்னி ஆகியோர் திருட்டுக் கும்பலுக்கு வக்காலத்து வாங்கி போலீஸ் வழக்கு போடாமல் நிறுத்தி வைத்தனர்.

இதை அம்பலப்படுத்தி விவசாயிகள் விடுதலை முன்னணி சுவரொட்டி இயக்கம் எடுக்கவே, வேறு வழியில்லாமல் அம்பலப் பட்டுப் போன போலீசு மூன்றுபேரைக் கைது செய்து ஏனோதானோ என்று விசாரித்து வழக்கு போட்டுள்ளது.

மேலும், மங்கலம் கிராமத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில் உள்ள மணிமங்கலத்தில் குடிநீர் வசதி அறவே இல்லை. ஊருக்கு அருகாமையில் நிலம் வைத்திருக்கும் 3 பம்பு செட்டு கிணறுகளின் அரைகுறை தண்ணீர் தான் இவர்களுக்கு வழி. அதற்கும் நெடுந்தூரம் நடக்க வேண்டும்.

கிராம மக்கள் சிலர் ஏதாவது வழி செய்யச் சொல்லி பஞ்சாயத்து தலைவரை அணுகிய போது, நீங்கள் எனக்கு ஓட்டுப் போடவில்லை; ஓட்டுப் போட்டவரிடம் போய்க் கேளுங்கள் என்று திமிருடன் பதில் சொல்லி அனுப்பினார்.

எனவே, இதை கண்டித்தும், குடிநீர் வசதி செய்துதர கோரியும் வி.வி.மு. மற்றும் மணிமங்கலம் கிராம மக்களும் இணைந்து, துரிஞ்சாபுரம் ஒன்றிய அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த தீர்மானித்து 26.4.90 அன்று நடத்தினர். அனைத்து ஓட்டுக்கட்சிப் பிரமுகர்கள் உள்ளூர் துண்டு துக்கடாக்களை உசுப்பிவிட்டு அடி வெட்டு வேலையில் இறங்கியும ஆர்ப்பாட்டத்தில் 75 பேர் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

ஒன்றியத் தலைவர் சிலரை மட்டும் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். உள்ளே சென்ற பிரதிநிதிகள் மிகத் தெளிவாக ''நாங்கள் ஏற்கனவே கேட்ட கோரிக்கைகளுக்கே இதுவரை பதில் இல்லை. எனவே, எங்களிடம் தனியாக சொல்வதைவிட விருப்பமிருந்தால் வந்திருக்கும் மக்களிடம் வந்து பேசுங்கள்'' என்று கூறிவிட்டு வெளியே வந்துவிட்டனர். ஆனால், மக்களைச் சந்திக்க அஞ்சிய பெருந்தலைவர் சேசாச்சலம் வெளியே வரவே இல்லை.

நிகழ்ச்சியின் இடையில் பேசிய வி.வி.மு. அமைப்பாளர் தோழர் பழனி மற்றும் தோழர் வேலு ஆகியோர், ஓட்டுக்கட்சி தலைவர்களின் யோக்கியதையையும் அவர்கள் எப்படி இறுமாப்போடு நடந்து கொள்கிறார்கள் என்பதையும் தொடர்ந்து போராட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தி பேசினார்கள்.

ஓட்டுக்கட்சித் தலைவரின் யோக்கியதையை அறிந்த மக்கள் ''நீ அடுத்த முறை ஓட்டுக் கேட்க வரும்போது பார்த்துக் கொள்கிறோம்'' என ஆத்திரத்துடன் கூறினர்.

**வி.வி.மு. மங்கலம்.**

படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

5 13

16-31 மே '90

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015

# நக்சலிசம் — மகத்தான மக்கள் எழுச்சி!

'நக்சலிசம்' - மத்திய இந்தியாவில் மிகப் பெரிய அரசியல் - ஆயுத சக்தியாக எழுந்து நிற்கிறது. ஆதிக்க வர்க்கங்களின் சிம்ம சொப்பனமாக வளர்ந்துவிட்டது. அரசு பயங்கரவாதத்தை முறியடித்து ஆந்திராவின் தெலுங்கானா, கோதாவரிப் பள்ளத்தாக்கு பிராந்தியங்களில் ஏற்கனவே ஆழமாக வேரூன்றியுள்ளது இந்தியப் பொதுவுடமை (மார்க்சிஸ் - லெனினிஸ்ட்) கட்சியின் ஒரு பெரிய பிரிவான மக்கள் யுத்தக்குழு. படிப்படியாக கடுமையான போராட்டம், தியாகத்தினூடே மராட்டியத்தின் சண்டா - விதர்பா, மத்தியப் பிரதேசத்தின் பஸ்தார் ஆகிய பிராந்தியங்களுக்கு தனது இயக்கத்தை விரிவுபடுத்துவதில் மக்கள் யுத்தக் குழு வெற்றி கண்டது. குறிப்பாக தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்களைத் தட்டி எழுப்பி நம்பிக்கையைப் பெற்று அணிதிரட்டி, அவர்களது உரிமைகளை நிலைநாட்டி, எதிரிகளின் அடக்குமுறை, சுரண்டலை முறியடிப்பதில் மக்கள் யுத்தக் குழு கணிசமான - அரிய வெற்றிகளை ஈட்டியுள்ளது. இவையெல்லாம் கண்டு ஆதிக்க வர்க்கங்கள் கதிகலங்கிப் போயுள்ளன. மக்கள் யுத்தக்குழுவுக்கு எதிராக பல்வேறு அவதூறுகளைப் பரப்புவதோடு 'நக்சலைட்டு' இயக்கத்தைக் கிள்ளி எறிய வேண்டியதன் அவசியம் குறித்து எச்சரிக்கை - கோரிக்கை விடுக்கின்றனர்.

''ஆந்திராவில், குறிப்பாக தெலுங்கானா மாவட்டங்களில் நக்சலைட்டுகள் போட்டி அரசே நடத்துகிறார்கள். அவர்களுடைய அதிகாரம்தான் செல்லுபடியாகிறது. ஆளும்கட்சி மற்றும் அரசு நிர்வாக ஊழல், நிலத் தகராறு, குடும்ப - வரதட்சிணைப் பிரச்சினைகள் முதல் சகல விவகாரங்களையும் பகிரங்கமாக விசாரித்து உடனடியாக தீர்ப்பு வழங்கி துப்பாக்கி முனையில் அமுல்படுத்துகிறார்கள். நிலப்பிரபுக்களின் நிலங்கள், அரசு புறம்போக்கு நிலங்களை கைப்பற்றி கூலி, ஏழை விவசாயிகளுக்கு விநியோகிக்கிறார்கள். காடுகளை அழித்து, மலைவாழ் மக்களின் விவசாயத்துக்குத் தருகிறார்கள். குறிப்பாக மத்தியப் பிரதேசத்தில் உள்ள கண்கா தேசியப் பூங்காவை ஆக்கிரமித்துக் கொண்டு காடுகளுக்குத் தீ வைத்து அழிப்பதோடு, நீர்நிலைகளில் நஞ்சு கலந்து மிருகங்களைக் கொன்று வருகிறார்கள்.

''வியாபாரிகள், நிலப்பிரபுக்கள், காண்டிராக்டர்களிடம் இருந்து துப்பாக்கி முனையில் வரி வசூலிக்கிறார்கள். ஆட்களைக் கடத்துவது பணம் பறிப்பது ஆகியவற்றுக்கு அஞ்சி செல்வந்தர்களும், தேர்நெதடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் கிராமப் புறங்களை விட்டு நகரங்களுக்கு ஓடித் தஞ்சமடைகிறார்கள். மாநில அரசு போலீசின் கைகளைக் கட்டிப் போட்டு, வழக்குகளை விலக்கிக் கொண்டு, விசாரணைக் கைதிகளை விடுதலை செய்தது. ஆனால் அவர்கள் திருந்தவில்லை. வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு அணிகளை - அமைப்புகளைத் திரட்டுகிறார்கள். லட்சக்கணக்கில் கட்டாய வரி வசூல் நடத்தி நவீன ஆயுதங்களை வாங்கிக் குவிக்கிறார்கள். கிராமத்துக்கு ஐந்து பேரைக் கொண்ட ஆயுதக் குழுக்களைக் கட்டுகிறார்கள். இவற்றை வைத்து இராணுவத்தைக் கட்டப் போகிறார்கள். ஈழ விடுதலைப் புலிகளுடனும், சீக்கியப் பயங்கரவாதிகளுடனும் சேர்ந்து ஆயுதப் பயிற்சி முகாம்கள் நடத்துகிறார்கள். எனவே நக்சலைட்டு இயக்கத்தை உடனடியாக, கடுமையாக ஒடுக்கவில்லையானால் பேராபத்து விளையும்'' என்று எச்சரிக்கிறார்கள்.

மக்கள் யுத்தக்குழு மேற்கொள்ளும் அவசியமான, நியாயமான நடவடிக்கைகளையே ஏதோ கிரிமினல் குற்றங்களாக அவதூறுகளோடு கலந்து பரப்புகிறார்கள். பழைய ஆதிக்க சக்திகளோடு அரசியல்வாதிகள், அதிகாரிகள், காண்டிராக்டர்கள் போன்ற புதிய கும்பலும் சேர்ந்து உழைக்கும் மக்களை சுரண்டுவதும், ஒடுக்குவதும் அதிகரித்தே வருகின்றன. எழுதப்பட்ட சட்டங்களும், போடப்பட்ட திட்டங்களும், அந்த சமூக விரோத கும்பலுக்கே பயன்படுகின்றன. உழைக்கும் மக்கள் அதிகாரத்தை எடுத்துக் கொள்ளவும், சமூக உரிமைகளை நிலைநாட்டவும் மக்கள் யுத்தக்குழு போராடுவது நியாயமானதே! ஆனால் நிலப்பிரபுக்களின் தனியார் இராணுவம், ஆலை - சுரங்கங்களில் ''தொழிற்சங்க'' மஃபியா, நகரங்களில் கிரிமினல் மஃபியா கும்பல்கள் கேள்வி முறையின்றி வளர்வதை எதிர்க்காத இவர்கள் உழைக்கும் மக்கள் உரிமைக்காக ஆயுதமேந்துவதை ஒடுக்கும்படி கோருகிறார்கள். இந்தியாவின் நிலப்பரப்பில் 52% ஆக இருந்த காடுகளை இப்போது 26% ஆக சமூக விரோத மஃபியா கும்பல்கள் அழித்துவிட்டதை தடுக்காத இவர்கள் மலைவாழ் பழங்குடி மக்களுக்கு உரிமையான நிலங்களில் பயிரிடுவதைப் பார்த்து கூச்சல் போடுகிறார்கள்.

மக்கள் யுத்தக்குழு இப்போது பகிரங்கமாக மக்களை அணிகளைத் திரட்டவும், இயக்கங்களை நடத்தவும் பெற்றுள்ள வாய்ப்புகளும் கூட அரசின் தயவினால் கிடைத்தவை அல்ல. கடந்த 20 ஆண்டுகளாக போலீசு - துணை இராணுவம் நடத்திய 'நக்சலைட்டுகளுடனான மோதல்' நாடகத்தினால் நூற்றுக்கணக்கான புரட்சியாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்களது குடியிருப்புகள் - பயிர்களைத் தீயிட்டு அழித்தனர் - சூறையாடினர்: அந்த இளைஞர்களை சித்திரவதை செய்து கொன்றனர்; பெண்களைக் கற்பழித்தனர். இத்தனை அரசு பயங்கரவாதத்துக்கும் எதிராக நின்று, போராடி, தாக்குதல் தொடுத்ததன் விளைவாகத் தான் அரசு பின்வாங்கவும், இயக்கம் முன்னேறவுமான வாய்ப்புகளை மக்கள் யுத்தக் குழு ஈட்டியது. அரசு பயங்கரவாதத்தைத் தொடர்வது; சலுகைகளைக் காட்டியும் பிளவுபடுத்தியும் புரட்சியாளர்களை விலை பேசுவது என்ற இரட்டைக் கொள்கையை இந்த அரசு பின்பற்றுகிறது. மக்கள் யுத்தக்குழுவுடன் பிற குழுக்களுக்குக் கருத்து வேறுபாடுகள் இருப்பினும் அவை சில சமயம் பகைமையானதாக வெடிப்பினும் இந்த முரண்பாடுகள் அரசியல் - சித்தாந்தப் போராட்டத்தின் மூலம் தீர்த்து கொள்ளப்படும்; அவ்வாறின்றி ஆதிக்க வர்க்கங்கள் பகற்கனவு காண்பதைப் போல புரட்சிகர இயக்கத்தை அவை அழித்துவிட மாட்டா. மக்களுக்கும், புரட்சிக்கும் விசுவாசத்தோடும், மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனையில் நம்பிக்கையோடும் செயல்படும் புரட்சிகர இயக்கத்தை ஆதிக்க சக்திகளின் அவதூறுகள், சூழ்ச்சிகள், அடக்குமுறைகளும் அழித்து விட முடியாது.

படிப்பகம்

www.padippakam.com

[illegible] மாநில முதல்வர் முலாயம் சிங் யாதவ் [illegible] இந்தியை தங்கள் மாநிலத்தின் அதிகாரபூர்வ [illegible] மொழியாக்கியிருக்கிறார். மறத் தமிழர்கள் என்று கூறிக் கொள் [illegible] இருக்கும் ஆங்கில அடிமைகள் இந்த தாய்மொழிப் [illegible] இந்திவெறி என்று காட்டு கூச்சலிடுகின்றனர். அம்மாநிலத்துடன் [illegible] திலதான் கடிதத் தொடர்பு வைத்துக் கொள்வோம் என்று அமெ ரிக்கா - லண்டனில் பிறந்தவர்கள் மாதிரி கூறுகின்றனர். அந்நிய ஆங்கி [illegible] மொழிபெயர்த்து புரிந்து கொள்ளும் போது இந்தியை மொழிபெ [illegible] கொள்வதில் என்ன தவறு...?

# இந்தியும் ஒரு தாய்மொழிதான்!

''நாட்டின் பிரச்சினைகள் எதுவும் ஏன் தீர்க்கப்படாமல் இருக்கின்றன? ஏன் எப்பொழுதும் விவசாயிகள் மட்டுமே வஞ்சிக்கப் படுகிறார்கள்? கிராமத்தின் குரல் ஏன் அரசை எட்டுவதில்லை?

காரணம் விவசாயிகள் போதிய அளவுக்கு அரசு அதிகாரிகளாக வரஇயலவில்லை. அவர்களால் ஒரு போலீஸ்காரன் வேலைக்கோ அல்லது ராணுவ சிப்பாய் வேலைக்கோ மட்டும்தான் போக முடிகிறது. இது எத்தகைய அவலம்! அதே நேரத்தில் இந்த தேசத்தின் சொத்துக்களைத் திருடி வெளிநாட்டு வங்கிகளில் கொண்டு போய்க் குவித்து வைத்துக் கொண்டவர்கள் யார்? ஆங்கிலக் கல்வி பயின்ற மேட்டுக் குடியினர். மற்றெல்லோரையும் விட அவர்கள்தான் மிகப்பெரிய திருடர்கள். ஆயுத பேரத்தில் வரும் தொகைகளைத் தரகுத் தொகையாகப் பெற்றவர்கள் ஆங்கிலக் கல்வி பயின்ற மேட்டுக்குடி சீமான்கள்தான்; கிராமத்துப் பள்ளிகளில் படித்தவர்கள் அல்ல.''

பொதுக் கூட்டங்களில் இவ்வாறு கர்ஜனை செய்கிறார் உத்தரப்பிரதேச முதல்வர் முலாயம் சிங் யாதவ். மக்கள் ஆரவாரம் செய்கிறார்கள்; கரவொலி எழுப்புகிறார்கள்

இதன் தொடர்ச்சியாக உத்திரப்பிரதேச அரசு ஒரு சுற்றறிக்கை அனுப்புகிறது. ''மாநில அரசு நிர்வாகம் தொடர்பான அனைத்துக் கடிதங்களும் இனி இந்தியில் மட்டுமே அனுப்பப்பட வேண்டும்; இதுபற்றி 1952 இலேயே உத்தரவு போடப்பட்டிருந்தும் இதுநாள்வரை அது கறாராகக் கடைப்பிடிக்கப்படவில்லை. இனி இது கறாராகப் பின்பற்றப்படும்'' என்று சுற்றறிக்கை கூறுகிறது. இந்த உத்தரவுக்கு மக்கள் மத்தியில் கிடைத்த வரவேற்பைக் கண்டு விழித்துக் கொண்டு மத்தியப் பிரதேச பாரதிய ஜனதா அரசும் தனது மாநிலத்தில் இத்தகைய உத்தரவொன்றை உடனே பிறப்பித்திருக்கிறது.

பேசப்பட்டிருக்கும் விஷயம், பேசியிருக்கும் நபர் ஆகிய இரண்டையுமே நாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. அந்தந்த மாநிலங்கள் தமது மாநில மக்களின் மொழியில் அரசு நிர்வாகத்தை நடத்துவது என்பதே சரியானது. அவ்வகையில், உ.பி, ம.பி, மாநிலங்கள் இந்தியை அலுவல் மொழியாக அறிவித்திருப்பதில் தவறொன்றுமில்லை. இந்த உரிமை பிற மாநில அரசுகளுக்கும் உண்டு.

ஆனால் தனது அறிவிப்புக்குக் காரணம் கூறும் வகையில் யாதவ் குறிப்பிடுபவையெல்லாம் ஓட்டுப் பொறுக்கிகளுக்கே உரிய சவடால்கள். நாட்டின் பெரும்பான்மை மக்களை - விவசாயிகளை கையெழுத்து கூடப் போடத்தெரியாத தற்குறிகளாக வைத்துக்கொண்டு, விவசாயிகள் எல்லோரும் தத்தம் தாய் மொழியில் விற்பன்னர்களாக ஆகிவிட்டதைப் போலவும், ஆங்கிலம் படிக்க வேண்டியிருப்பதால்தான் அவர்கள் முன்னேற முடியவில்லை என்றும் பேசுவது - நாகரீக மாகச் சொன்னால் - பித்தலாட்டம்; இனி அவர்கள் தாய்மொழி மட்டும் படித்தால் போதும் என்பதால், படித்து பட்டம் பெற்று அதிகாரிகளாக வர வாய்ப்பிருக்கிறது என்று சொல்வது ஏமாற்றுப் பேச்சு; அவ்வாறு அதிகாரிகளாக அவர்கள் வந்துவிட்டால் விவசாயிகளின் பிரச்சினைகள் தீர்ந்து விடும், நாடு முன்னேறிவிடும் என்பது கட்டுக்கதை.

அஜித்சிங் கோஷ்டியினால் தனது முதல்வர் நாற்காலிக்கு வர இருக்கும் அபாயத்தைத் தடுக்கவும், ஆங்கிலக் கல்வி படித்த அஜித்சிங்கை மறைமுகமாகத் தாக்கவும், நாற்காலியில் தொடர்ந்து நீடிக்க அவ்வப்போது ஏதேனும் பரபரப்பாக செய்து கொண்டிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தினாலும் தான் யாதவ் வீரம் பேசுகிறார். அதுமட்டுமல்ல; ஏற்கனவே உருதுவை இரண்டாவது அலுவல் மொழியாக அறிவித்ததையொட்டி இந்துமதவெறியர்கள் நடத்திய கலவரமும் படுகொலைகளும் வாசகர்களுக்கு நினைவிருக்கும். தற்போது யாதவின் அறிவிப்பைத் தொடர்ந்து சிவசேனா என்ற இந்துமதவெறி குண்டர் படை கிறித்தவ நிறுவனங்கள் நடத்தும் பள்ளிகளைக் குறிவைத்து தாக்கியிருக்கிறது. பயிற்று மொழியாக ஆங்கிலத்தை வைத்திருப்பவர்கள் கிறித்தவ நிறுவனங்கள் மட்டுமல்ல; இந்துமத

ஆங்கிலத்தை அழிக்கும் அண்டங் காக்கையாக முலாயம் சிங்கை சித்தரிக்கும் முதலாளித்துவப் பத்திரிக்கைகள்.






படிப்பகம்

www.padippakam.com

நிறுவனங்கள் மற்றும் அரசு நடத்தும் பள்ளிகளிலும் கூட ஆங்கிலம் பயிற்று மொழியாக வைக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறிருக்க கிறித்துவ கல்வி நிறுவனங்கள் மட்டும் குறிவைத்துத் தாக்கப்பட்டிருப்பதில் இருந்து இந்தப் பிரச்சினையை வைத்து கிறித்தவர்களுக்கு எதிராக கலவரத்தைத் தூண்ட இந்துமதவெறியர்கள் நடத்தும் சதி புலனாகிறது. குறிப்பாக முஸ்லிம்கள் உருதுமொழி பேசுகின்ற உ.பி போன்ற வட இந்திய மாநிலங்களில் இந்தி - இந்து - இந்தியா - என இம்மூன்றையும் ஒன்றாக்கி, இதை ஏற்காதவர்கள தேசவிரோதிகள் என்று ஆர்.எஸ்.எஸ் பிரச்சாரம் செய்யும் வாய்ப்பு உள்ளது.

இவை ஒருபுறமிருக்க, உ.பி,ம.பி அரசுகளின் அறிவிப்புக்கு தமிழக கல்வி அமைச்சர் அன்பழகன் கொடுத்திருக்கும் பதிலோ கோமாளித்தனத்தின் எல்லையாக இருக்கிறது. ''அவர்கள் எங்களுடன் இந்தியில் கடிதத் தொடர்பு கொண்டால் நாங்கள் ஒத்துழைக்க மாட்டோம். அவர்கள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ எங்களுக்கு கடிதம் எழுதினால் தான் நாங்கள் பதிலளிப்போம்'' என்று சட்ட சபையில் வீரவசனம் பேசியதுடன ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருந்தால்தான் இந்திய ஒருமைப்பாடு பாதுகாக்கப்படும் என்று தனது அரிய கண்டு பிடிப்பையும் வெளியிட்டுள்ளார்.

தனது மாநிலத்தில் யாதவ் இந்தியை அலுவல் மொழியாக அறிவித்திருப்பதை இந்தி வெறியாக சித்தரிக்கின்றனர் தி.மு.க.வினர். தமிழக பத்திரிக்கைகளும் இதற்கு ஒத்துப் பாடுகின்றன. உ.பியில் இந்தியை அலுவல் மொழியாக்குவது இந்திவெறியென்றால் தமிழகத்தில் தமிழை அலுவல் மொழியாக வைத்திருப்பது தமிழ் வெறியா? இவர்கள் இந்தி ஆதிக்க எதிர்ப்பாளர்கள் அல்ல; ஆங்கில மோகம் கொண்ட அடிமைகள்.

தனது தாய் மொழியின் மீது தனக்குப் பற்றிருந்தால் மட்டும் போதாது; பிறரது தாய்மொழிப் பற்றையும் மதிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

இணைப்பு மொழி, பொதுமொழி என்று பேசுபவாகள் எல்லோருமே மோசடிப் பேர்வழிகள். அரசு நிர்வாகத்திற்கு அப்படி ஒரு மொழி தேவையில்லை.

இந்தியில் வரும் கடிதங்களை இங்கே தமிழில் மொழிபெயர்த்துக் கொள்ளலாம். இங்கிருந்து தமிழில்— ஆங்கிலத்தில் அல்ல — அனுப்பப்படும் கடிதங்களை அவர்கள் இந்தியில் மொழிபெயர்த்துக் கொள்ளட்டும். கழிவறைக்கும், குப்பைத் தொட்டிக்கும் தனித்தனியே அமைச்சரும், ஆள்படையும், அதிகாரிகளும் இருக்கும் நாட்டில் பத்து மொழிபெயர்ப்பாளர்கள் வைத்துக் கொள்வதால் குடிமுழுகி விடப் போவதில்லை.

ஆங்கிலத்துக்காக அன்பழகன் வடிக்கும் கண்ணீர் போதாதென்று 'அறிவாளி'க் கூட்டமும் சேர்ந்து அழுகின்றது. ஆங்கிலம் பயிற்றுமொழியாக இல்லாமல் போனால் உயர்கல்வி, தொழில் நுட்பம், நவீன விஞ்ஞான கண்டுபிடிப்புகள் ஆகியவைகளை படிக்கவே முடியாது. நாடு பின்தங்கி விடும் என்று இவர்கள் பிரலாபிக்கிறார்கள். இவர்கள் யாதவை விடக் கேவலமான பொய்யர்கள். ஆங்கிலம் பயிற்று மொழியாக இருந்தால் முன்னெறிவிடலாம் என்றால் இத்தனை நாளில் சீனா, ஜப்பான், ரஷியா மற்றும் பிற நாடுகளைவிட இந்தியா முன்னேறியிருக்க வேண்டும். மாறாக ஆங்கிலம் படிக்காத ஜப்பான், ஜெர்மனி, பிரான்சு நாட்டாரிடம் இவர்கள் ஆங்கிலத்தில் பேசி பிச்சையெடுப்பதுதான் கண்ட பலன். தகவல் தொடர்பும், விஞ்ஞானமும் அதிவேகமாக முன்னேறி வரும் நாளில் ஆங்கிலமென்ன, எந்த மொழியிலிருந்தும் எதையும் நமது தாய்மொழிக்கு மொழிமாற்றம் செய்வது சாத்தியமே. அப்போது தான் நமது மொழியும் வளரும். இதை மறுப்பவர்களும் மறைப்பவர்களும் அறிவாளிகள் என்ற போர்வையில் உலவும் அடிமைகள் தான்.

மருதையன்

**திருச்சி பொன்மலை பணிமனையில்**

# புதிய தொழிற்சங்கம் உதயம்

சுரண்டல், அடக்குமுறை, துரோகத் தொழிற்சங்கங்கள். இதுநாள்வரை தொழிலாளிவர்க்கம் கண்டதெல்லாம் இவைகள் தான். இன்றோ சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் எதிராக, துரோகத் தொழிற்சங்கங்களை அம்பலப்படுத்தி - தனிமைப்படுத்தி புரட்சிகர தொழிற்சங்கங்கள் உருவாகி வருகின்றன, தொழிலாளர்களின் விடிவெள்ளியாக.

கடந்த ஒரு வருடமாக திருச்சி பொன்மலை ரயில்வே பணிமனையில் செயல்பட்டு வந்த தொழிலாளர் பிரச்சாரக்குழு, தொழிலாளர்களின் தினமான மே 1 முதல் ரயில்வே ஒர்க்கர்ஸ் யூனியன் (RWU) என தொழிற்சங்கமாக மலர்ந்துள்ளது. 'விடுமுறை நாளில் எந்த தொழிற்சங்கமும் பொன்மலை பணிமனையில் கூட்டம் போட்டதில்லை; எனவே கூட்டம் கூடாது - தொழிலாளர்கள் வரமாட்டார்கள்' என்ற கூற்றை பொய்யாக்கினார்கள் பொன்மலை தொழிலாளர்கள். சுமார் 400 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் புதிய தொழிற்சங்க தொடக்க விழாவில் கலந்து கொண்டனர். அடிமைச்சங்கிலியால் விலங்கிடப்பட்டுள்ள தொழிலாளர்களை, விடுவிக்கும் கோடாரியாக RWU உதயமாகியிருப்பதை மேடைக்கெதிரே வைக்கப்பட்டிருந்த ஓவியம் சித்தரித்தது.

விழாவிற்கு புதிய சங்கத்தலைவர் தோழர் நேசஇருதயம் தலைமை ஏற்று சங்கக் கொடியை ஏற்றி வைத்தார். சங்க முன்னோடிகள், தொழிலாளர்களுக்காக இறுதி வரை உண்மையுடன் - உறுதியுடன் செயலாற்றுவதாக உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். தோழர் தங்கராசு (பைப்பிங் சென்டர் ஸ்டாப் யூனியன் BHEL, சென்னை) அவர்கள் அரசியல் அதிகாரம் பெற பாட்டாளி வர்க்கம் சூளுரை ஏற்கும் நாளான மேதினத்தைப்பற்றி சிறப்புரையாற்றினார். பின்னர் தோழர் முத்து (செயலர், ம.க.இ.க.திருச்சி), தோழர் அ.மு.கலைச்சித்தன் (செயலர், உழைக்கும் மக்கள் விடுதலை முன்னணி, வடலூர்), தோழர் வாசுபதி (உதவி செயலர், BAPSU - பாப் ஸ்டாப் யூனியன் BHEL, ராணிப் பேட்டை), தோழர் சங்கையா (தபால் தந்தி ஊழியர்கள் சங்கம், அதிராம்பட்டினம்), திரு.டி.சிங்கராயர், (K.B.P.E.V., BHEL, திருச்சி) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

அதன்பிறகு, புதிய தொழிற்சங்கத்தின் சட்ட ஆலோசகராக பொறுப்பேற்றுள்ள வழக்கறிஞர் திரு.ஜி.போஜ்குமார் உரையாற்றினார். சங்கத்தின் பொதுச்செயலாளராக பொறுப்பேற்றுள்ள தோழர் முருகானந்தம் புதிய தொழிற்சங்கத்தின் அவசியத்தையும், தொழிலாளர்களின் ஒற்றுமையையும் வலியுறுத்திப் பேசினார். இறுதியாக சங்கத்தின் உதவிச் செயலாளர் தோழர் ராமசாமி நன்றியுரை கூறியுரை கூறினார்.

நிர்வாகம், தோழர் முருகானந்தத்தை 26.4.90 முதல் நிரந்தர பணிநீக்கம் செய்துள்ளது. 1988-ம் வருடம் 82 நாட்கள் அனுமதியின்றி விடுப்பு எடுத்ததும் அதற்கு சரியான காரணம் கொடுக்காததுமே (தோழர் முருகானந்தம் தரப்பில் கூறப்பட்ட காரணங்களை ஏற்கமறுத்து) நிரந்தர பணி நீக்கத்திற்குரிய காரணம் என்கிறது. முன்னணியாளர்கள் மீது எடுக்கப்படும் இதுபோன்ற நடவடிக்கைகள் மூலம் தொழிலாளர்களை புரட்சிகர அமைப்புகளில் அணிதிரளாமல் தடுக்கலாம் என கனவுகாண்கிறது நிர்வாகம்.

ஆனால் புரட்சியாளர்களின் உறுதியான போராட்டம், தெளிவான, ஊசலாட்டமில்லாத அரசியல் இவைகள் முடங்கியதாக - அழிந்ததாக சரித்திரம் இல்லை. பொன்மலை தொழிலாளர்கள் புரட்சிகர தொழிற்சங்கத்தை மலர்விக்கச் செய்து அதை நிரூபித்திருக்கிறார்கள்.

தகவல்:
ரயில்வே ஒர்க்கர்ஸ் யூனியன்,
பொன்மலை.



படிப்பகம்

www.padippakam.com



மதுரா நகரில் 'கிருஷ்ண ஜென்மபூமியை' விடுதலை செய்ய கலவரத்தில் இறங்கும் இந்து வெறியர்கள்.

# ராமஜென்ம பூமி வழியில்...

வடமாநிலங்களில் தாங்கள் வலுவான மாற்று சக்தி என்பதை தேர்தல்களில் நிரூபித்துக் காட்டியதோடு, தே.மு. அரசின் உயிர்நாடியைக் கையில் பிடித்துள்ள தைரியத்தில் பாரதீய ஜனதா இந்து வெறியர்கள் கொக்கரிக்கின்றனர். அதன் துணை அமைப்பான விசுவ இந்து பரிஷத், ராமஜென்ம பூமி விவகாரத்தைத் தொடர்ந்து, இப்போது வட இந்தியாவில் உள்ள முக்கியமான மசூதிகளைக் கைப்பற்றும் நோக்குடன் கலவரங்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இந்த நோக்கத்துடன் கடந்த ஏப்ரல் 16ம் தேதியன்று "தரம் ஜக்ரான் யாத்ரா" எனப்படும் இந்து விழிப்புணர்வு இயக்க யாத்திரையை இந்து வெறியர்கள் அயோத்தியில் இருந்து துவக்கினர். முஸ்லீம்கள் 'கைப்பற்றியுள்ள' கிருஷ்ணஜென்ம பூமி, ஜெகந்நாதர் பூமி, விசுவநாதர் பூமிகளை விடுதலை செய்ய இந்துக்களிடம் பிரச்சாரம் செய்வதே தமது நோக்கம் என்றனர். ஆனால், அயோத்தியில் அடிக்கல் நாட்ட நடந்த செங்கல் யாத்திரையைப் போலவே, இந்த யாத்திரையும் எங்கெல்லாம் சென்றதோ அங்கெல்லாம் மதக்கலவரங்கள் மூண்டன. யாத்திரை செல்லாத இடங்களிலும் அது எதிரொலித்தது. குறிப்பாக, முஸ்லீம்களை ஆத்திரமூட்டி கலவரத்தைத் தூண்டும் நோக்குடன் திட்டமிட்டே ரம்ஜான் மாதத்தில் இந்த யாத்திரையை இந்து வெறியர்கள் துவக்கினர். முஸ்லீம்கள் இந்துக்களின் புனிதத்தலங்களைக் கைப்பற்றி விட்டார்கள் என்று பொதுவாகக் குற்றம் சாட்டினால் எடுபடாது என்பதால், புராண இதிகாசங்களில் கட்டுக்கதையாக குறிப்பிடப்படும் இந்து கடவுளின் அவதாரத் தலங்களாகத் தேர்ந்தெடுத்து அதை ஆதாரமாகக் காட்டினர். அதாவது மதுராவில் கிருஷ்ணர் பிறந்த தலம்; காசியில் விசுவநாதர் அவதரித்தார்; ராமாயணத்தில் குறிப்பிடப்படும் சித்ரகூடம் என்ற ஆற்றங்கரைத் தலம் முக்கியத்துவம் வாய்ந்தது. எனவே தாங்கள் இந்து புனித தலங்களின் வழியே ஊர்வலம் நடத்துவதாக மாய்மாலம் செய்தனர்.

திட்டமிட்டபடி ஏப்ரல் 21 அன்று மதுராவில் இந்துவெறியர்கள் ஊர்வலம் நடத்தினர். "மதுராவின் மையமான பகுதியில் உள்ள 17ம் நூற்றாண்டின் மசூதி அருகே தான் கிருஷ்ணர் பிறந்தார்; அங்கிருந்த கோயிலை இடித்துவிட்டு முஸ்லீம்கள் மசூதியைக் கட்டிவிட்டனர்; அதைத் தகர்த்துவிட்டு கிருஷ்ண ஜென்மபூமியை விடுதலை செய்வோம்" என்று வெறிக் கூச்சலிட்டுக் கொண்டே ஊர்வலத்தினர் மசூதியைத் தாக்கினர். மசூதியை ஒட்டியிருந்த கடைகளுக்குத் தீவைத்தனர். கண்ணில்பட்ட முஸ்லீம்களை வெறிகொண்டு தாக்கினர். பஜ்ராங்தளம் என்ற இந்துவெறி குண்டர் படையினர், காவியுடை தரித்த சன்னியாசிகள் போல் வேடமணிந்து கொண்டு, கத்தி, திரிசூலம், வாள், கைத்துப்பாக்கிகளை ஏந்தியபடி முஸ்லீம் எதிர்ப்பு கோஷமிட்டனர். இப்பகுதியின் பாரதீய ஜனதா கட்சி எம்.எல்.ஏ.வான ரவிகாந்த்கார்க் இந்த ஊர்வலத்துக்கு உடனிருந்து ஒத்துழைத்தார். இந்துவெறி குண்டர்களிடம் தமது ஆயுதங்களை மறைத்துக் கொண்டு செல்லுமாறு அவர் கேட்டுக் கொண்டார். இதை நேரில் பார்த்த உள்ளூர் மக்கள் பத்திரிக்கையாளர்களிடம் சாட்சியம் அளித்தனர்.

மதுராவில் உள்ள கிருஷ்ணர் கோயிலுக்கு சற்றுதள்ளி முஸ்லீம்களின் இடுகாடு உள்ளது. அதனுள் புகுந்து பஜ்ராங்தள குண்டர்கள் சமாதிகளை உடைத்து நொறுக்கினர். வழியில் உள்ள சிறிய மசூதிகளில் புகுந்து சேதப்படுத்தினர். "இக்கலவரத்துக்காகவே அலிகாரிலிருந்து ஆட்களைக் கூட்டி வந்துள்ளனர். அவர்கள் மோதலுக்கான தயாரிப்புடனேயே வந்தனர். திரளான மக்கள் இங்கே தினமும் தொழுகை நடத்துகின்றனர். மசூதியைத் தாக்கினால் அது நிலைமையை விபரீதமாக்கிவிடும்" என்கிறார் மதுரா நகர போலீஸ் சூப்பிரண்டு மிஸ்ரா.

மதுரா கலவரத்திற்கு இரு நாட்கள் முன்னர் கான்பூரில் இதே 'விழிப்புணர்வு' ஊர்வலம் நடந்தது. அந்நாளில் கலவரம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் இந்து வெறியர்கள் மூட்டிய மதவெறித் தீ அடுத்த இருநாட்களில் பற்றி எரிந்தது. 5 போ மாண்டனர். ஆனாலும் கலவரம் ஓயாமல் நீடிக்கவே, ராணுவத்தைக் கொண்டு வந்து ஊரடங்கு உத்திரவு போட்டு தற்காலிகமாக அடக்கியுள்ளனர்.

இதே போல இந்து வெறியர்களின் ஊர்வலம் எங்கெல்லாம் சென்றதோ அங்கெல்லாம் - வாரணாசி, சித்ரகூடம், பிதூர், ஆக்ரா முதலான அனைத்து இடங்களிலும் கலவரம் மூண்டது. "ராமர், கிருஷ்ணர் பிறந்த இடங்களை முஸ்லீம்களிடம் இருந்து கைப்பற்றுவோம். அரசிடம் இனிமேல் கெஞ்சிக் கொண்டிருக்க மாட்டோம்; ரத்தம் சிந்தும் யுத்தத்துக்குத் தயாராகி விட்டோம்" என்று வெளிப்படையாகவே இந்து வெறியர்கள் ஊர்வலத்தில் முழக்கமிட்டனர். ஆனாலும் போலீசார் அவர்களைக் கைது செய்யவில்லை.

இந்த விழிப்புணர்வு ஊர்வலத்துக்கு முன்னரே குஜராத்தில் ஏப்ரல் முதல்வாரத்தில் மதவெறிக் கலவரம் கோரத் தாண்டவமாடியது. விசுவ இந்து பரிஷத்தின் தலைவரான கிரிஷ் பட்டேல் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து "அகமதாபாத், பரோடா வட்டாரத்தில் கலவரத் தீ பற்றிப் பரவி ஏறத்தாழ 50 உயிர்களைக் காவு கொண்டது. 200க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். ரூ.150 கோடி ரூபாய் மதிப்புடைய சொத்துக்கள் சாம்பலாகியது. ஏற்கனவே வகுப்புக் கலவரங்களால் நீறுபூத்த நெருப்பாக உள்ள மாநிலம் தான் குஜராத். அதிலும் இப்போது பாரதீய ஜனதா கூட்டணி மந்திரி சபையில் இருப்பதால் இரட்டிப்பு வெறியோடு கலவரத்தை முன்னின்று நடத்தியது. மாநில மந்திரி சபையில் தமக்கு உரிய பங்கு அளிக்காத ஜனதாதளத்துக்கு பாடம் புகட்டவும், ஜனதா தளத்துக்கு வாக்களித்த முஸ்லீம்களைப் பழிவாங்கவும் இக்கலவரத்தைச்

## நன்றி அறிவிப்பு

புதிய ஜனநாயகம் இதழ் தொடங்கிய காலம் முதல் இன்றுவரை நமது இதழுக்கு பிரேம் பிரஸ் உரிமையாளர் திரு. எம்.கே.சாமி அவர்கள் அச்சகப் பொறுப்பேற்றிருந்தார். தற்போது நீட் பிரிண்டர்ஸ் அச்சகத்தினர் பொறுப்பேற்றுள்ளனர். இதுநாள் வரை நமது இதழுக்கு அச்சகப் பொறுப்பேற்று ஒத்துழைத்ததற்கும், நமது பத்திரிக்கையின் எதிரிகள், நமக்கு மட்டுமின்றி அச்சகத்தாருக்கும் பல்வேறு இடையூறுகளைக் கொடுத்த போதிலும் உறுதியாக நம்முடன் இணைந்து நின்றதற்கும் பிரேம் பிரஸ் உரிமையாளர் திரு. எம்.கே.சாமி அவர்களுக்கும், அச்சக ஊழியர்களுக்கும் எமது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com

# எது 'ஒரிஜினல்' ராமஜென்மபூமி?
## சங்கராச்சாரி - விசுவ இந்து பரிஷத் லடாய்!

அயோத்தியின் பிரச்சினைக்குரிய வழிபாட்டுத் தலத்தின் மீது உரிமை கோரி, ஏற்கனவே விசுவ இந்து பரிஷத் தலைமையில் இந்து வெறியர்கள் ராமர் கோயில் கட்ட அடிக்கல் நாட்டியுள்ளனர். "இந்து சாஸ்திரப்படி அந்தக் கோயில் போலியானது; நான் கட்டபோவது தான் உண்மையான ராமர் கோயில்" என்று இப்போது புதிதாக கிளம்பியுள்ளார் துவாரகா மடத்து சங்கராச்சாரி. ராமஜென்ம பூமி விவகாரத்தில் ஏற்பட்டுள்ள இந்தப் புதிய திருப்பமும், பரபரப்பான அவரது கைது நடவடிக்கையும், அவரது யோக்கியதையையும் அரசியல் கள்ளக் கூட்டையும் அம்பலப்படுத்திக் காட்டி விட்டது.

இந்து மதத்தின் நான்கு குருபீடங்களில் ஒன்றான துவாரகா மடத்தின் சங்ராச்சாரியாக இருப்பவர் தான் இந்த சொரூபானந்த சரஸ்வதி. தமிழகத்தில் தி.மு.க.வின் விசுவாசியாக மதுரை ஆதீனம் இருப்பதுபோல, வடக்கே காங்கிரசின் தலைமை குருவாக இருப்பவர் இவர். ஜபல்பூர், நரசிங்கபூர், சியோனி, சிந்த்வாரா மாவட்டங்களில் இவரது ஆசிபெற்றவருக்குத் தான் காங்கிரசு கட்சி தேர்தல் டிக்கெட் கொடுக்கும். மாநில கட்சித் தலைமை அங்கீகரிக்காத ஒரு வேட்பாளர் இவரது ஆசி பெற்றால் நேரடியாக டெல்லி தலைமையின் அங்கீகாரத்தைப் பெற்றுவிட முடியும்.

காங்கிரசுக் கட்சியில் தனக்கிருக்கும் செல்வாக்கின் காரணமாக, முற்றும் துறந்த இந்த சங்கராச்சாரி மூனுசீட்டுக்காரனைப் போல லாட்டரி சூதாட்டத்தை நடத்தினார். பீடிகளில் அதன் உரிமையாளரின் போட்டோவை லேபிளாக ஒட்டி வியாபாரம் செய்வதைப் போல, இந்த சங்கராச்சாரியும் லாட்டரி சீட்டில் தனது மூஞ்சியைப் போட்டுக் கொண்டார். காங்கிரசு எம்.எல்.ஏ.க்களும் பிரமுகர்களும் சங்கராச்சாரியின் லாட்டரிக்குப் பெரிதும் உதவினர்.

சங்கராச்சாரி மூலம் இந்து ஓட்டுக்களைப் கைப்பற்றி வந்த காங்கிரசுக் கட்சி, ராமஜென்ம பூமி விவகாரத்தைத் தூண்டிவிட்டு பாரதீய ஜனதா செல்வாக்குப் பெறத் தொடங்கியதும் அரண்டு போனது. சங்கராச்சாரி மூலம் இந்து வெறியர்களின் இயக்கத்தின் திசை திருப்பி, தேர்தலில் இந்துக்களின் ஓட்டுக்களை மீண்டும் கைப்பற்ற பல வழிகளில் முயற்சி செய்தது. இதற்காகவே முன்னாள் உள்துறை அமைச்சர் பூட்டாசிங் சங்கராச்சாரியை ரகசியமாக சந்தித்துப் பேசினார். ஆனால் பாரதீய ஜனதா - விசுவ இந்து பரிஷத்தின் இந்துவெறி அலை ஓங்கி வீசியதால் சங்கராச்சாரியால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இப்போது இந்து வெறியர்கள் ராமர் கோயில் கட்ட அயோத்தியில் அடிக்கல் நாட்டிவிட்டு, தேசிய முன்னணி அரசுக்கு ஜூன் 8ந் தேதி வரை கெடுவைத்துள்ளனர். இதற்கிடையே கடந்த மாதத்தில் இவர்கள், விழிப்புணர்வு இயக்கம் நடத்தப் போவதாக அறிவித்ததும், அதற்குப் போட்டியாக ஏதாவது சாகசமாகச் செய்து பிரபலமாகி இந்துக்களை தம் பின்னே திரட்டிக் கொள்ள சங்கராச்சாரி ஒரு திட்டம் தீட்டினார்.

அதன்படி கடந்த மார்ச் மாதத்தில், ராம நவமியன்று அயோத்தியில் 'அகில இந்திய சனாதன பிரதிநிதிகள் சம்மேளனம்' என்ற அமைப்பைத் தொடங்கினார். விசுவ இந்து வெறியை கக்கினார். 'விசுவ இந்து பரிஷத்'தில் ஜைன, புத்த, ஆரிய சமாஜத்தின் பண்டாரங்களும், உருவ வழிபாட்டை ஏற்காதவர்களும் உள்ளதால் அது தூய்மையான இந்து அமைப்பு அல்ல; ராமர் கோயில்கட்ட

சங்கராச்சாரி - 'ஒரிஜினல்' ராமஜென்ம பூமியின் ஏகபோக குத்தகைதாரர்.




தவறான இடத்தில் அவர்கள் அடிக்கல் நாட்டியுள்ளனர். சரியான நாள் - நட்சத்திரத்தின் படி செய்யாமல் சாஸ்திரத்தை மீறிவிட்டனர். எனவே நாம் புதிதாக அடிக்கல் நாட்டி கோயில் கட்டுவோம்" என்று முழங்கினார். அதன்பிறகு பல இடங்களுக்கு திக்விஜயம் செய்து ஓரளவு ஆதரவைத் திரட்டிக் கொண்டு, மே 7ம் தேதியன்று கால்கோள் விழா நடைபெறும் என அறிவித்தார். வாரணாசியிலிருந்து 4 செங்கற்களை எடுத்து வந்து அதை சரயு ஆற்றில் புனித நீராட்டி அங்கிருந்து அயோத்திக்கு ஊர்வலமாகச் சென்று அடிக்கல் நாட்டுவதென்பது அவரது திட்டம். ஆனால் அதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரே உ.பி.அரசு, பொது அமைதிக்கு ஊறுவிளைவிப்பதாக குற்றம்சாட்டி அவரைக் கைது செய்தது.

தமக்குப் போட்டியாக கிளம்பியுள்ள சங்கராச்சாரியின் திட்டங்களை அறிந்திருந்த பாரதீய ஜனதா - விசுவ இந்து பரிஷத் கும்பல் அவரை ஆதரிக்கவோ எதிர்க்கவோ செய்யாமல் மௌனம் சாதித்தது. சங்கராச்சாரி கைதானதும் நாடாளுமன்றத்தில் காங்கிரசு உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். சங்கராச்சாரியின் ஆதரவாளர்கள் ஆங்காங்கே ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினர். இந்த நேரத்தில் சங்கராச்சாரியின் கைதைக் கண்டிக்காவிட்டால், இந்து சமூகத்திடம் தனிமைப்பட நேரிடும் என்பதால், விசுவ இந்து பரிஷத்தும் எதிர்ப்பு தெரிவித்தது.

ஒருபுறம், சங்கராச்சாரியைக் கைது செய்வதன்மூலம் பாரதீய ஜனதா - விசுவ இந்து பரிஷத்துக்கு தமது நன்றியைக் காட்ட முடியும்; மறுபுறம், அவரைக் கைது செய்து பிரபலமாக்குவதன் மூலம் இரண்டு கோஷ்டிகள் உருவாகியுள்ளதைக் காட்டி ராமர் கோயில் கட்டுவதைத் தள்ளிப்போட முடியும். அதன்மூலம் தே.மு. அரசு தற்காலிகமாக ஆபத்திலிருந்து தப்பிக்க முடியும். இப்படி ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் நோக்குடன்தான் சங்கராச்சாரியைக் கைது செய்து பிரபலப்படுத்தி பின்னர் அவரை தே.மு. அரசு விடுதலை செய்துள்ளது.

எப்படியோ, இந்து வெறியர்களின் குறுகிய அரசியல் சுயநலன்களால் 'ஒரிஜினல்', 'டூப்ளிகேட்' என இரண்டு ராமஜென்ம பூமிகள் உருவாகிவிட்டன. இச்சாதகமான நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு, புரட்சிகர ஜனநாயக சக்திகள் அணிதிரண்டு இந்து வெறியர்களை அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும்.

---

சாதகமாக்கிக் கொண்டது. இதோடு, ஆட்சிக்கு வந்தபின் தம்மீது நடவடிக்கை எடுத்த ஆத்திரத்தில், கள்ளச்சாராய, சூதாட்ட விடுதி மாஃபியாக்களும் ஜனதாதள அரசை நிலைகுலையச் செய்யும் நோக்குடன் கலவரத் தீயில் எண்ணெய் ஊற்றினர்.

முன் தயாரிப்புடன் ராமநவமியன்று தொடங்கிய இக்கலவரம் ஏப்ரல் 3 முதல் ஒரு வார காலத்திற்கு நீடித்தது. பின்னர் தற்காலிகமாக அடக்கியுள்ளனர்.

இன்று அதிகாரத்தில் பங்கேற்றுள்ள பாரதீய ஜனதா - இந்துவெறியர்களின் அசுர பலமும், தேசிய முன்னணி அரசின் கையாலாகாத்தனமும் இந்துவெறி பாசிச அபாயம் பரவி வருவதை மீண்டும் எச்சரிக்கின்றன.

இது, ஆரிய இனவெறி பிடித்த ஹிட்லர் யூத இனத்தவரைக் கொன்றொழித்ததைப் போல, சிறுபான்மை முஸ்லீம்களை அழித்தொழிப்பதை நோக்கமாகக் கொண்டது. பாசிச ராஜீவ் கும்பல் முற்றாக வீழ்த்தப்படாத அதேசமயம், அதைவிட சித்தாந்த ரீதியில் கட்டுப்பாடான, அமைப்பு பலமிக்க சக்தியாக வளர்ந்து வரும் இந்து வெறி பாசிசம் மிகவும் அபாயகரமானது. இன்னும் கொலைகள் விழுமுன்னே, இன்னும் குருதி கொட்டுமுன்னே, முன்னிலும் கடுமையான உறுதியுடன் பாசிச எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லாமல், மதவெறி பாசிசத்துக்கு மரண அடி கொடுக்க முடியாது என்பதையே இன்றைய நிலைமைகள் மீண்டும் உணர்த்துகின்றன.

● மனோகரன்.

படிப்பகம்

www.padippakam.com

## ஜனதா தள தலைவர் தேர்தல்:

# உட்கட்சி ஜனநாயகம் ஒரு கேலி கூத்து!

பொய்ப்பல் கட்டியவன் சிரிக்கலாம்! ஆனால் சீடை தின்ன முடியுமா? இப்படி ஒரு 'கௌரவ' பிரச்சினையில் ஜனதாதள் கட்சி மாட்டிக் கொண்டு சந்தி சிரிக்கிறது.

ஜனதாதள கட்சிக்கு தலைவரை ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தி தேர்ந்தெடுப்போம் என்று டார்தட்டினார் ராஜா வி.பி.சிங். ஒருவருக்கு ஒரு பதவி என்ற தமது தனிப்பட்ட கொள்கையின் அடிப்படையில் (இதை அவரது ஜனதாதள கட்சியே கொள்கையாக ஏற்றுக் கொள்ளவில்லை) பிரதமர் பதவியை வைத்துக் கொண்டு கட்சி தலைவர் பதவியை துறந்தார்.

கடந்த மார்ச்சு மாதத்தில் இருந்து வெற்றிடமாக இருக்கும் இப்பதவிக்கு ஏப்ரல் மாதம் 30ந் தேதி தேர்தல் என்று நாள் குறித்தனர். பழுத்த 'சோசலிச'வாதி, நிதி அமைச்சர் மதுதண்டவதே கட்சி தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். வெளித் தோற்றத்திற்கு பார்ப்பதற்கு எல்லாம் நல்லபடியாகத்தான் நடந்தது.

ஆனால், உள்ளே இருட்டறையில் ஒருவர் மற்றவர் மீது விழுந்து பிறாண்டுவது போல் கோஷ்டிகள் ஒன்று மற்றதன் மீதேறி தலைவர் பதவியை பிடிக்க முயற்சிக்க ஒரே களேபரமாகி போனது. ஆட்டம் ஆடுவதற்கு அரங்க மேடை அமைக்கும் போதே கோஷ்டிகள் குடுமியை பிடித்துக் கொண்டன.

தலைவர் பதவிக்கு ஓட்டுப் போட யார் யாருக்கு வாக்கு உரிமை கொடுக்கலாம் என்று பட்டியல் போட்டு ஆளுக்கு ஆள் தனியாக ஒரு சுற்றறிக்கையை மாநில கட்சி தலைமைகளுக்கு அனுப்பினர். கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் கட்சி தலைவரைத் தேர்ந்தெடுக்க உரிமை உண்டு என்றார், வி.பி.சிங். கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமில்லாமல் கட்சியின் மேல்சபை உறுப்பினர்களுக்கும், இந்த இரண்டு பதவிக்கு போட்டியிட்டு தோற்றவர்களுக்கும் இவ்வுரிமை உண்டு என்றார் தேவிலால்

இந்த இரண்டு சுற்றறிக்கையையும் வைத்துக் கொண்டு தலையை பிய்த்துக் கொண்டனர் மாநில தலைவர்கள். இதில் விளக்கம் கேட்டு பதில் வருவதற்குள் தேர்தல் தேதி கடந்துவிட்டது. மே மாதம் 7ம் தேதி தேர்தலை தள்ளி வைத்தனர். இப்படி ஒருபுறம் நாடகமாடிக் கொண்டே சந்தடி செய்யாமல் ஹெக்டேவை போட்டியின்றி கட்சி தலைவராக்கிவிட தன் ஆதரவாளர்களின் காதை கடித்தார் வி.பி.சிங்.

இச்செய்தியை மோப்பம் பிடித்த நரி சந்திரசேகர் சிலிர்த்தெழுந்தார். தேவிலாலை பிடித்து, ஹெக்டேவின் எதிரி கர்நாடாக மாநில முன்னாள் முதன் மந்திரி எஸ்.ஆர். பொம்மையை கட்சி தலைவர் பதவிக்கு போட்டி வேட்பாளராக நிறுத்தினார்

ஹெக்டேவுக்கு எதிரான கோஷ்டி ரகசியமாக உருவானவுடன் தானும் ரகசியமான பின்வாங்கிக் கொண்டார், வி.பி.சிங். இதன் நடுவில் பொம்மையை தான் ஆதரிப்பதற்கான 'கோட்பாடு' ரீதியான விளக்கம் கொடுத்து, வி.பி.சிங்குக்கு கடிவாளம் கட்டினார், தேவிலால்.

கட்சியை (ஜனதாதள) தென்னாட்டில் பலப்படுத்த அங்கிருந்துதான் தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்றார். தனக்குச் சாதகமான உ.பி. மாநிலத்தில் இருந்து ஆளை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பையும் இழந்து வி.பி.சிங் தென்னாட்டை நோக்கி ஓடிவந்தார். ஆந்திர எம்.பி.யும், ஜனதாதள கட்சியின் அதிகாரப்பூர்வ பிரதிநிதியுமான ஜெய்பால் ரெட்டியை தனது கோஷ்டியின் சார்பாக நிறுத்தினார்.




திடீரென தேவிலால் வி.பி.சிங்கின் சகோதரர் சத்பஷ்சிங் என்பவரை போட்டியின்றி கட்சியின் தலைவராக்கிவிடலாம் என்றார். அதிகார பூர்வமாக வேட்பாளராகவும் அவர் நின்றார். இதற்கிடையில் ராம்தன் என்ற எம்.பி. வி.பி.சிங்கின் மனைவி காயத்திரி தேவியையே கட்சியின் தலைவராக்கி விடலாம் என்று பரிந்துரைத்தார். வி.பி.சிங் தேவிலால் பாணி அரசியலில் விழாமல் தன்னை சுதாரித்துக் கொண்டார்

நிழல் போர் முடிந்து நிஜ யுத்தம் துவங்கியது. பொம்மையை தன் மகன் அரியானா முதல்வர் ஓம் பிரகாஷ் சௌதாலவிடம் ஒப்படைத்துவிட்டு அரசு சார்பில் சீனப் பயணம் போனார், தேவிலால். தன்னுடைய ஆதரவாளர்கள் ஜெயபால் ரெட்டியை எப்படியும் வெற்றிபெற வைக்க வேண்டும் என்று அவரை தம் சீடரான ஒரிசா முதல்வர் பிஜு பட்நாயக் வசம் ஒப்படைத்தார், வி.பி.சிங்.

சௌதாலா, பொம்மையை டில்லி - அரியானா பவனுக்கு கூப்பிட்டு 'சாணக்கிய' வியூகங்களை வகுத்துக் கொடுத்தார். பீகிங்கியிலிருந்து 50 க்கும் மேற்பட்ட நேரடி போன் போட்டு, உ.பி., ம.பி., பீகார் முதல்வர்களுக்கும் தம் மகனுக்கும் தேவிலால் ஆலோசனை வழங்கியதாக முதலாளித்துவ பத்திரிக்கைகள் கூறுகின்றன.

கட்சி தலைவர் பதவியை யார் கைப்பற்றுவார்களோ, அவர்கள் ஆதரவாளர்கள் தான் ஆட்சியிலும் தலைவர்களாக மந்திரிகளாக நீடிக்க முடியும்! பிரதமர் பதவி உட்பட, உ.பி. பீகார், முதன்மந்திரி பதவிகளும் கட்சி தலைவர் பதவி வெற்றியோடு பின்னி பிணைந்திருந்தது. தேவிலால் வெற்றி பெற்றால் பழையவர்கள் நீடிப்பார்கள்! வி.பி.சிங் வெற்றி பெற்றால் நீடிப்பவர்கள் கவிழ்வார்கள்.

தேர்தல் நாளான மே 7ந்தேதி நெருங்க நெருங்க இரண்டாம் மட்ட தலைவர்கள், வெடிக்கபோகும் பூகம்பத்தை கவலையோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். திடீரென சமரச பேரங்கள் பேசப்பட்டன. பொம்மை போட்டியிலிருந்து விலகினால், அவருக்கு ஆட்சியின் உயர்மட்ட அமைப்பான அரசியல் விவகார கமிட்டி பொது செயலர் பதவி கொடுக்கப்படும் என்றனர்.

பேரம் நல்லபடியாக முடிந்து விடும் என்ற நம்பிக்கையில் 7ந்தேதி தேர்தலுக்கான எந்த வேலையும் நடக்கவில்லை. தேர்தலுக்கான பொறுப்பாளர்கள் கூட மாநிலங்களுக்கு செல்லவில்லை. கடைசி நாள்வரை டெல்லியிலேயே அரட்டை அடித்துக்கொண்டிருந்தனர். சீனத்திலிருந்த தேவிலால் இந்த பேரத்தை ஒத்துக்கொள்ளவில்லை. வேண்டுமானால் தேர்தலை வேறுவிதமாக நடத்தலாம் என்றார். ''ஓட்டுப் போடுபவர்களின் கையில் ஒரு துண்டு சீட்டை கொடுத்து விடலாம். அவர்கள் விரும்பியவரின்



படிப்பகம்

www.padippakam.com

பெயரை அதில் எழுதிக் கொடுக்கட்டும்'' என்று தேர்தலை நேரடியாக சந்திக்க பயப்படும் வி.பி.சிங்கை நக்கல் செய்தார். கடைசிவரையில் முடிவு எதுவும் காணமுடியாமல் மீண்டும் அனைவரும் ஒன்று சேர்ந்து கோமாளித்தனமாக தேர்தல் தேதியை தள்ளி வைத்தனர்.

இதில் விலா நோக வைக்கும் சிரிப்பு என்ன வேன்றால், இவ்வளவு குடுமிபிடி சண்டைக்கு பிறகு தேர்ந்தெடுக்கப்படும் கட்சி தலைவர், வரும் அக்டோபர் மாதம் வரையில் தான் பதவியில் இருக்க தகுதியுண்டு! அக்டோடபர் மாதத்தில் முறைப்படி கட்சியின் அடிமட்டத்திலிருந்து தேர்தல் நடத்தி தலைவரை தேர்ந்தெடுப்பது என்று முடிவு! இடைக்கால ஏற்பாட்டிற்கு, தற்காலிக தலைவரை தேர்ந்தெடுப்பதற்கு இவ்வளவு சதிவலை என்றால் நிரந்தர தலைவரை கண்டுபிடிக்க இந்தியாவை சதி, சூழ்ச்சி, மோசடியில் மூழ்கடித்துவிடுவார்கள் போலிருக்கிறது!



பொம்மை; தேவிலாலின் துருப்புச்சீட்டு



ஜெய்பால் ரெட்டி; வி.பி.சிங்கின் பினாமி.

அரசியல் நாகரீகம், ஜனநாயக முதிர்ச்சி என்று பிலுக்குதனம் செய்யும் வி.பி.சிங் கட்சியின் போக்கியதை இதுதான். இந்தியாவின் தலைவிதியையே மாற்றிய மாபெரும் தலைவர்கள், கடுமையான சூழ்நிலையில் அனைவரையும் அரவனைத்து கட்சியை கட்டி ஆட்சியைப் பிடித்தவர்கள், தியாக சீலர்கள், நிதானம் மிகுந்தவர்கள், பொறுமை சாலிகள், அதே நேரத்தில் அசைந்து கொடுக்காத ஜனநாயக கொள்கை பிடிப்புள்ளவர்கள் என்று ஒப்பனையெல்லாம் களைந்து மூக்கு வெளுத்து போனார்கள்.

வெளி உலகுக்கு எப்போதாவது ஜனநாயக நாடகம் போட வேண்டி வரும்போது அதையும் தங்களது வழக்கமான மாஃபியா கும்பல் பாணியிலேயே அரங்கேற்றுகின்றனர். ஒரு நாள் கூத்துக்கு மீசை வைக்கும் போது இப்படி சந்தி சிரித்து விடுகிறது

மறுபுறம் 17 ஆண்டுகாலமாக உட்கட்சி தேர்தல் நடத்தாமலேயே அப்பட்டமாக கொடுங்கோல் மன்னர்கள் பாணியிலான கட்சி நடத்துகிறது காங்கிரசு அதன் கீழிருந்து அதிகாரத்தை சுவைக்கும் அடிமைகளான வாழப்பாடி, மூப்பனார் கூட்டம் ஜனநாயகத்தை பற்றி வாய்கிழிய பேசுவதுதான், இந்திய 'ஜனநாயக'த்தின் சிறப்பம்சம்! எங்காவது பொது தேர்தலில் மண்ணை கவ்வினால் எதிர் கோஷ்டி முணுமுணுத்தால் அவர்களை மிரட்ட உட்கட்சி தேர்தலைப் பற்றி காங்கிரசு பேசும். '87 ஆம் ஆண்டு இப்படித்தான் உட்கட்சி தேர்தலுக்கு நாள் கூட குறித்து சவடால் அடித்தார் ராஜீவ்

உடனே அதிகாரத்திலிருந்த மாநில தலைவர்கள் அனைவரும் வேட்பாளர் பட்டியலையே கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கையில் சேர்த்து விட்ட கதை வெளியில் வந்தது. 25 ரூபாயை கட்டினால் 25 பேர் மொத்தமாக யார் வேண்டுமானாலும் காங்கிரசு கட்சி உறுப்பினராகலாம்! பிறகென்ன... பத்தே நாளில் லட்சக்கணக்கான உறுப்பினர்களை சேர்த்துவிட்டு கட்சி தேர்தலை சந்திக்க தயாராக இருந்தனர் காங்கிரசு தலைவர்கள்! பிறகு ஒருவருக்கொருவர் குடுமியை பிடித்துக் கொண்டு தேர்தலை தள்ளி வைத்து விட்டனர்.

திரும்பவும் சென்ற மாதம், இந்த ஆண்டு இறுதியில் உட்கட்சி தேர்தலை நடத்தி விடுவது என்று முடிவெடுத்திருக்கிறார்கள். உறுப்பினர்கள் சேர்ப்பில் பழைய மோசடி நிகழாமலிருக்க புகைப்படத்துடன் கூடிய உறுப்பினர் அடையாள அட்டை வழங்கப் போகிறார்கள்! நவீன முறையில் மோசடியின் தரத்தை உயர்த்தி இருக்கிறார்கள்; வேறொன்றும் நடக்கப் போவது இல்லை. இந்த லட்சணத்தில் உலகத்திலேயே தொன்மை வாய்ந்த 105 ஆண்டு வயதுடைய கட்சி, 2,44,32,000 உறுப்பினர்கள் கொண்ட மிகப்பெரும் கட்சி என்ற அலட்டல் வேறு

**ஜனதாதள கட்சித் தலைவர் பதவிக்கு சுயேட்சையாக போட்டியிடும் அக்கட்சியின் பீகார் எம்.பி. ஹுக்கும்தேவ் யாதவ். "பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடிகளுக்கு பிரதிநிதித்துவம் தராமல் உயர்சாதி பெரிய நிலப்பிரபுக்கள் ஒரு சிலரே கட்சியின் தலைமையை கைப்பற்றிக் கொண்டிருக்கிறார்கள்" என்று வெடிக்கிறார்.**



காங்கிரசு, தேசிய கட்சிகளின் சர்வாதிகார போக்கை தோலுரித்து மாநில மக்களின் உரிமைகளை மீட்டெடுக்க வந்த பிராந்தியக் கட்சிகளின் ஜனநாயகமே அலாதியானது! ஆந்திர தெலுங்குதேச கட்சியின் தேர்தலின் போது மூடிய உறைகளில் தேர்ந்தெடுக்க வேண்டியவர்களின் பெயர்கள் வரும். ஓட்டுப் போடவந்த உறுப்பினர்கள் எல்லாம், அந்த பெயர்கள் வாசித்தவுடன் கைதட்டி வாழ்த்துக்கள் தெரிவித்துவிட்டு போய்விடவேண்டும். தேர்தல் முடிந்தது!

தமிழ்நாட்டு தி.மு.க பாணி உட்கட்சி தேர்தல் சற்று வித்தியாசமானது. கலைஞர், தலைவராக்க யாரை விரும்புகிறார் என்று 'நட்பு' முறையில் தெரிவிக்க தேர்தலின் முன் ஒரு குழு 'தற்செயலாக' வந்தது போல் அடிக்கடி வரும். கலைஞரின் விருப்பமும் கட்சி தேர்தல் முடிவும் பெரும்பாலும் ஒன்றாக இருக்கும்.

கட்சியில் முறைப்படி ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தினால் கட்சி கையை விட்டே போய்விடும் என்ற நிலைமைதான் இப்போது ஓட்டுக்கட்சி தலைவர்களின் பீதியாக இருக்கிறது. எப்படி நாடாளுமன்ற ஜனநாயகம் துப்பாக்கியும் பணமூட்டையும் இருந்தால்தான் உயிர் வாழும் என்ற நிலையில் இருக்கிறதோ அதே போல்தான் இந்த ஜனநாயகத்தின் செல்லக் குழந்தைகளான ஓட்டுச்சீட்டு அரசியல் கட்சிகளும் விகாரமாக சீரழிந்து கிடக்கின்றன. கேடிகள், கிரிமினல்கள், பொறுக்கிகள், பிழைப்புவாதிகள் ஒப்பந்த அடிப்படையில் ஒன்றுகூடி தொழில் நடத்திவிட்டு கலைவதற்கான கூடாரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

● குணசேகரன்.



படிப்பகம்

www.padippakam.com

# கரையான் புற்றெடுத்தது கருநாகம் விரட்டுகிறது!




ஈழத் தமிழர்களானாலும் சரி; மலையகத் தமிழர்களானாலும் சரி - இலங்கை வாழ் தமிழர்கள் எவரையும் சிங்கள இனவெறி அரசு நிம்மதியாய் வாழவிடப் போவதில்லை என்பதை மறுபடியும் காட்டத் துவங்கிவிட்டது. ஈழவிடுதலைப் புலிகளுடன் ஒருவித சமர சத்தை ஈட்டிய பிறகு. அடுத்துத் தனது தாக்குதல் முனையை மலைய கத் தமிழர்களின் பக்கம் திருப்பியிருக்கிறது. தொண்டமான் துரோகக் கும்பல் ஏற்படுத்தியிந்த பிரமையில் சற்று இளைப்பாறி வந்த மலைய கத் தமிழர்களுக்கு இந்த வெளியேற்ற அறிவிப்பு அதிர்ச்சியூட்டி இருக்கிறது. அவர்கள் இந்தியா திரும்ப மறுத்தால் அங்கு தற்காலிக மாகத் தந்துள்ள கூலிவேலைகளையும் பிடுங்கி, இலங்கைக் குடிக ளுக்குத் தருவதாக ஈவிரக்கமின்றி மிரட்டுகிறது. இலங்கை அரசு.

1987, ஜுலை 29. ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தம் ஈழத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, மலையகத் தமிழர்களுக்கும் எதிரான சதியாக இருந்தது. அதன்படி ஈழத் தமிழ் அகதிகளையும் இந்தியப் பூர்வ குடிகளான மலையகத் தமிழர்களையும் ஏக காலத்தில் பரிமா றிக் கொள்ள வேண்டும். அதைக் காட்டித்தான் மலையகத் தமிழர் களை விரட்டும் வேலையில் இறங்கிவிட்டது. பிரேமதாசா கும்பல். இன்னும் ஒரு லட்சம் ஈழத் தமிழ் அகதிகள் இந்தியாவில் உள்ளனர்; அவர்களைத் திருப்பி அனுப்பிய பிறகே, இந்தியப் பூர்வகுடி தமிழர் களை ஏற்கமுடியும் என்று இந்திய அரசு பேரம் பேசுகிறது.

''ஈழத் தமிழ் அகதிகள் பிரச்சினை வெறும் சாக்குத்தான். அவர் கள் தாயகம் திரும்பினால் எப்போதும் ஏற்கத் தயார். ஆனால் அதைக் காரணங்காட்டி இந்தியப் பூர்வகுடித் தமிழர்கள் குடிபெயர்வ தைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போக முடியாது'' என்று திமி ரோடு பேசுகிறது இலங்கை அரசு. மலையகத் தோட்டத் தொழிலாளர் களாக உள்ள தமிழர்களை வெளியேற்றினால், அங்கே சிங்களவர்க ளைக் குடியமர்த்தி வேலை கொடுக்கலாம்; ஈழத் தமிழ் அகதிகளோ நாடு திரும்ப விரும்ப மாட்டார்கள்; வந்தாலும் குடியமர்த்தி வேலை தரவேண்டிய நிர்பந்தம் - கட்டுப்பாடு எதுவுமில்லை என்று அது நினைக்கிறது.

## தமிழர்களின் குடியேற்றமும் அடிமை அவல வாழ்வும்

உலகின் பல பகுதிகள் இன்னமும் இருண்டு கிடந்த போது தமிழர்கள் கடும் உழைப்பாளிகளாக, ஆனால் அரசியல் விழிப்பு ணர்வு அற்றவர்களாக இருந்தார்கள். இவைதான் இவர்களது குற்றங் கள். இதற்காக கறுப்பின மக்களுக்கு அடுத்து இன்னமும் அவலங்க ளும் துன்பங்களும், அனுபவிக்கிறார்கள். கறுப்பின மக்களைப் போல சந்தைகளிலே விற்கப்படவில்லை; மற்றபடி அடிமைகளா கவே நடத்தப்படுகிறார்கள்!

ஏறக்குறைய 150 ஆண்டுகளுக்கு முன்பே, ஆசிய - ஆப்பிரிக் கக் காலனிகளைக் கொள்ளையிடுவதற்காக இந்தியத் தமிழர்களைக் கொத்தடிமைகளாக்கிக் கொண்டு போய் குடியமர்த்தினார்கள். ஆப் பிரிக்கச் சுரங்கங்களிலும், பர்மா - மலேயா ரப்பர்த் தோட்டங்களி லும், ஜாவா, சுமத்திரா, பாலி, பாப்பாகினியா ஆகிய தூரக்கிழக்குக் கரும்புத் தோட்டங்களிலும், இலங்கைத் தேயிலைத் தோட்டங்களி லும் இரத்தமும் வேர்வையும் சிந்தி செல்வங் கொழிக்கச் செய்தார் கள். இதுதான் மலையகத் தமிழர்களின் வரலாறு. 1843 - 45 ஆகிய மூன்றாண்டுகளில் 1,69,000 இந்தியத் தமிழர்களை மலையகத்திலே குடியமர்த்தி, காடு திருத்தி தேயிலை, காபி, ரப்பர்த் தோட்டங்களை ஏற்படுத்தினார்கள், காலனியவாதிகள். அந்த மண்ணிலேயே உழைத்துப் பல்கி பெருகிய தமிழர்கள் 1964 கணக்கெடுப்பின்படி 9,75,000 பேர். 1948-இல் இலங்கையின் தரகு அதிகார முதலாளி கள், நிலப்பிரபுக்களிடம் ஆட்சி மாற்றம் செய்து கொடுத்து விட்டுப் போனார்கள், ஆங்கிலேயே ஏகாதிபத்திய வாதிகள். உடனடியாகவே ''இலங்கை குடியுரிமைச் சட்டம்'' நிறைவேற்றி மலையகத் தமிழர்கள் அனைவரின் குடியுரிமையையும், தேசிய உரிமையையும் பறிக்கப் பட்டு நாடற்றவர்களாக்கப்பட்டனர்.

''ஏறக்குறைய அனைவருமே அந்த மண்ணில் பிறந்தவர்கள்; தமது வாழ்நாள் முழுவதும் அங்கேயே வாழ்ந்தவர்கள்; வேறு எங் கேயும் போயிராதவர்கள்; வேறு எந்த நாட்டுக்கும் விசுவாசம் காட் டாதவர்கள்; அவர்களை அவமதிக்கும் அளவே பங்கு கிடைத்த போதும் அந்த நாட்டின் செல்வத்தைப் படைப்பதற்கு அளவற்ற பங்களிப்பு செய்த ஒரு பிரிவு மக்களுக்கு அந்த நாட்டின் குடியுரிமை என்ற அடிப்படை உரிமையைத் தான் தோன்றித் தனமாகப் பறிப்பது தான் இலங்கையின் குடியுரிமைச் சட்டம்'' என்று பிரிட்டிஷ் 'நீதி'யா ளர்களே கூறினார்கள். ஆனால், இனவெறியில் மூழ்கியுள்ள சிங்கள அரசு 1949-இல் இன்னொரு சட்டம் போட்டு மலையகத் தமிழர்க ளின் வோட்டுரிமையையும் பறித்தது.

## மலையகத் தமிழர் உரிமைகளைத் தாரை வார்க்கும் ஒப்பந்தங்கள்

இந்தியாவின் ஆதிக்க - விரிவாக்க நோக்கங்களைக் குறி வைத்து மலையகத் தமிழர்களின் உரிமைகளைத் தாரை வார்க்கும் ஒப்பந்தங்களை அடுத்தடுத்துக் கையெழுத்திட்டார்கள், இந்தியப் பிரதமர்கள். 1954-ல் ஏற்பட்ட நேரு - ஜான் கோடிலே வாலா ஒப்பந்தப்படி இந்தியப் பூர்வகுடிகள் விரும்பும் நாட்டின் குடியுரிமை பெறலாம். ஆனால் இது நடைமுறைப்படுத்தப்படவே இல்லை. மலையகத் தமிழர்களின் குடியுரிமை கோரிக்கைகள் நிராகரிக்கப் பட்டு நாடற்றவர்களாகவே நடத்தப்பட்டனர். நேரு அரசும் ஒப்பந் தத்தை அமுலாக்கும்படி நிர்பந்திக்கவில்லை.

1964-இல் லால்பகதூர் சாஸ்திரி பிரதமரான மூன்றாம் மாதம் கைரோவில் இலங்கைப் பிரதமர் சிரிமாவைச் சந்தித்தார். கையோடு டெல்லிக்குக் கூட்டி வந்து 10 நாட்கள் விருந்தாளியாக வைத்து, அவசர அவசரமாக ஓர் ஒப்பந்தம் போட்டார். தமிழக அரசையோ, மலையகத் தமிழர் பிரதிநிதிகளையோ கலந்து கொள்ளவே இல்லை. 1964 சாஸ்திரி - சிரிமா ஒப்பந்தப்படி மொத்தம் 9,75,000 பேரில் 5,25,000 பேர் இந்தியாவுக்குக் குடிபெயர்த்துவது; 3,00,000 பேருக்கு இலங்கை குடியுரிமை அளிப்பது; 1,50,000 பேர் நிர்க்கதி யாவது என்று முடிவானது. 1974-இல் மீண்டும் தான் தோன்றித்தன மாக இந்திரா - சிரிமா ஒப்பந்தம் கையெழுத்தானது; அதன்படி மேலும் 75,000 பேரை இந்தியா ஏற்கவேண்டும் என்றன. ஒப்பந்தக் கெடு 15 ஆண்டுகள். இதுவரை 4,50,000 பேர் குடிபெயர்ந்துள்ள னர். ஈழப் போர்கள் காரணமாக கப்பல் போக்குவரத்துத் தடைப டவே குடிபெயர்வது நின்றுபோனது.

ஒப்பந்தப்படி இன்னமும் 2,25,000 பேரை நாடு கடத்தப் போகி றார்கள். ஆசை வார்த்தைகளைக் கூறியும், அடுத்தடுத்து இனப்படு கொலைகளை நடத்தியும் இந்தியாவுக்கு விரட்டப்பட்ட மலையகத் தமிழ் அகதிகளின் அவல நிலை பற்றிக் கேள்விப்பட்டவர்கள் இங்கே வர மறுக்கிறார்கள். இந்த நிலையில்தான் உடனடியாக மேலும் ஒரு லட்சம் பேரை குடிபெயர்க்க ராஜீவ் ஒப்புக்கொண்டு 1987-இல் கையெழுத்திட்டார். மலையகத் தமிழர்கள் எவருக்கும் குடியுரிமை தர மறுத்து வந்த சிங்கள அரசு, ஈழவிடுதலைப் போராட் டத்துக்கு எதிராக அவர்களை நிறுத்தும் நோக்கத்தோடு, ஒப்பந்தங்க ளின்படி குடியுரிமை வழங்குவதாக கடந்த ஆண்டு அறிவித்தது. எஞ்சிய மக்களை விரட்டுவதற்கு இப்போது முயலுகிறது.

பின்தங்கிய நாடான இலங்கையில் மலையகத் தமிழர்களே, மிக மிகப் பின்தங்கிய சமுதாயமாக அவல வாழ்வு தான் வாழ்கிறார்கள். உலகிலேயே மிகப் பெரிய தேசியமயமாக்கப்பட்ட தொழில் துறை யானாலும் கொத்தடிமைகள், கூலிகளாகவே நடத்தப்படுகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

லையன், காம்பறா ஆகிய கொட்டடிகளில், மருத்துவ, கல்வி வசதியின்றி, மண்சரிவு - கொள்ளை நோய்கள் - பஞ்சம் பசியால் மரண அவதியில் வாழ்கிறார்கள். இவற்றோடு ''கள்ளத்தோணி'', ''தோட்டக்காட்டான்'' என்று ஏசி இனவெறிப் படுகொலைகளுக்கும் பலியாகிறார்கள்.

இவ்வளவு கொடுமைகள் தொடர்ந்த போதும் பழக்கப்பட்ட தொழில் சூழலில் குறைந்தபட்ச நம்பிக்கையோடு அங்கேயே வாழ விரும்புகிறார்கள், மலையக மக்கள். அவர்களின் இளைய தலைமுறையே, பழைய துரோகிகளை வெறுத்து புதிய அமைப்புகளில் திரண்டு, வேலைவாய்ப்புகள், குடியுரிமைகள், காணிகள், வீடுகள், கோரிப் பெறுகிறார்கள்.

இந்தியாவுக்குக் குடிபெயர்ந்த அகதிகளின் வாழ்வோ இன்னும் கொடியதாக உள்ளது. பொட்டல்காடுகளில் அமைக்கப்படும் அகதிகள் முகாம்களில் கிடந்து சாவதைவிட மேலானதென்று கருதி கொத்தடிமைகள் ஆகிறார்கள். அவர்களுக்குத் தரப்படும் நிவாரணத் தொகையை அதிகாரிகளும், தரகர்களும் விழுங்கி விடுகிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் தருவதாகக் கூறி அரசுக் கடன்கள் பெறும் ஆலை முதலாளிகளும் மோசடிகள் செய்கிறார்கள். ''புகுந்தகமும்'' விரட்டி ''தாயக''மும் கைவிட்டு நிர்கதியாகக் கிடந்து தவிக்கிறார்கள்.

நாம் தமிழர்கள், நமது உடலில் ஓடும் ரத்தம் தமிழ் ரத்தம் என்பது உண்மையானால் நமது ரத்தம் கொதிக்க வேண்டும். தமிழ்ச் சமுதாயத்துக்கு எதிராக இழைக்கப்படும் இந்த அநீதிகள் - அக்கிரமங்களுக்குக் காரணமானவர்களைப் பழிவாங்கியே தீருவோம் என்று சபதமேற்க வேண்டும். உழைக்கும் மக்கள் அனைவருக்கும் தான் இப்படி அநீதிகள், அக்கிரமங்கள் இழைக்கப்படுகின்றன. ஆகவே புரட்சியே தீர்வு என்று பொதுவாகக் கூறிக் கொண்டிருக்க முடியாது. இங்கே வர்க்க ரீதியாக மட்டுமின்றி, இன ரீதியாகவும் ஒடுக்குமுறைகள், உரிமை பறிப்புகள் நடக்கின்றன. ஆகவே இரட்டிப்பு ஆத்திரம், கோபத்தோடு பொங்கியெழ வேண்டியது தமிழர்களுக்கு அவசியமாகிறது. 'குடியுரிமையைப் பறிக்காதே! வளமாக்கிய பூமியில் வாழவும் உரிமை உண்டு!' என்று போராடும் மலையகத் தமிழர்களோடு சேர்ந்து குரல் கொடுப்போம்; போராடுவோம்.

● கரீம்.

# கொலையாளிகள் சாதிமத வெறிக்கு வித்திடுகிறார்கள்

கூடும் உழைப்பாளி 50 வயது நிரம்பிய முத்துவீரன். தனது ஊரிலுள்ள சமூக நலக்காடுகளை பராமரிக்க பஞ்சாயத்தால் வேலைக்கு அமர்த்தப்பட்டு பணிபுரிந்து வந்தார். கடந்த 6 மாதமாக இவருக்கு பஞ்சாயத்து சம்பளம் வழங்காதது சம்பந்தமாகவும், சமூக நல காடுகளின் மரங்களை பஞ்சாயத்து தலைவர் அனுபவித்து வருவது சம்பந்தமாகவும் எதிர்த்து குரல் கொடுத்து வந்தார். இதனால் பஞ்சாயத்து தலைவர் பகவத்சிங்கிற்கும் இவருக்கும் நெடுநாள் பகை இருந்து வந்தது.

15.4.90 அன்று பகவத்சிங் மனைக்கு பக்கத்திலுள்ள பாண்டுரங்கன் மனைக்கு வேலி அடைக்க கூலி வேலைக்குச் சென்றார் முத்துவீரன். பாண்டுரங்கனும், பகவத்சிங்கும் ஒரே சாதிக்காரர்களானாலும் பகையாளிகள். பாண்டுரங்கன் மனையில் வேலி அடைத்தால் பகவத்சிங் மனைக்கு போக வர வழி இல்லாமல் போய்விடும்; பகவத்சிங் கும்பல் சண்டைக்கு வந்து விபரீதம் நடக்கும் என்பது தெரிந்தே திட்டமிட்டு இவ்வேலைக்கு முத்துவீரனை அமர்த்தினார் பாண்டுரங்கன்.

பாண்டுரங்கன் எதிர்பார்த்தபடியே பகவத்சிங்கின் சித்தப்பா மகன் திருவள்ளுவன் சண்டைக்கு வர -வேலி போடுபவர் முத்துவீரனாக இருக்கவே - பாண்டுரங்கனைவிட முத்துவீரன் முக்கிய எதிரியாக மாறிவிட்டார். திருவள்ளுவன் அரிவாளை எடுத்துக் கொண்டு வெட்டவரவே கற்களை எறிந்தே தன்னை காப்பாற்றிக் கொண்டார் முத்துவீரன். பின்னர் மக்கள் கூடிவிடவே, ''பறப்பயலுக்கு இவ்வளவு திமிறா? இன்றைக்கு உன்னை கொல்லாமல் விட மாட்டேன்'' என கத்திவிட்டு போனான் திருவள்ளுவன்.

அன்று மதியம் ஊர் சிவன் கோவிலில் வெற்றிலை பாக்கு போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தார் முத்துவீரன். அவரது பையில் நகை திருப்புவதற்கான 300 ரூ.-பணம் இருந்தது. திட்டமிட்டு இவரை கண்காணித்திருந்த திருவள்ளுவனும், ஸ்ரீதரும் இவரது பையை எடுத்துக் கொண்டு ஓட, பையை பிடுங்குவதற்காக அவர்களை பிடிக்க ஓடியவரை மடக்கி கோவிலின் பின்புறம் திருவள்ளுவனும் அவனது கூட்டாளிகளும் கொன்றிருக்கிறார்கள். இருட்டும் வரை பிணத்தை மறைவாக வைத்திருந்துவிட்டு பின் கோயிலில் முன்புறம் கொண்டு வந்து போட்டு விட்டு பேசய்விட்டனர்.

நடந்தது தஞ்சை மாவட்டம், திருவையாறு தாலுக்கா கண்டியூர் கிராமத்தில். சுற்று வட்டார மக்கள் அனைவரும் இதை அறிவர். மறுநாள் மோப்ப நாயைக் கொண்டு வந்து நாடகமாடியது போலீசு. திருவள்ளுவன் வீட்டையும், தோட்டத்தையும் சுற்றி வந்து வேட்டி ஒன்றை, அவர்களது மோப்ப நாயே எடுத்துக் கொடுத்தும் சாட்சியங்கள் இல்லை என போலீசார் சாக்கு சொல்கிறார்கள். முத்துவீரன் மனைவி - உறவினர் - ஊரார் ஆகியோர் சேர்ந்து மாவட்ட போலீசு அதிகாரிவரை மனுக்கொடுத்தும் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. மாறாக பகவத்சிங் தனது செல்வாக்கால் - பணபலத்தால் போலீசை கைக்குள் போட்டுக் கொண்டு சாட்சியங்களையும், தடயங்களையும் மறைத்து விட்டான். பிரேத பரிசோதனை முடிவை தனக்கு சாதகமாக மாற்ற முயற்சித்து வருகிறான்.

கொலைகாரர்களை அம்பலப்படுத்தியும் கைது செய்யக் கோரியும் விவசாயிகள் விடுதலை முன்னணியினர் சுற்று வட்டாரங்களில் தெருமுனைப் பிரச்சாரம் செய்தனர்; துண்டு பிரசுரம் வெளியிட்டனர். எதிர்நடவடிக்கையாக கொலைகாரர்களும் இந்து முன்னணி பெயரில் இரண்டு துண்டு பிரசுரங்கள் வெளியிட்டுள்ளார்கள். பிரசுரங்களை மொத்தமாக கொண்டுவந்து பேருந்திலும், இரவில் பூணூலிட்ட சிறுவன் மூலம் வீடு வீடாகவும் போட்டுள்ளனர்.



ஒரு பிரசுரத்தில் 'O.R.A. பாருக், அயூப்கான் மற்றும் தங்கையன் ஆகியோரும், வி.வி.மு. வினரும் தான் கொலையாளிகள்; நாங்கள் இல்லை' எனவும்; ஒரு பிரசுரத்தில் 'இயற்கையாக இறந்த முத்துவீரனை நாங்கள்தான் கொலை செய்ததாக மேற்படி நபர்கள் வதந்தியை பரப்புகிறார்கள்' எனவும் முரண்பாடாக அச்சிட்டு தாங்கள்தான் கொலைகாரர்கள் என நிரூபித்துக் கொண்டார்கள்.

பகவத்சிங், திருவள்ளுவன், ஸ்ரீதர் ஆகியோர் இந்து முன்னணியைச் சேர்ந்தவர்கள். எவ்வித முகாந்திரமும் - சம்பந்தமும் இல்லாத முஸ்லீம்களின் பிரமுகர்களையும், தி.க.வைச் சேர்ந்தவர் என்பதால் தங்கையன் என்பவரையும், எதிர்த்து இயக்கம் எடுக்கும் வி.வி.மு. தோழர்களையும் தொடர்புபடுத்தி கொலைகாரர்களாக சித்தரித்து மதவெறியைத் தூண்டி, சாதிக்காரர்களையும் ஒன்றாக திரட்டி வருகிறான் பகவத்சிங். உழைக்கும் மக்கள், குழுக்களாக பிரிந்து மோதிக்கொள்ளும் - வெட்டிக் கொல்லும் சூழ்நிலையை உருவாக்கி வருகிறார்கள் வெறியர்கள். நாளை கண்டியூரும், ஒரு கம்பம் - போடியாகவும், சாத்தூர் - ராஜபாளையமாகவும் மாறலாம். எனவே, உழைக்கும் மக்களை சாதி - மதவெறிக்குப் பலியாகாமல், சாதி - மத வெறியைத் தூண்டி ஆதாயமடையும் ஆதிக்கச் சக்திகளுக்கு எதிராக ஒன்று திரளும்படி அறைகூவி வி.வி.மு.-வினர் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

*தமிழக அரசே!*

★ ஊரறிந்த கொலைகாரர்களான பகவத்சிங், திருவள்ளுவன், ஸ்ரீதர் மற்றும் அவர்களது நண்பர்களை கைது செய்து தண்டனைக் கொடு!


★ பணம் - சாதி, மதவெறிக்கு சோரம் போய் சாதி மத வெறியர்களை பாதுகாக்காதே!

**வி.வி.மு., திருவையாறு ஒன்றியம்.**

படிப்பகம்

www.padippakam.com

# அ.ஐ.வி.மு.வின் பலவீனங்கள்: சமரசமும் சாகசமும்



ஒருமைப்பாடு குறித்த கூச்சல் அதிகமாக, அதிகமாக எதிர்ப்புக் குரல்களும் வலுக்கின்றன. 'ஒப்பந்த சக்ரவர்த்தி' ராஜீவின் அஸ்ஸாம் ஒப்பந்தம் சந்தையில் வாங்கிய இரண்டு ரூபாய் தங்க செயின் போல அன்றே அசிங்கமாகப் பல்லிளித்துவிட்டது. வாக்காளர் பட்டியல், 'அந்நியர்' பிரச்சினை போன்ற எதிலும் எந்த முடிவுக்கும் வர முடியாமல் மாணவர் போராட்ட வரலாற்றின் வாசனையிலேயே இத்தனை ஆண்டுகள் காலம் தள்ளிவிட்டது அசாம் கண பரிஷத். தேசிய முன்னணியின் அங்கத்தினர் என்ற முறையில் உறவுக்குக் கை கொடுத்துக் கொண்டே, மாநில அரசு என்ற முறையில் உரிமைக்குக் குரல் கொடுக்கும் அதன் தி.மு.க. பாணி சர்க்கஸ் அரசியலுக்கு புதிதாக ஒரு சவால் எழுந்துள்ளது.

இந்தியாவின் பெரும் தரகு முதலாளிகளின் ஒருவரும் அசாம் ஃபிராண்டியர் தேயிலை நிறுவனத்தின் அதிபரும், இந்திராவின் ஆசி பெற்ற லண்டன் முதலாளி ஸ்வராஜ் பாலின் சகோதரருமான சுரேந்திர பால் கடந்த ஏப்ரல் 9-ம் தேதி சுட்டுக் கொல்லப்பட்டார். 200 கோடி ரூபாய் சொத்து மதிப்புள்ள நிறுவனத்தின் அதிபருக்கு, அசாமில் மட்டும் 15 தேயிலைத் தோட்டங்களை சொந்தமாகக் கொண்டிருக்கும் மிகப் பெரும் முதலாளிக்கே இந்தக் கதியா என்று பெரும் தரகு முதலாளிகளும், அவர்களது நிறுவனங்களின் அதிகாரிகளும் குலை நடுங்குகின்றனர். இக்கொலையை அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி (ULFA) தான் செய்திருக்க வேண்டும் என்று கூறுகிறது அசாம் போலீஸ். அவ்வமைப்பின் உறுப்பினர் ஒருவரும் இதையொட்டிக் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இதுவரை 94 பேர் அ.ஐ.வி. முன்னணியால் கொலை செய்யப்பட்டுள்ளதாகப் போலீஸ் கூறுகிறது. இதில் 18 பேர் பெரும் வியாபாரிகள். அசாம் வர்த்தகர் கழகத்தின் அடுத்தடுத்த தலைவர்கள் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். வர்த்தகர் கழகத்தின் மற்ற நிர்வாகிகள் ராஜினாமா செய்துவிட்டு ஓடிவிட்டனர். மாக்னீல் அண்டு மேஜர், டாடா டீ, வாரன டீ, அஸ்ஸாம் டீ போன்ற மிகப் பெரும் தரகு முதலாளித்துவ வர்த்தக நிறுவனங்களுக்குச் சொந்தமாக இருக்கும் நூற்றுக் கணக்கான தேயிலைத் தோட்டங்களின் நிர்வாகிகள் பீதியடைந்திருக்கின்றனர். ''அவர்கள் கேட்கும் நன்கொடையைத் தர மறுத்தாலோ, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்தாலோ கூட எங்கள் தலைக்கு ஆபத்துதான்'' என்று அலறுகின்றனர். ஏறத்தாழ ஆண்டுக்கு 360 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி ஈட்டித்தரும் தேயிலைத் தொழிலை மூட்டை கட்டிக் கொண்டு பலர் கிளம்பிவிட்டனர். ஜூலை 1989-லிருந்து ஜனவரி'90 க்குள் கவுகாத்தியிலிருந்து மட்டும் 150 கோடி ரூபாய் மூலதனம் அஸ்ஸாமை விட்டு வெளியேறியுள்ளது. அசாம் மாநில ஜனதா தளம், பாரதீய ஜனதா, காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அசாமிற்கு உடனே ராணுவத்தை அனுப்புமாறும், கவர்னர் ஆட்சியைப் பிரகடனம் செய்யுமாறும் கோரியுள்ளனர்.

மிகக் குறுகிய காலத்தில் இந்த அளவுக்குப் பிரபலம் அடைந்திருக்கும் அ.ஐ.வி. முன்னணி 1979 ஏப்ரல் மாதம் துவங்கப்பட்டது. அசாம் மாணவர் போராட்டம் துவக்க நிலையில் இருந்தபோதே இவ்வமைப்பு தொடங்கப்பட்டிருப்பினும் 1982 டிசம்பர் மாதம் நாம்ரூப் நகரிலுள்ள ஸ்டேட் வங்கியின் கிளையில் புகுந்து 5.2 லட்சம் ரூபாயைக் கொண்டு சென்றபோதுதான் முதன் முதலில் இவ்வமைப்பு வெளியுலகிற்குத் தெரியவந்தது. துப்பாக்கி முனையில் இந்திராவால் நடத்தப்பட்ட தேர்தலின் மூலம் அஸ்ஸாம் மக்கள் மீது திணிக்கப்பட்ட சைக்கியா அமைச்சரவை,ராஜீவின் ஒப்பந்தத்திற்குப் பின் நடைபெற்ற தேர்தலில் பதவியிழந்தது. 1985 டிசம்பரில் அசாம் கணபரிஷத் ஆட்சியைக் கைப்பற்றி சில ஆண்டுகளுக்குள் ஊழல் மற்றும் உட்கட்சித் தகராறுகளால் மக்கள் மத்தியில் செல்வாக்கிழக்கத் தொடங்கியது. வாக்காளர் பட்டியலில் இருந்து 'அந்நியர்' பெயரை நீக்குவது, அவர்களை வேறு இடங்களில் குடியமர்த்துவது, வேலையின்மை ஒழிப்பு, தொழில் வளர்ச்சி போன்ற பிரச்சினைகளில் மக்களின் எதிர்பார்ப்புகள் பொய்த்துப் போகத் தொடங்கின. இத்தகையதொரு அரசியல் சூழ்நிலையில் தான் அ.ஐ.வி. முன்னணி மக்கள் மத்தியில் மீண்டும் செல்வாக்கு பெறத் தொடங்கியிருக்கிறது.

''அஸ்ஸாம் எந்தக் காலத்திலும் இந்தியாவின் அங்கமாக இருந்ததில்லை. இந்தியாவுடன் அஸ்ஸாமிற்கு கலாச்சார ரீதியான ஒற்றுமைகள் தான் இருந்திருக்கின்றனவேயொழிய அரசியல் ரீதியில் அஸ்ஸாம் என்றுமே தனியாகத்தான் இருந்து வந்துள்ளது. பிரிட்டிஷ்காரர்களால் துப்பாக்கி முனையில் உருவாக்கப்பட்டதுதான் இந்தியா. அதில் அஸ்ஸாம் நிர்ப்பந்தமாக இணைக்கப்பட்டுள்ளது. 1947-க்குப் பின் ஒரு காலனி நாட்டைச் சுரண்டுவது போல இந்திய அரசு அஸ்ஸாமைச் சுரண்டி வருகிறது. எனவே இந்திய ஆதிக்கவாதிகளிடம் இருந்து அசாம் விடுதலை பெறவேண்டும். விடுதலை பெற்ற அசாமை சோசலிச சமூகமாக மாற்றியமைப்பதுதான் எமது நோக்கம்.''

என்று தன் கொள்கைகளைப் பிரகடனம் செய்திருக்கிறது அ.ஐ.வி.முன்னணி.

மக்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அசாமின் மக்கள் என்று குறிப்பிடுவதன் மூலம் 'அசாம் அசாமியருக்கே' என்ற கண்ணோட்டத்திலிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டிக் கொள்கிறது அ.ஐ.வி.முன்னணி. இந்திய அரசின் பிரதிநிதிகள், அஸ்ஸாமைச் சுரண்டும் இந்திய முதலாளிகள், அசாமின் நலனுக்கு துரோகம் இழைக்கின்றவர்கள் போன்றோரையும், அ.ஐ.வி. முன்னணியின் பெயரில் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோரையும் மக்களின் எதிரிகளாகக் கருதுவதாகக் கூறுகிறது. இந்தப் பட்டியலைச் சார்ந்தவர்கள் என்ற முறையில் இது வரை அழித்தொழிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையினர் அசாமியர்கள்தான்.



படிப்பகம்

www.padippakam.com

அழித்தொழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் கள்ளச்சாராயம், போதைப் பொருள் விற்பனை, ஆபாச வீடியோக்கள் மற்றும் சீரழிவுக் கலாச்சாரத்திற்கு எதிராக வும் நடவடிக்கைகள் மேற்கொள்கிறது.

கழுத்தில், ''குற்றத்தை ஒப்புக் கொள்கி றேன்'' என்று எழுதிய அட்டையுடன் முழந் தாளிட்டபடி நாள்முழுதும் வீதியில் நிறுத்தப் படுகிறார்கள் திருடர்கள்; லஞ்சம் வாங்கிய வர்களின் முகத்தில் கரியைப் பூசி முச்சந்திக ளில் நிற்க வைக்கிறார்கள்; கற்பழிப்பில் ஈடு பட்டவர்களின் காதுகள் அறுத்தெறியப்படு கின்றன; பதுக்கல் பேர்வழிகளின் பாதி தலையைச் சிரைத்து விடுகிறார்கள். இத்த கைய காட்சிகள். சிறுநகரங்கள் மற்றும் கிரா மப்புறங்களில் சகஜமாகக் காணப்படுகிறது என்கிறார்கள் பத்திரிக்கையாளர்கள்.

இந்த நடவடிக்கைகள் காரணமாக கள் ளச்சாராயம், கஞ்சா, வீடியோ அரங்குகள்' போன்றவை பல இடங்களில் மாயமாய் மறைந்து விட்டன என்று பத்திரிக்கைகள் குறிப்பிடுகின்றன. ஓட்டுக்கட்சிகளும் இதை ஒப்புக் கொள்கின்றன.

பெரும் வியாபாரிகள், கறுப்புப்பண முதலைகள் போன்றவர்களிடம் மட்டுமே தாங்கள் கட்டாயநிதி வசூல் செய்வதாக அ.ஐ.வி.மு. கூறுகிறது. இவ்வாறு வசூலிக் கப்பட்ட நிதியில் ஒரு பகுதியை நிர்மாண வேலைகளுக்கு - சாலைகள் செப்பனிடுதல், பள்ளிகள் - மருத்துவமனைகள் கட்டுதல், ஏழைச் சிறுவர்களுக்கு புத்தகங்கள் விநி யோகித்தல் போன்ற பணிகளுக்கு - தாங் கள் பயன்படுத்துவதாகவும் கூறுகிறது.

அ.ஐ.வி. முன்னணியின் அதிகரித்து வரும் செல்வாக்கைக் கண்டு போலீஸ் அதி காரிகள் பீதியடைந்துள்ளனர். ''அவர்களின் ஆயுதபலம் அதிகரித்து வருவதைப் பற்றிக் கூட நாங்கள் அதிகம் கவலைப்படவில்லை. ஆனால் சிந்தனை ரீதியாக மக்கள் அவர் களை ஆதரிக்கத் தொடங்குவதுதான் எங்க ளுக்குக் கவலையளிக்கிறது'' என்கிறார் ஒரு உயர் போலீஸ் அதிகாரி.

நிலைமைகள் இவ்வாறு இருக்கும் போது அஸ்ஸாம் ஐக்கிய விடுதலை முன் னணி இன்னமும் தடை செய்யப்படாதது ஏன்? போலீசு, ராணுவ அடக்குமுறை இன் னும் ஏன் ஏவிவிடப்படவில்லை? போன்ற கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

அஸ்ஸாம் ஐக்கிய விடுதலை முன்ன ணியின் உறுப்பினர்களும் ஆதரவாளர்க ளும் அஸ்ஸாம் மாணவர் சங்கத்திலிருந்து வந்தவர்கள். மாணவர் சங்கத்தின் ஒரு பிரிவினர் அ.ஐ.வி. முன்னணியை ஆத ரிக்கின்றனர். அ.ஐ.வி.மு.வினர் சிலர் கைது செய்யப்பட்ட போது அதற்கு எதிர்ப்பு தெரி வித்து நடத்தப்பட்ட கடையடைப்பு, ஊர்வ லம் போன்றவற்றில் பல இடங்களில் அஸ் ஸாம் மாணவர் சங்கத்தினர் பெருமளவில் கலந்திருக்கின்றனர். இன்றைக்கு ஆட்சியில் இருக்கும் அசாம் கண பரிஷத் அசாம் மாண வர் சங்கத்திலிருந்து தோன்றிய கட்சிதான். இதனால்தான் அசாம் கண பரிஷத் நேரடி அடக்குமுறையில் ஈடுபடத் தயங்குகிறது.

அசாம் உள்துறை அமைச்சர் பிருகு புகான் அ.ஐ.வி. முன்னணியுடன் ரகசியத் தொடர்பு வைத்திருப்பதாக எழுந்த குற்றச் சாட்டையொட்டி முதல்வர் மகந்தாவுக்கும் புகானுக்குமிடையே மோதல்களும் முரண் பாடுகளும் வெடித்துள்ளன.

அசாம் மாணவர் போராட்டத்தின் அடிப்படையாக இருந்த அரசியல் பொரு ளாதாரக் காரணங்கள் அப்படியே நீடிக்கின் றன. அசாம் கண பரிஷத் அரசோ தேசிய நீரோட்டத்தில் கலந்துவிட்டது. அரசியல் ரீதியில் காலாவதியாகிக் கொண்டிருக்கும் அசாம் கண பரிஷத் அ.ஐ.வி. முன்னணி யின் மீது நடத்தும் தாக்குதல் எதுவும் இந்த சந்தர்ப்பத்தில் அரசியல் ரீதியாக அதன் தற் கொலை நடவடிக்கையாகவே அமையும்.

எனவேதான் அ.ஐ.வி.முன்னணி யைத் தடை செய்யக் கோரி ஜனதாதளம் உள்ளிட்ட அனைத்து ஓட்டுக் கட்சிகளும் கோரிய போதிலும் மகந்தா மழுப்புகிறார்: ''துப்பாக்கியால் சுட்டு வீழ்த்துவதற்கு அ.ஐ.வி. முன்னணி என்பது காக்கை குருவி யல்ல; கடந்த காலத்தில் மைய அரசு அஸ் ஸாமை திட்டமிட்டு புறக்கணித்ததன் விளை வாக விரக்தியடைந்த இளைஞர்களின் அமைப்பு அது. அவர்கள் ஆயுதப் போராட் டத்தில் நம்பிக்கை வைத்திருப்பது முட்டாள் தனமானது. அரசியல், நிர்வாக நடவடிக்கை கள் மூலம் அவர்களையும் 'ஜனநாயக' அர சியலுக்குக் கொண்டு வர நாம் முயல வேண் டும்'' என்று தந்திரமாகப் பதிலளிக்கிறார். ''இனியும் தாமதித்தால் பிறகு கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும். இந்த நிமிடமே எங்களுக்கு உத்தரவிட்டால் அவர்களை நாங்கள் கட்டுப்படுத்திவிட முடியும்'' என்று பத்திரிக்கைகளுக்கு பேட்டி கொடுக்கிறார் கள் 'பெயர் சொல்ல விரும்பாத' அசாம் போலீஸ் அதிகாரிகள்.

**சோசலிச் அசாமை நிறுவப் போவ தாக பொதுவில் பேசினாலும் அ.ஐ.வி.முன்னணி (ULFA) சாராம்சத் தில் ஒரு குட்டி முதலாளித்துவ அமைப்புதான்!**

காஷ்மீர், பஞ்சாப் பிரச்சினைகளுடன் தனது உயிருக்கே போராடிக் கொண்டிருக் கும் வி.பி.சிங் அரசு இந்த விவகாரத்தில் அசாம் கணபரிஷத்துடன் மோதலை ஏற்ப டுத்திக் கொள்ள இயலாத நிலையில் உள் ளது. மேற்கூறிய சூழ்நிலைகள் காரணமாக அ.ஐ.வி. முன்னணியின் மீது உடனடியாக அரசு பயங்கரவாதம் ஏவிவிடப்படுவது தள் ளிப் போடப்படுகிறது.

ஒடுக்கப்படும் அசாம் தேசிய இனம், தான் சேர்ந்திருப்பதா அல்லது பிரிந்து போவதா என்பதைத் தீர்மானித்துக் கொள் ளும் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத் தில் ஈடுபடும் போது அதை நாம் ஆதரிக்கி றோம். இந்த போராட்டத்தை முன்னின்று நடத்தும் அமைப்புகளை நிபந்தனையின்றி, விமரிசனமின்றி ஆதரிப்பது என்பது அதன் பொருளல்ல; ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதும் புலிகளை நிபந்த னையின்றி ஆதரிப்பதும் ஒன்றல்ல என்ப தைப் போலத்தான் இதுவும்.

தாங்கள் பிரச்சார கட்டத்தில் மட்டுமே இருப்பதாகக் கூறும் அ.ஐ.வி.மு. இதுவரை ஏறத்தாழ 100 அழித்தொழிப்புகளையும், பல வங்கிக் கொள்ளைகளையும் நடத்தியுள் ளது. இத்தகைய வீரசாகச நடவடிக்கைகள் மூலம் விரைவில் பிரபலமடைவதும், கணிச மான அளவுக்கு மக்களிடையே செல்வாக்கு பெறுவதும்கூட சாத்தியமே. ஆனால் வீரசா கச நடவடிக்கைகளே புரட்சி ஆகிவிடுவ தில்லை. தேசிய இன உரிமைக்கு மட்டுமே போராடும் அமைப்பு என்றாலும்கூட, இந்த இனஒடுக்கு முறையை நிலை நிறுத்த உத வும் அரசமைப்புக்கு எதிராக விரிந்த அள வில் பிரச்சாரம் செய்வதும், மக்களைத் திரட் டிப் போராடுவதும் வேண்டும். அதன் மூலம் மட்டுமே பரந்துபட்ட மக்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்த இயலும். இதை அ.ஐ.வி. முன்னணி செய்வதாகத் தகவல் ஏதும் இல்லை.

இத்தகைய நடவடிக்கைகளில் இவர் கள் ஈடுபடாமல் இருப்பதற்கான காரணங் களை இவ்வமைப்பினரின் பத்திரிக்கை பேட்டிகளிலிருந்து புரிந்து கொள்ள முடிகி றது. தேர்தல் பாதையில் தமக்கு நம்பிக்கை இல்லை என்று கூறும் அதே வேளையில் தேர்தலில் பங்கேற்கும் கட்சிகளை எதிர்த்த பிரச்சாரத்தை இவர்கள் தவிர்க்கிறார்கள். 'தேவையில்லாமல் மனக்கசப்பை' ஏற்படுத் திக் கொள்ள நாங்கள் விரும்பவில்லை என்று இதற்குக் காரணம் கூறுகிறார்கள். இதன் பின்னணியில் உள்ள உண்மைதான் கசப்பானது. அசாம் இனமக்களின் காவலன் என்ற பெயரில் இன்று ஆட்சியில் அமர்ந்தி ருக்கும் அசாம் கண பரிஷத் அரசை, அதன் அரசியல் சமரசங்களை அம்பலப்படுத்த அ.ஐ.வி.முன்னணி தயங்குகிறது. இதையே ஒரு போர்த்தந்திரமாகக் கருதுகிறது. இத்த கைய சந்தர்ப்பவாத அணுகுமுறை இன் றைக்கு பயனளிப்பதைப் போன்ற ஒரு பிர மையை ஏற்படுத்தினாலும்,நாளை முரண்பா டுகள் முற்றும்போது இந்தப் பிரச்சினையிலி ருந்து முகத்தைத் திருப்பிக் கொள்ள இய லாது. அமிர்தலிங்கம் - புலிகள் தேனிலவை யொத்தது இது.

சோசலிச அசாம் என்றெல்லாம் பொது வாகப் பேசினாலும் இந்த அமைப்பு சாராம் சத்தில் ஒரு குட்டி முதலாளித்துவ (நடுத்தர வர்க்க) அமைப்புதான். தனது வழிகாட்டும் தத்துவம் மார்க்சியம் என்று இவர்கள் அறி வித்து விட்டதனாலேயே இவ்வமைப்பை பாட்டாளி வர்க்க அமைப்பாகக் கருதமுடி யாது. இவ்விஷயத்திலும் - ஈழப்போராளி அமைப்புகள் நமக்குப் படிப்பினை அளிக் கின்றன.

மக்களின் தரப்பிலிருந்து போராடு கின்ற ஜனநாயக சக்திகள் தங்கள் கோரிக் கைகளில் முற்போக்கானவர்களாக இருந் தால் மட்டும் போதாது. அதை அடைகின்ற வழிமுறைகளிலும், வடிவங்களிலும் கூட அது பிரதிபலிக்க வேண்டும். சாகசவாதம் அதற்கான வடிவமல்ல; சந்தர்ப்பவாதம் அர சியல் போர்த்தந்திரமும் அல்ல.

அஸ்ஸாம் ஐக்கிய விடுதலை முன் னணி இதை உணர்ந்து கொள்ளும் என்று எதிர்பார்ப்போம். சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களை ஆதரிக்கும் ஜனநாயக சக்திகளுக்கு இதை உணர்த்துவோம்.

● அஜித்



படிப்பகம்

www.padippakam.com

## பஸ்தார் பூர்வ பழங்குடிகள்;

**இயற்கையின் குழந்தைகள் என்று வர்ணிக்கப்படும் பூர்வ பழங்குடிகள் தாம் பிறந்த மண்ணில் பீடி இலை போன்ற காட்டின் உப பொருட்களை சேகரிக்க உரிமையில்லை. காட்டு வளங்களை ஏக போகமாக்கிக் கொண்டு அவர்களை கடுமையாக தண்டிக்கிறது, அரசு. இந்த அநீதிக்கெதிராக நக்சல்பாரிகள் கொதித்தெழுந்தனர். பூர்வ பழங்குடிகளை அமைப்பாக திரட்டி தக்க பதிலடிக் கொடுக்கின்றனர். 'அண்ணாலு' என்று பழங்குடிகளால் பிரியமுடன் அழைக்கப்படும் நக்சல்பாரி (மக்கள் யுத்த குழுவினர்) புரட்சியாளர்களை ஒழிக்க, அரசு அப்பாவி பழங்குடிகளை நரவேட்டையாடுகிறது. பழங்குடிகள் பெரும்பான்மையாக வாழும் ம.பி. மாநிலம் - பஸ்தார் மாவட்டத்தில் மட்டும் நிரந்தரமாக 11 பட்டாலியன்களை குவித்துள்ளது, அரசு. 2000க்கும் மேலான மாநில போலீசை வேவு பார்க்க நியமித்துள்ளது. பயங்கரவாத தடுப்புச்சட்டம் (TADA) என்ற ஆள்தூக்கும் சட்டத்தின் மூலம் வெறியாட்டம் போடுகிறது.**

**பழங்குடிகளுக்கு பல வழிகளிலும் தொந்திரவு கொடுக்க, அங்கிருக்கும் இரும்பு சுரங்க கழிவுகளை சங்கினி, தங்கினி என்ற இரு ஆறுகளில் கலந்து குடிநீரையே நஞ்சாக்குகிறது, அரசு....**



பஸ்தார் பழங்குடிகள்

# சொந்த மண்ணில் வாழ்விழந்தவர்கள்!

கொலம்பஸ் அமெரிக்காவை தற்செயலாகக் கண்டுபிடித்தவுடன் அதன் நான்கு மூலைகளிலும் வெள்ளம் போல் உள்ளே புகுந்தனர் ஐரோப்பிய ஆட்சியாளர்கள். இயற்கை எழிலும், கனிப் பொருட்களும், காடுகளும் மண்டிக் கிடந்த அப்பூமியைக் கைப்பற்ற, அம்மண்ணின் மைந்தர்களான செவ்விந்திய பூர்வபழங்குடிகளை குரூரமாக திரள்திரளாக படுகொலை செய்தனர். 11 லட்சமாக இருந்த செவ்விந்தியர்களின் எண்ணிக்கை 20 ஆண்டுகளில் 16,000மாகியது.

தம் மண்ணில் குடியேறியவர்களை அன்போடு வரவேற்று உபசரித்த அப்பூர்வ பழங்குடிகளை தூக்கிலிட்டும், நீரில் அமுக்கியும், நெருப்பிலிட்டும், வெட்டியும், கொள்ளை நோய் பரப்பியும் ஐரோப்பிய வந்தேறிகள் கொன்றொழித்த வரலாறு கொடூரமானது.

இந்த வரலாறு எங்கள் மண்ணில் நிகழ அனுமதியோம் என்று நீண்டகாலமாக தன்னந்தனியாக குரலெழுப்புகின்றனர், மத்திய இந்தியாவின் பூர்வகுடி பழங்குடிகள். அவர்களின் சிதறிய குரலை அடர்ந்த காடுகளினூடே தனது பூட்ஸ் காலால் சருகுகளாக மிதித்து துவைக்கிறது இந்திய அரசு. இந்த நவீன காலத்திலும் முழு ஆடை பார்க்காத அந்த அப்பாவி பூர்வகுடிகளை அவர்கள் மண்ணிலிருந்து விரட்டுகிறது. பழங்குடிகளின் வாழ்நிலையை மேம்படுத்துவது, தொழில் மயப்படுத்துவது என்ற பகட்டு போர்வையினால் மூடி தனதுகேடான நோக்கங்களை மறைக்கிறது.

இந்த பூர்வ பழங்குடிகளில் 60 சதவிகிதத்திற்கும் மேல் மத்திய இந்தியாவில் பரவி வாழ்கின்றனர். ஆந்திரா மாநிலத்தின் கோதாவரி ஆற்றின் கரையிலிருந்து, மகாராஷ்ட்ரம், மத்திய பிரதேசம், பீகார், ஒரிசா கிழக்கு உத்திரபிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய ஏழு மாநிலங்களின் பகுதிகள் உள்ளடங்கிய மத்திய இந்தியாவின் நெடுக பூர்வ குடிகள் வசிக்கின்றனர்.

பழங்குடிகளின் இதயமான பகுதி பஸ்தார், மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ளது. இந்தியாவிலேயே 3-வது மிகப் பெரிய மாவட்டம். மக்கள் தொகை 18.5 லட்சம். இதில் 68 சதவிகிதம் பூர்வகுடிகள். இதன் நிலப்பரப்பில் 55.4 சதவிகிதம் அடர்ந்த வனாந்திர பகுதி. கனிப் பொருட்கள் ஏராளம்! வார்ப்பு இரும்பு, சுண்ணாம்பு ப்பாறைகள், தாமிரம், கந்தகம், துத்தநாகம், வெள்ளீயம், ஈயம், படிகம் மற்றும் காட்டுப் பொருட்களுடன் தேக்கு, மூங்கில், சாலமரம் காடாக மண்டிக் கிடக்கின்றன.

இந்த இயற்கையின் குழந்தைகளான பூர்வ குடிகளின் வாழ்க்கையோ சருகுகளாக காய்ந்து கிடக்கிறது. இந்த இயற்கை வளங்களின் மீது எந்தவொரு சொந்தமும் அதோடு ஒட்டிப் பிறந்த அந்த பழங்குடிகளுக்கு இல்லை. இந்தியாவில் மற்ற பகுதி மக்கள் அனுபவிக்கும் சிறிதளவு உரிமையும், வசதியும் கூட அம்மக்களுக்கு மறுக்கப்படுகிறது.

தேசிய ரீதியில் இந்தியாவின் தனிநபர் ஆண்டு வருமானம் ரூ.771. பஸ்தார் பூர்வ குடிகளின் தனிநபர் ஆண்டு வருமானம் ரூ.450. இந்திய அளவில் கல்வி கற்றவர்களின் விழுக்காடு 36. ஆனால் பஸ்தார் பழங்குடிகளில் 14 விழுக்காடு மட்டுமே! இந்திய அளவில் மின்மயப்படுத்தப்பட்ட கிராமங்களின் விழுக்காடு 68. பஸ்தாரில் 19.

- இப்படி முடிவேயில்லாமல் அவர்களுக்கு வெட்டப்படும் வசதிகள்-உரிமைகளின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. 3,388 கிராமங்களில் விரவி கிடக்கும் பழங்குடிகளுக்கு 25,000 பேருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அளவில் முதலுதவி மருத்துவம் கூட இல்லை.

மிகவும் எளிமையான சாதாரண வாழ்க்கைச் சாதனங்களைக் கொண்டே தங்கள் குடும்பங்களை காப்பாற்றிக் கொள்கிறார்கள், பழங்குடிகள். பீடி இலைகளைச் சேகரிப்பது, விறகு வெட்டுவது, தேன் சேகரிப்பது, அணைகள், சுரங்கங்களில் தலைசுமைகளாக கூலி வேலை செய்வது என்று தங்கள் வாழ்க்கையைத் தள்ளுகிறார்கள். இந்த அரைகுறையான 'நிம்மதி'யான வாழ்க்கையையும் அரசு மூர்க்கமாக தொந்தரவு செய்கிறது.

தொழிலாளர்கள் - விவசாயிகள் மீதான ஒடுக்குமுறை சட்டங்கள் போலவே, காட்டுவளங்களை கையகப்படுத்த பல்வேறு அடக்குமுறைச் சட்டங்களை பழங்குடிகளின் மீது திணிக்கிறது, இந்திய அரசு. ஆங்கில காலனி அரசால் ஒரு நூற்றாண்டுக்கு முன் 1896ல் காடுகள், காலனிய அரசின் சொத்துக்களாக பிரகடனப்படுத்தப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com

அதன்பிறகு வந்த காங்கிரசு மேலும் சட்டங்களைப் போட்டு காடுகளை அரசின் பிடியில் கொண்டு வந்தது. தற்போது நாட்டில் உள்ள 95 சதவிகித காடுகள் அரசுக்கு சொந்தம். காடுகளின் விளை பொருட்களிலும், திருத்திய நிலத்திலும் பழங்குடிகள் மரபுவழியாக பெற்று வந்த உரிமைகள் அனைத்தையும் பிடுங்கிக் கொண்டது. தனது அயோக்கியத் தனத்தை சில சலுகைகள் கொடுத்து நியாயப்படுத்தியது. பழங்குடிகள் தங்களது சமூக அதிகாரங்கள் அனைத்தையும் இழந்து கூலிகளாக மாற்றப்பட்டனர்.

குறிப்பாக பழங்குடிகளின் மாவட்டங்களான, பீகாரின் தென்பகுதி மிகப்பெரும் நிலக்கரிச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அரசால் ஆக்கிரமிக்கப்பட்டது. ஏறக்குறைய, இதற்காக டெல்லி யூனியன் பிரதேசத்தை போல இரண்டு மடங்கு பரப்பளவு கொண்ட பல பூர்வகுடிகளின் கிராமங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

பிலாய் இரும்பு எஃகு உருக்காலையின், வார்ப்பு இரும்பு வடக்கு பஸ்தார் சுரங்கம், அங்கு ஓடும் இந்திராவதி ஆற்றின் குறுக்காக கட்டப்பட்டுள்ள நீர்மின் நிலையம், தண்டகாருண்யம் மறுவாழ்வுத் திட்டம் என்ற பெயரில் வங்கதேச போர் அகதிகளை குடியேற்றும் நிலப்பகுதி என்று பிடுங்கிக் கொண்டது அரசு.

இயற்கையோடு ஒன்றி வாழ்ந்து கொண்டிருந்த பூர்வகுடிகள் பலாத்காரமாக அவர்கள் பகுதியில் இருந்து விரட்டப்பட்டனர். ஆடுமாடுகளை பட்டியில் அடைப்பது போல, கையளவு நிலத்திலும், வளமற்ற நிலப்பரப்பிலும் அவர்கள் நிர்ப்பந்தமாக குடியேற்றப்பட்டனர். பலர் அங்கு வாழ்வுக்கு உத்திரவாதம் இல்லாமல், சந்தை நகரங்களுக்கும் பெருநகரங்களின் ஒதுக்குப் புறங்களுக்கும் தலைசுமை கூலிகளாகத் தள்ளப்பட்டனர்.

ஆந்திரா - மகாராஷ்டிரம் எல்லையில் கட்டப்படும் மிகப் பெரும் மின்நிலையத்தால் 1,400 சதுரகிலோ மீட்டர் அடர்ந்த காடுகள் அழிக்கப்படுகின்றன. 1 லட்சம் பழங்குடிகளை அங்கிருந்து விரட்டப்படும் அபாயத்தை எதிர்நோக்கி காத்திருக்கின்றனர். வடஇந்தியா முழுவதும் எதிர்ப்புக்குள்ளாகி, தொடர்ந்து உயர்ந்து வரும் நர்மதை ஆற்றின் குறுக்காக கட்டப்படும், ராட்சத அணையால், 20 லட்சம் பழங்குடிகள், அகதிகளாக பல இடங்களுக்குச் சிதறியோடும் நிலை ஏற்பட்டுள்ளது. உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் - சிங்ரளி, சித்தி பிராந்தியத்தில் நிலக்கரி சுரங்கங்களுக்காக ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பகுதியில் இருந்து மட்டும் 1.50 லட்சம் பூர்வகுடிகள் வாழ்விடங்களை இழந்தார்கள்.

''சக்தியின் இருப்பிடம்'' (மின்சாரம், கச்சா மற்றும் கனிப்பொருட்கள்) என்று வர்ணிக்கப்படும் பழங்குடிகளின் மத்திய இந்தியா தரகு முதலாளிகள், பன்னாட்டு நிறுவனங்களின் வேட்டைக்கு குவிமையமாக இருக்கிறது. ''உன்னுடைய அரிசியை கொடு. என்னுடைய தவிட்டையும் கலந்து இருவரும் ஊதி ஊதித் திங்கலாம்'' என்பது போல், பூர்வ குடிகளின் பாரம்பரிய பிரதேசங்களில், அணைகளையும், சுரங்கங்களையும், கேந்திரமான ஆலைகளையும் குறைந்த செலவில் நிர்மாணித்துக் கொள்கின்றன.

அதற்குத் தேவையான தொழில் நுட்ப வல்லுநர்களையும் பயிற்சிப் பெற்ற தொழிலாளர்களையும் வெளியிலிருந்து இறக்குமதி செய்து கொள்கின்றன. பெயருக்கு தலைசுமை, பள்ளம் வெட்டும் கூலிகளாக, பூர்வகுடிகளில் ஒரு சிலரை வேலைக்கு அமர்த்திக் கொண்டு அவர்களை முன்னேற்றி விட்டதாக வெட்கமின்றி கூச்சல் போடுகின்றனர்.

பஸ்தார் பழங்குடிகளைத் தொடர்ந்து 3-வது முறையாக ஏமாற்றி நாடாளுமன்ற உறுப்பினராகியிருக்கும் அரவிந்த் நெடம் கூறுகிறார். ''பழங்குடிகள், வெளியாட்களால் முழுவதுமாக ஏமாற்றப்பட்டு விட்டார்கள். அரசியல் ரீதியில், பொருளாதார ரீதியில், அனைத்து வழிகளிலும் அவர்கள் வஞ்சிக்கப்பட்டு விட்டார்கள். கல்வியறிவு பெறும்போது மட்டுமே முழுமையாக அவர்களால் இதை உணரமுடியும்'' என்கிறார்.

என்னக் கொடுமை! தாங்கள் சுரண்டப்படுகிறோம், அடக்கப்படுகிறோம் என்ற சாதாரண உண்மைக் கூட அந்த அப்பாவி பழங்குடி மக்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லை என்று சுரண்டல் பேர்வழியே வாக்குமூலம் அளிக்கிறார்.

**ஊர் பஞ்சாயத்தில் வைத்து மன்னிப்புக் கோரவைப்பது, கட்டி வைத்து பார்வைக்கு வைப்பது, முறைகேடாக சேர்த்த சொத்துக்களைக் கைப்பற்றுவது, திருந்தாத போலீசு, அதிகாரிகளை அழித்தொழிப்பது என்று தண்டிக்கின்றனர், நக்சல்பாரிகள். கிலி பிடித்து பழங்குடிகள் மீது வெறித்தனமாக பாய்கிறது அரசும் போலீசும்.**

தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடிகளின் பொருளாதார மேம்பாட்டை ஆராயும் கமிஷனின் தலைவராகவும், பஸ்தார் மாவட்டத்தின் கலெக்டராகவும் பதவி வகித்த பி.டி.சர்மா என்ற உயர்அதிகாரி கூறுகிறார். '' டெல்லி தலைநகரின் நுகர்பொருள் கலாச்சாரம், பஸ்தார் காட்டுவளத்தையே அரித்து வருகிறது. அழகு, கலைப் பொருட்கள், ஆடம்பரம் என்ற பெயரில் நகர்ப்புறங்களைப் போல் பழங்குடி மக்கள் வீடுகளில் எதையும் வைத்திருக்கவில்லை. அவர்கள் ஒரு குடிசையும் உழவு கருவியை மட்டுமே காட்டுப் பொருளில் இருந்து தயாரித்து வாழ்கிறார்கள்'' என்கிறார்.

இந்த சாதாரண எளிமையான வாழ்க்கைக்கு கூட அரசு அவர்களை அனுமதிக்கவில்லை என்பது தான் உண்மை. மணிப்பூர், திரிபுரா, மிஜோராம், நாகாலாந்து, அசாம் ஆகிய வடகிழக்கு மாநிலங்களின் பழங்குடிகள் போராடிப் பெற்ற பல உரிமைகளை, மத்திய இந்தியாவில் வாழும் பழங்குடிகளுக்கு அமுல்படுத்த மறுக்கிறது மத்திய அரசு.

அரசியல் சட்டத்தின் 6-வது பட்டியல் ஷரத்து பழங்குடி மக்களின் பிரதேச உரிமையை சட்டப்படி உரிமையாக்குகிறது. பழங்குடிகள் மாவட்ட கவுன்சில் தன் விவகார எல்லைக்குட்பட்ட காடுகளையும் - விளைநிலங்களையும் நிர்வகிக்கும் உரிமையுடையது. தங்கள் எல்லைக்குள் ஏற்படும், சிவில், கிரிமினல் பெரும்பாலான வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கும் அதிகாரம் படைத்தது. ஆனால் எது ஒன்றையும் மத்திய இந்திய பழங்குடி மாவட்டங்களுக்கு வழங்குவதை வெறிதனமாக எதிர்க்கிறது மத்திய அரசு.

கூலி உயர்வுக்கான போராட்டங்களிலிருந்து, தனிமாநில போராட்டம் வரை அனைத்தையும் துப்பாக்கி முனையில் ஒடுக்குகிறது. காட்டிலாக்கா அதிகாரிகள், வனபாதுகாப்பு போலீசு, கிராம நிர்வாக அதிகாரி, வனஉற்பத்தி பொருட்களுக்கு வரி வசூலிக்கும் அலுவலர்கள் முதல் கலெக்டர்கள் வரை பெரும் பட்டாளத்தை பழங்குடிகள் மீது ஏவுகிறது. கல்வியறிவும், சமூக தொடர்பும், வெளியுலக பழக்கங்களும் இல்லாத அப்பாவி பழங்குடிகளை இக்கும்பல் மிருகத்தனமாக ஒடுக்குகிறது.

காட்டுப் பொருட்களை திருடிவிட்டதாக, சட்டவிரோதமாக பாதுகாக்கப்பட்ட வன பிராந்தியத்தில் நுழைந்ததாக, மிருகங்களை வேட்டையாடியதாக, வதைத்ததாக, காடுகளை அழிப்பதாக, இன்னும் கண்ணுக்குப் புலப்படாத காரணங்களை எல்லாம் கூறி ஈவிரக்கமின்றி தண்டிக்கிறது. அவர்களுடைய அற்ப சேமிப்புகளை வீடுபுகுந்து சூறையாடுகிறது. அவர்களின் உழைப்பை கூலி கொடுக்காமல் சுரண்டுகிறது. அவர்களை வைத்தே காட்டில் கிடைக்கும் அரிதான பல பொருட்களை கடத்தி செல்கிறது. வரைமுறையற்ற பாலியல் வன்முறையை பழங்குடி உழைப்பாளி பெண்கள் மீது கட்டவிழ்த்து விடுகிறது. பால் மணம் மாறாத சிறுமிக்கூட இக்கும்பலின் பாலியல் வக்கிரத்திற்கு தப்ப முடிவதில்லை. மறுப்பவர்களை, எதிர்ப்பவர்களை, பொய் வழக்கின் கீழ் கைது செய்து தண்டிக்கிறது. அல்லது பகிரங்கமாக படுகொலை செய்து, பிணத்தை அவர்கள் முன்னிலையிலேயே போட்டு மிரட்டுகிறது.

மார்டபால் என்ற பழங்குடி கிராமத்தின் வயது முதிர்ந்தவர் சொல்கிறார். ''எங்களுக்கு சாலை வசதியும், எப்போதாவது மருத்துவர்களும் தேவை. ஆனால் போலீசு, அதிகாரிகள் எங்களுக்கு வேண்டவே வேண்டாம்.'' என்று தெளிவாக கூறுகிறார்.

இந்திய அரசியல் சட்ட பயிற்சி நிறுவனத்தின் சத்ரபதிசிங் சொல்கிறார்: ''இந்திய வனத்துறை என்பது இன்னொரு ஜமீன்தாரி முறையே! போலீசுக்கும் வன அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரம் இந்த அளவு உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லை.'' என்கிறார். ''உண்மையில் இரண்டு சட்டவிதிகள் நடைமுறையில் உள்ளன. ஒன்று போலீசுக்கும் வன அதிகாரிகளுக்கும் உள்ளது. இன்னொன்று சாதாரண மக்களுக்குள்ளது! காட்டுவளங்களை சுரண்டுவதற்காக இச்சட்டங்களை ஆங்கிலேயன் கொண்டு வந்தான். அதன் பிறகு வந்த இந்



படிப்பகம்

www.padippakam.com



**கார்கேலி கிராமம். குடியேறிய அரசு அதிகாரிகளுக்கு வீடு கட்டும் பழங்குடிகள்; அதிகார வர்க்கம் முன்னேற்றத்திற்கு உதவவில்லை பெரும்சுமையாக அவர்களை அழுத்துகிறது.**

திய ஆட்சியாளர்களும் அதையேதான் பின்பற்றுகிறார்கள். இரண்டு பேருக்கும் எந்தவொரு வித்தியாசமும் இல்லையென்பதையே இது நிருபிக்கிறது'' என்று தோலுரிக்கிறார்.

''அரசு பழங்குடிகளுக்காக எதுவும் செய்ய வேண்டியதில்லை. அதன் நிறுவனங்களை (போலீசு, நிர்வாகம், வரி வசூலிக்கும் பாதுகாப்பு அதிகாரிகள்) வாபஸ் வாங்கிக் கொண்டாலே போதும், பழங்குடிகள் நிம்மதியாக உயிர் வாழ்வார்கள்.'' என்கிறார் இப்போது ஞானம் வந்த உயர் அதிகாரி எஸ்.டி.சர்மா.

''பழங்குடிகளின் பிரதேசங்களில் தொழிற்சாலைகள் பெருகுகின்றன. அதற்குண்டான அடிப்படையும், கச்சாப் பொருட்களும் அங்கிருக்கிறது. ஆனால், இவ்வளவு வளம் பொருந்திய நிலங்களை கையகப்படுத்திக் கொள்ளும் அரசு, அதற்கு ஈடாக பழங்குடிகளுக்கு என்ன தருகிறது? நிலங்களை கையகப்படுத்துவதல்ல இங்கு பிரச்சினை! அவர்களுடைய வாழ்க்கைக்கான ஆதாரத்தையே எடுத்துக் கொள்கிறது அரசு என்கிறார், முன்னாள் பழங்குடிகள் நல அரசு செயலர்.

அரசு மாறியவுடன் அதிகாரிகள் எல்லாம் இப்போது ஞானோதயம் வந்தது போல் காட்டமாக முந்தைய அரசை பழிக்கிறார்கள். இதுநாள் வரையில், சமூக நல மேம்பாட்டு திட்டம் (CDP) பகுதிவாரியான சமூக நல மேம்பாட்டு திட்டம் (CADP) கிராம மேம்பாட்டுத் திட்டம் (WUDP) வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான திட்டம் (DPAP) மலைவாழ் மக்கள் மேம்பாட்டு திட்டம் (HADP) கிராம மேம்பாட்டு தன்னிறைவுத் திட்டம் (IRADP) ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டுத் திட்டம் (IRDP) ஜவகர் வேலைவாய்ப்பு திட்டம் (JRY) என்ற திட்டங்களை எல்லாம் ஒன்றுவிடாமல் பழங்குடிகள் மேம்பாட்டிற்கு அமுல்படுத்தி வருவதாக வாய்ப்பந்தல் போட்டார்கள். இதன் விளைவு,இப்போதும் பழங்குடிகள் மார்புக்கு போர்த்தக்கூட துணியில்லாமல் திரிகிறார்கள். போலீசும், அதிகாரிகளும், பண்ணைவீடு, சின்னவீடு, பெரியவீடு என்று சுகமாக திகழ்கிறார்கள்.

மத்தியபிரதேச மாநிலத்தில் மக்கள் உரிமை கழகங்கள், பழங்குடிகள், அரசுக்கடனை பயன்படுத்துவதைப் பற்றி எடுத்த புள்ளிவிபரங்களில் பூஜ்ஜியமே மிஞ்சுகிறது. கோண்டகோன் என்ற கிராமத்தில் 76 - 81 ஆண்டுகளில் நில அடமான கூட்டுறவு வங்கியிடமிருந்து பயிர் கடன் வாங்கிய 499பழங்குடிகளில் 476 பேர் வாங்கிய கடனுக்காக நிலத்தையோ அல்லது உழவு மாடுகளையோ இழந்துவிட்டனர். காரணம் பெரும் முயற்சிக்கும் பிறகும் அவர்களால், அறுவடையிலிருந்து கடனை அடைக்க முடியவில்லை. எனவே உடமையை விற்று கடன் அடைத்து இருக்கின்றனர்.

அரசு எந்திரம், மற்றும் அடக்குமுறை நிறுவனங்களால் ஏமாற்றத்திற்கும் அவமானத்திற்கும் உள்ளான அப்பாவி பழங்குடிகள் தங்கள் வாழ்வுக்கான பாதையை தாங்களே உருவாக்கிட எழுந்தார்கள். தங்கள் விடியலுக்கான ஆரம்ப முயற்சியில் தோல்விகள், பின்னடைவுகள், பிளவுகள், துரோகங்களை அதிகமாகவே சந்தித்தார்கள்.

சில கூடுதல் காசுகளுக்காக அரசிடம் சோரம் போகும் ஓட்டுக்கட்சிகளின் பிழைப்புவாத தலைமை, சவடால் பேசிக் கொண்டே சமரசப் பாதையில் இழுத்துச் செல்லும் ஓட்டுக்கட்சிகளின் துரோக தலைமை. போராட்டத்தை காட்டிக் கொடுக்கும் பாதியில் கைகழுவிவிட்டு ஓடும் கிருத்துவ மத அமைப்புகளின் தலைமை, இவற்றை வெகு விரைவிலேயே தங்கள் போராட்ட அனுபவத்தில் ஆழம் பார்த்தார்கள்.

பழங்குடிகளுக்காக தனி மாநிலம் கோரி போராடும் ஜார்கண்ட் குட்டி முதலாளித்துவ தலைமையின் கீழ் பெருவாரியாக அணிதிரண்டு போராடினார்கள் - போராடுகின்றனர்.

இதே கோரிக்கைகளை முன்வைத்துப் போராடி மலை மாவட்டக் கவுன்சில் அதிகாரத்துடன் முடங்கிவிட்ட கூர்க்காலாந்து தேசிய இனப் போராட்டம் எதிர்மறை படிப்பினையாக கண்ணெதிரில் உள்ளது.

மாறாக, மார்க்சிய, லெனினிய புரட்சியாளர்களால் தீரமுடன் முன்னெடுத்து செல்லப்படும் ஆந்திரா - பீகார் பழங்குடிகளின் போராட்டம் எந்த சமரசமும் இல்லாமல் அடுத்தடுத்து உயர்ந்த கட்டத்திற்கு முன்னேறுகிறது. பழங்குடிகளுடன் கூலி உயர்வு பற்றி பேச வரும் தனியார் கொடுங்கோல் முதலாளிகளும், அரசும் இறங்கி வந்திருப்பதற்கு புரட்சியாளர்களின் தலைமையிலான பழங்குடிகளின் போராட்ட அழுத்தமே காரணம்.

பழங்குடிகள் இந்த அனுபவங்களை தொகுத்துக் கொண்டு போராட்டப் பாதையில் மேலும் முன்னேறிச் செல்ல வேண்டும். இயற்கையோடு போராடும் அவர்கள் தங்கள் ரத்தத்தையும் வேர்வையையும் சுவைக்கும், அரசு அதிகார வர்க்கம், போலீசு, உள்ளூர் ஆதிக்க மனித மிருகங்களுக்கு எதிராகவும் தங்கள் ஆயுதங்களை திருப்ப வேண்டும்.

● பச்சையப்பன்



படிப்பகம்

www.padippakam.com



# மன்னிப்பு கேட்ட போலீசுப்புலி!

உத்தமபாளையம் வட்டத்தில் உள்ள தேவாரம் மீனாட்சிபுரம் கிராமம், போடி - சாதி கலவரத்திற்குப் பிறகு போலீஸ் முகாமாக மாற்றப்பட்டுள்ளது. 'கிராமத்திற்கு பாதுகாப்பு கொடுக்கிறோம்' என இரவும் பகலும் அதிவேகமாக கிராமத்திற்குள் வாகனங்களை ஓட்டிவந்து தொல்லை கொடுப்பதையே தமது தொழிலாகக் கொண்டுள்ளது போலீசுக் கும்பல்.

9.10.90-ம் நாள் மதியம் சுமார் 2 மணியளவில் ஒரு போலீசு வாகனம் அதிவேகமாக ஊருக்குள் வந்தது. பள்ளிக் கூடத்திற்கு அருகில் சிறுவர் - சிறுமியர்கள் 50க்கும் மேற்பட்டோர் விளையாடிக் கொண்டிருந்தார்கள். எதையும் பொருட்படுத்தாமல் காட்டுமிராண்டித்தனமாக வாகனத்தை ஓட்டிவந்தான் ஒரு போலீஸ்காரன். இதைப் பார்த்த வி.வி.மு. தோழர் மருதமுத்து அவர்கள், ''மெதுவாக ஓட்டி வாருங்களேன், குழந்தைகள் விளையாடுதில்ல..'' எனக் கேட்டிருக்கிறார். உடன் 'ஒரு கிராமத்தான் தன்னை கேள்வி கேட்பதா' என்கிற வெறியோடு தனக்கேயுரிய பாணியில் ஆபாசமாகத் திட்டி தோழரைத் தாக்கினான். கூட இருந்த போலீஸ்காரர்கள் துணையுடன் தோழரை 'போலீஸ் ஜீப்'பில் ஏற்ற முயன்றிருக்கிறான். செய்தியறிந்து வந்த வேறொரு தோழர் கேள்வி கேட்டும் அலட்சியப்படுத்தி இருக்கிறார்கள். ''புரட்சிகர அமைப்பைச் சேர்ந்தவர்கள்'' என தோழர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்ட பிறகு ''அமைப்பு ரீதியாக இதுவிஷயமாக ஏதாவது நடவடிக்கை செய்தீர்கள் அவ்வளவுதான்'' என எச்சரித்துவிட்டு போய்விட்டார்கள்.

இதை இப்படியே விட்டால் விபத்துக்களும் - விபரீதங்களும் தான் நடக்கும்; போலீசின் அட்டூழியங்கள் தொடரும். எனவே இதற்கு எதிராக அமைப்பு ரீதியாக நடவடிக்கை எடுக்க வி.வி.மு.வினர் தீர்மானித்தனர். இதை மோப்பம் பிடித்த போலீசு கும்பல், வி.வி.மு.வுடன் சமரசம் செய்து கொள்ள தோழர்களை அணுகியிருக்கிறது. ''மக்கள் மத்தியில் வந்து மன்னிப்பு கேட்பதாய் இருந்தால் பேசுகிறோம். இல்லையெனில் மன்னிப்பு கேட்க வைப்போம்'' எனக் கூறி மறுத்துவிட்டனர்.

போடி - சாதிக் கலவரத்தில் இருந்து போலீசு கொடுத்து வரும் தொல்லைகளால் வெறுப்படைந்திருக்கும் மக்கள் இச்சம்பவம் அறிந்து மேலும் ஆத்திரமடைந்தனர். மக்களில் சிலர் தனிப்பட்ட முறையில் வன்முறையில் இறங்கவும் துடித்தனர். இந்நிலைமையை உணர்ந்து வேறுவழியில்லாமல் சமரசத்திற்கு வந்த போலீசு கும்பல், மக்கள் முன்னிலையில் மன்னிப்பு கேட்க முதலில் மறுத்து பிறகு ஒத்துக் கொண்டது.

அதன்பிறகு ஊர் முழுவதும் பறையறிவித்து மக்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடச் செய்தனர் வி.வி.மு.வினர். கிளைச் செயலர் பேசிய பிறகு போலீசாரால் தாக்கப்பட்ட தோழர் நடந்த சம்பவத்தை விளக்கினார். அடுத்து தோழரை தாக்கிய போலீசுக்காரன் தலைகுனிந்தபடியே வந்து மக்கள் முன்னிலையில் செய்த தவற்றிற்கு மன்னிப்புக் கேட்டான்.

''இப்பிரச்சினையை ஒட்டி வன்முறையில் இறங்கி தனிப்பட்ட போலீசுக்காரனை தாக்குவது - அதனால் மேலும் போலீசின் வெறியாட்டங்கள் அதிகரிப்பது - என்பதைவிட, அவனை அவமானப்படுத்துவதன் மூலம் போலீசு கும்பலுக்கு இது சிறந்த பாடமாக அமையும்'' எனத் தோழர்கள் பேசியதை அனைவரும் வரவேற்றனர்.

போடி - சாதிக்கலவரத்தின் பொழுது தங்கள் ஊரில் சாதிக் கலவரம் நிகழாமல் இருக்க 'ஒற்றுமையாக இருக்க வேண்டும். யாரும் சாதி அடிப்படையில் சாதி வெறியர்களுக்கு உதவக்கூடாது' என அன்று வி.வி.மு.வினர் பிரச்சாரம் செய்து, ஊர்க் கட்டுப்பாடு போட வைத்தனர். அதனால், அன்று மக்கள் சாதிக்கலவரத்திற்கு பலியாவது தடுக்கப்பட்டது. இன்று இச்சம்பவத்தில் வன்முறைகள் நிகழாமல் சரியான முறையில் போலீசிற்கு பதிலடி கொடுக்கப்பட்டது - இதுபோன்ற வி.வி.மு.வின் தொடர்ச்சியான செயல்பாடுகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை உருவாக்கி இருக்கிறது.

**விவசாயிகள் விடுதலை முன்னணி,**
**மீனாட்சிபுரம் கிளை.**

# ரௌடிகும்பலின் வெறியாட்டம் உடந்தையாக இருக்கிறது போலீசு

தம்பிக்கோட்டை வடகாட்டில் கள்ளக்கடத்தல் பேர்வழியும், கள்ளச்சாராய பேர்வழியுமான கணபதி என்பவனும் அவனது மகன்களான ஜெயபால், இராஜேந்திரன் மற்றும் இவர்கள் கூட்டாளிகளான பாலு, கார்த்திகேயன், ஜெயராமன், ஜெயக்குமார் ஆகியோர் கூட்டாக சேர்ந்து செய்து வரும் அக்கிரமங்களுக்கு அளவே இல்லை. இதில் கணபதி என்பவனுடைய முக்கிய பொழுதுபோக்கு தாழ்த்தப்பட்ட கூலிப் பெண்களை கற்பழிப்பது. எண்ணற்ற பெண்களின் வாழ்வை இப்படி சூறையாடி சின்னாபின்னமாக்கி இருக்கிறான். இவர்களது அட்டூழியங்களுக்கு எதிராக சிறு முணுமுணுப்பு வந்தாலும் மிரட்டுவது - அடித்து உதைத்து சித்திரவதை செய்து பணியவைப்பது என்பது இவர்களது வேலை. இவர்களால் பாதிக்கப்பட்ட முருகையனும் அவரது மனைவியும் வி.வி.மு. அமைப்பாளர் சந்திரசேகரிடம் முறையிடவே, சந்திரசேகர் கணபதியின் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். ஆத்திரமுற்ற கணபதி கும்பல் வி.வி.மு. அமைப்பாளர் சந்திரசேகரையும் அமைப்புத் தோழர்களையும் மிரட்டி பலவழிகளில் தொல்லை கொடுத்து வந்தார்கள்.

ஆட்களை ஏவிவிட்டு வி.வி.மு. சுவரொட்டிகளை கிழிப்பது, குறிப்பிட்ட மதத்திற்கு சாதிககு எதிராக செயல்படும் அமைப்பு எனவும் அவதூறைப் பரப்புவது என இவனது அட்டூழியங்கள் தொடர்ந்து கொண்டிருக்கவே, இவைகளை கண்டித்தும், அம்பலப்படுத்தியும் வி.வி.மு-வினர் பொதுக் கூட்டம் நடத்தினர்; சுவரொட்டி ஒட்டினர். மேலும் ஆத்திரமடைந்து பழிவாங்கத் துடித்தது ரௌடி கும்பல்.

கடந்த மே 7ந்தேதி தம்பிக்கோட்டை மேலக்காட்டில் வி.வி.மு. தோழர்கள் காமராஜ் [illegible] ராஜலட்சுமிக்கு தோழர் ராஜமாணிக்கம் தலைமையில் புரட்சிகர திருமணம் நடந்தது. நண்பர்கள் தோழர்கள் முன்னிலையில் முறைப்படி நடத்தப்பட்ட சட்டப்படியான திருமணத்தை வேண்டுமென்றே பெண்ணைக் கடத்தி வந்ததாகப் பொய்ப்பிரச்சாரம் செய்தனர். கணபதியின் மகன்கள் மற்றும் சிலர் சேர்ந்து வி.வி.மு. கொடிக்கம்பத்தைப் பிடுங்கி கொடியை எரித்துவிட்டு வி.வி.மு. அமைப்பையே அழித்துவிட்டதாக கொக்கரிக்கின்றனர். வி.வி.மு. இனி பொதுக்கூட்டம் நடத்தக்கூடாது. அரசியல் பிரச்சாரம் செய்யக்கூடாது எனத் 'தடைச்சட்டம்' போடுகின்றனர்.

அன்று தோழர் பாலசுப்பிரமணியன் என்பவரைத் தாக்கி கடத்திச் சென்று சித்திரவதை செய்துள்ளது இக்கும்பல். இன்னும் பல தோழர்களையும் நண்பர்களையும் தாக்கி வெறியாட்டம் ஆடியிருக்கின்றனர். தோழர்கள் அதிராம்பட்டினம் காவல் நிலையத்தை அணுகி கணபதி கும்பல் மீதான புகார் மனுவை கொடுத்தனர். ''நான் இவர்களை கண்டித்துவிட்டேன். இனி எதுவும் நடக்காது'' எனக் கூறி மனுவை வாங்க மறுத்து தனது எஜமான விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார் எஸ்.ஐ. நடராஜன்.

கணபதி கும்பல், நிலபிரபுத்துவ அடிப்படையில் ஆதிக்க சக்தியாக உயர்ந்து நின்று வெறியாட்டம் போடுவதையும், சாதி மத வெறியைத் தூண்டி உழைக்கும் மக்களைக் கூறு போட முயல்வதையும், அதற்கு துணைபோகும் போலீசையும் அம்பலப்படுத்தி வருகிறார்கள் வி.வி.மு. அமைப்பினர். புரட்சியாளர்கள் அராஜகத்திற்கும், அடி - உதை சித்திரவதைக்கும் - அடக்குமுறைக்கும் பணிந்து போகிறவர்கள் அல்ல; சரியான பதிலடி கொடுப்பார்கள்.

**விவசாயிகள் விடுதலை முன்னணி**
**பட்டுக்கோட்டை வட்டம்.**

படிப்பகம்

www.padippakam.com

# மேதினி சிவக்க மே தின நிகழ்ச்சிகள்!

★ ஊற்றங்கரையில் புதிய ஜனநாயக வாசகர் வட்டம் சார்பில் மே நாள் பொதுக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. தோழர் சுப்பிரமணி தலைமைதாங்க, மில் தொழிலாளர் சங்கத் தோழர் பாலன், திருப்பத்தூர் புதிய கலாச்சார வாசகர் வட்டத் தோழர்கள் இந்திரஜித், சிவானந்தம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். விவசாயிகள் படும் துன்பங்களை விளக்கி விவசாயத் தோழர் நாராயணன் பாடிய தெருக்கூத்து வடிவப் பாடலைக் கேட்டு திரண்டிருந்த உழைக்கும் மக்கள் வரவேற்றனர். இடையிடையே புரட்சிகர கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. சர்வதேசிய கீதத்துடன் நிறைவடைந்த இப்பொதுக் கூட்டத்திற்கு நூற்றுக்கும் மேற்பட்ட உழைக்கும் மக்கள் திரண்டு வந்து ஆதரவளித்தனர்.

★ திருவண்ணாமலை வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணியின் சார்பில், மே நாள் அறைகூவலாக முழக்கங்களை வடித்து, திருவண்ணாமலை, மங்கலம் மற்றும் சுற்றுப்புற கிராமப்பகுதியில் சுவரொட்டி இயக்கம் நடத்தப்பட்டது. மே நாளன்று மங்கலத்தில் விண்ணதிரும் முழக்கங்களுடன் செங்கொடி ஏற்றி தோழர்கள் உரையாற்றினர். உழைக்கும் மக்கள் திரளாக வந்து இந்நிகழ்ச்சியை ஆதரித்தனர்.

★ திருச்சியில் மக்கள் கலை இலக்கியக் கழகமும், பகத்சிங் இளைஞர் முன்னணியும் இணைந்து மே நாளன்று, சைக்கிள் ஊர்வலத்தை எழுச்சியுடன் நடத்தின. செங்கொடிகள் அசைந்தாட திக்கெட்டும் எதிரொலிக்கும் முழக்கங்களுடனும் ஊர்வலமாகச் சென்ற தோழர்கள் நகரின் முக்கிய பகுதிகளில் புரட்சிகர கலை நிகழ்ச்சியுடன் தெருமுனைக் கூட்டங்களை நடத்தி, மே நாள் குளுரையை விளக்கிப் பிரச்சாரம் செய்தனர். மே நாள் அறைகூவலைக் கொண்ட சுவரெழுத்து இயக்கத்தையும், ஆலை வாயிலில் விநியோகிக்கப்பட்ட பிரசுரத்தையும், தெருமுனைக் கூட்டங்களையும் உழைக்கும் மக்கள் வரவேற்று ஆதரவளித்தனர்.

★ கோவையில் மக்கள் கலை இலக்கியக் கழகம் மே நாளன்று சைக்கிள் ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்திருந்த போதிலும், போலீசார் அடாவடித்தனமாக கடைசி நேரத்தில் அனுமதி மறுத்தனர். எனவே தொழிலாளர்கள் நிறைந்த சிங்காநல்லூர் - ஒண்டிப்புதூர் பகுதியில் ஐந்து இடங்களில் புரட்சிகர இசைநிகழ்ச்சியுடன் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மே நாள் அறைகூவல் சுவரொட்டி இயக்கத்தோடு, தொடர்ந்து அனுமதி மறுத்துவரும் போலீசாரின் அடாவடித்தனத்தை அம்பலப்படுத்தியும் சுவரொட்டி இயக்கமும் நடத்தப்பட்டது.

★ அதிராம்பட்டினத்தில் வி.வி.மு. தம்பிக்கோட்டை கிளையின் சார்பில் மே நாளன்று சைக்கிள் ஊர்வலமும் தெருமுனைக் கூட்டமும் எழுச்சியுடன் நடைபெற்றது. தோழர் சந்திரசேகரன் தலைமையில் விவசாயிகள் - தொழிலாளர்கள் - மீனவர்கள் பங்கேற்ற சைக்கிள் ஊர்வலம் சுற்றுப்புற கிராமங்களில் பிரச்சாரம் செய்துவிட்டு அதிரை வந்தடைந்தது. அதிரையில் அண்ணாசி அருகே மீனவர்களின் சார்பில் தோழர் நாராயணன் வி.வி.மு. செங்கொடியை ஏற்றிவைத்தார். பின்னர் விண்ணதிரும் முழக்கங்களுடன் முக்கிய வீதிகளில் தோழர்கள் பிரச்சாரம் செய்தபடியே ஊர்வலமாக வந்தனர். இறுதியில், வட்டார அமைப்பாளர் தோழர் சந்திரசேகரன், அதிரை பகுதி அமைப்பாளர் தோழர் ராஜமாணிக்கம் ஆகியோர் உரையாற்றினர். நூற்றுக்கணக்கான உழைக்கும் மக்கள் திரளாக வந்து ஆதரவளித்தனர்.

★ திருவையாறு ஒன்றிய வி.வி.மு. சார்பில் மே நாளன்று கண்டியூர், வரகூர், கண்டமங்கலம், திருக்காட்டுப் பள்ளி, இளங்காடு, நடுக்கடை, திருவையாறு ஆகிய இடங்களில் தோழர்கள் சைக்கிள் ஊர்வலமாகச் சென்று தெருமுனைப் பிரச்சாரம் செய்தனர். கண்டியூர், வரகூர், இளங்காடு ஆகிய கிளைகளில் எழுச்சிமிகு முழக்கங்களுடன் கொடியேற்றப்பட்டது. ஒவ்வொரு இடத்திலும் நூற்றுக்கும் மேற்பட்ட உழைக்கும் மக்கள் திரண்டு வந்து ஆதரவளித்தனர்.

★ மதுரையில் மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் சார்பில் சம்மட்டிபுரத்தில் மே நாள் பொதுக்கூட்டமும் கலை நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றது. இதே இடத்தில் மே நாளன்று காலை கொடியேற்றிய 'மார்க்சிஸ்டு'கள் நம்மை 'கிறித்துவ தன்னார்வக் குழுக்களிடம் காசு வாங்குபவர்கள்; சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள்' என்று வழக்கம் போலவே வசை பாடினர். மாலை நடைபெற்ற நமது பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்றிய ம.க.இ.க. இணைச்செயலர் தோழர் கதிரவன் இதற்கு சரியான பதிலடி கொடுத்தார். திரிபுவாதிகளின் சித்தாந்த ஒட்டாண்டித்தனத்தையும், மிட்டாய் கொடுத்து மே தினம் கொண்டாடும் லட்சணத்தையும் அம்பலப்படுத்தி, இவர்கள் மே நாளை நினைவு கூர்வதற்கே அருகதையற்றவர்கள் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டினார். புரட்சிகர கலைநிகழ்ச்சிகளுடன் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்திற்கு 250க்கும் மேற்பட்டோர் வந்திருந்து சிறப்பித்தனர்.



★ வேதாரண்யம் புதிய ஜனநாயக வாசகர் வட்டத் தோழர்கள் ஆயக்காரன் புலத்திலிருந்து வேதாரண்யம் வரை மே நாளன்று சைக்கிள் பேரணியை நடத்தினர். வழியில் சாமியார் சத்திரம், கருப்பம்புலம், ஆதனூர், பூப்பெட்டி முதலான இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்திவிட்டு ஊர்வலம் வேதாரண்யம் வந்தடைந்தது. அங்கு தோழர்கள் கிருஷ்ணமூர்த்தி, இராவணன், முருகையன் ஆகியோர் உரையாற்றினர். ஏராளமான மக்கள் திரண்டு வந்து நமது நிகழ்ச்சிக்கு ஆதரவளித்தனர்.

★ கல்லை வட்டத்தில் வி.வி.மு. தோழர்கள் மே நாளன்று காலையில் கிளைகள் தோறும் செங்கொடி ஏற்றி தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தி மே தின குளுரை ஏற்றனர். மாலையில் சங்கராபுரத்தில் வி.வி.மு.வின் மே நாள் அணிவகுப்பு நடைபெற்றது. பாட்டாளி வர்க்க சர்வதேசிய கீதத்தை இரு தோழர்கள் ஒலிபெருக்கியில் பாடிச் செல்ல, அதன் பின்னே ராணுவ இசையுடன் செஞ்சட்டை, செங்கொடியுடன் வி.வி.மு. தோழர்கள் அணிவகுத்துச் சென்றனர். நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்ற இந்த அணிவகுப்பு, வழிநெடுகிலும் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தது. இறுதியில், நகரின் மையப்பகுதியில் வி.வி.மு. கொடியேற்றி, முன்னணித் தோழர்கள் சிறப்புரையாற்றினர். இம் மேநாள் நிகழ்ச்சி, பகுதிவாழ் மக்களிடம் ஆர்வத்தையும் நம்பிக்கையையும் ஊட்டியுள்ளது.

★ தஞ்சையில் மே நாளன்று ம.க.இ.க. சார்பில் பொதுக்கூட்டமும் கலைநிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றது. ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர் காளியப்பன் தலைமையில், திருவோணம் ஒன்றிய வி.வி.மு. தோழர் குருமூர்த்தி சிறப்புரையாற்றினார். இறுதியில் எழுச்சிமிகு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாற்றுக்கட்சியைச் சேர்ந்த பலரும் இக்கூட்டம் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்ததோடு, உழைக்கும் மக்களும் திரளாக வந்திருந்து ஆதரவளித்தனர்.

★ சாத்தூரில் புதிய ஜனநாயக வாசகர் வட்டம் சார்பில் மே நாள் அறைகூவல் சுவரொட்டி இயக்கம் நடத்தப்பட்டது. நகரசுத்தி தொழிலாளர்கள் சுவரொட்டி ஒட்டுவதற்கு துணை செய்தனர். திரளான மக்கள் ஆர்வத்துடன் படித்து நமது கருத்துக்களை வரவேற்றனர். அதேசமயம், நமக்கு மக்கள் ஆதரவளிப்பதைக் கண்டு ஆத்திரமடைந்த திரிபுவாதிகளான 'மார்க்சிஸ்டு' கட்சியினர் ரௌடிக் கும்பல் பாணியில் நமது தோழர்களை மிரட்டினர்.

★ கடலூரில் மே நாளன்று ம.க.இ.க. ஊர்வலமும் பொதுக்கூட்டமும் எழுச்சியுடன் நடைபெற்றது. குறைந்த எண்ணிக்கையில் இருந்தாலும் மே நாளை போர்க்குணத்துடன் பறைசாற்றும் விதத்தில், மாலையில் நடைபெற்ற ஊர்வலம் மஞ்சை நகர் மணிகூண்டை வந்தடைந்தது. பின்னர் தோழர் கலாநிதி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் புதிய ஜனநாயகம் ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

# விடுதலையை நோக்கி...

ஆந்திராவில் உள்ள வாரங்கலில் மே 5, 6 தேதிகளில் 'ரயத்து கூலி சங்க' விவசாயிகளின் 3-வது மாநில மாநாடு நடந்தது.

தெலுங்கானா, சிரிகாகுளம் முதலான பல்வேறு ஆந்திர மாவட்டங்களில் இருந்தும் கிராமங்களில் இருந்தும், மஹாராஷ்டிரா, கர்நாடகா, மத்திய பிரதேசம், தமிழ்நாடு முதலான மாநிலங்களில் இருந்தும் விவசாயிகள் - உழைக்கும் மக்கள் அணி அணியாக வந்து வாரங்கலில் குவிந்தனர்.

தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டு, ஆந்திர அரசின் அவதூறை - அடக்குமுறையை முறியடித்து உறுதியுடன் போராடிய நக்சல்பாரி புரட்சியாளர்களை வாழ்த்தி வரவேற்பதற்காக - அவர்களின் தலைமையேற்று புரட்சிப் பயணத்தை மீண்டும் எழுச்சியுடன் தொடர்வதற்காக இப்படி 10 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் திரண்டனர்.

முதல்நாள் காலை 10 மணிக்கு மாநாட்டு திடலில் அமைந்திருந்த தியாகிகள் நினைவுச்சின்னத்திற்கு அருகே, தியாகத் தோழர் சின்னலு அவர்களின் தாயார் கொடியேற்றி வைக்க தியாகிகளின் வீரவணக்கம் பாடலுடன் எழுச்சியுடன் மாநாடு தொடங்கியது.

தோழர் கலோஜி நாராயணராவ், மக்கள் சிவில் உரிமைக் கழகத் தோழர் டாக்டர் கே.பாலகோபால், புரட்சிகர எழுத்தாளர் சங்கத் தோழர் வரவரராவ் போன்றவர்கள் உரையாற்றினார்கள். ஜனநாட்டிய மண்டலி அமைப்பின் கலைஞர்கள் தோழர் கத்தார் அவர்களின் தலைமையில் கலைநிகழ்ச்சிகள் நடத்தினர். பலத்த காற்றுடன் மழை பெய்த பொழுதும் நனைந்து கொண்டே மக்கள் உற்சாகத்துடன் நிகழ்ச்சியைப் பார்த்தனர்.



செங்கொடி விண்ணில் உயர, தியாகிகள் நினைவுத் தூண் அருகே வீரவணக்கம் செலுத்தும் விவசாயிகள்.

ஆந்திர அரசின் அடக்குமுறையால் படுகொலை செய்யப்பட்ட தியாகிகளான தோழர்களின் குடும்பத்தினர் மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு மரியாதை செய்யப்பட்டனர். இறந்த தியாகிகளுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன்பிறகு பல்வேறு மாநிலத்திலிருந்து வந்த புரட்சிகர அமைப்புகளின் பிரதிநிதிகள் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாட்டிலிருந்து வி.வி.மு. சார்பில் பிரதிநிதியாகச் சென்ற மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் மாது அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். ம.க.இ.க. சார்பாக அனுப்பப்பட்ட வாழ்த்துரையை தோழர் வரவரராவ் வாசித்தார்.

அடுத்தநாள் மாநாட்டிலே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. புதிய தலைமை தேர்வு செய்து அறிமுகப் படுத்தப்பட்டது. தோழர் சஞ்சிராமராவ் மீண்டும் தலைவராகவும், தோழர் சிரிமன் நாராயணன் செயலராகவும் தேர்வு செய்யப்பட்டனர். மதியம் வாரங்கல்லில் இருந்து கனம்கொண்டா வரை ஊர்வலம் நடந்தது. 12 கி.மீ. தூரம் மக்கள் அணிவகுத்து செங்கொடி ஏந்தி விண்ணதிர முழக்கமிட்டனர். ஊர்வலம் மாநாட்டு விளக்கப் பொதுக்கூட்ட திடலை அடைந்ததும் எங்கு பார்த்தாலும் தலைகள் - செங்கொடிகள் - முழக்கங்கள்! வாரங்கல் நகரமே குலுங்கியது.

பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பாலகோபால், வரவரராவ், சஞ்சிராமராவ், சிரிமன் நாராயணன் மற்றும் சில முன்னணித் தோழர்கள் சிறப்புரையாற்றிய பிறகு கலைநிகழ்ச்சிகளுடன் மாநாடு நிறைவடைந்தது.

"கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிசம் வீழ்ந்துவிட்டது. கம்யூனிஸ்ட்டுகள் சர்வாதிகாரிகள், மக்கள் தண்டனை கொடுத்துவிட்டார்கள். கம்யூனிசம் செத்துவிட்டது" எனப் பிரச்சாரம் செய்து, செல்லரித்துப் போன முதலாளித்துவ ஜனநாயகத்திற்கு உயிர் இருக்கிறது என ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்க முயன்ற முதலாளித்துவ பிரச்சாரகர்களுக்கு இம்மாநாடு ஒரு பெரிய சாட்டையடி!

"நக்சலைட்டுகள் - கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், சமூக விரோதிகள், சர்வாதிகாரர்கள்..." என்றெல்லாம் ஓலமிட்டு பொய்ப் பிரச்சாரம் செய்தவர்கள் - அடக்குமுறையை ஏவியவர்கள் இன்று "ஜனநாயகப் பாதைக்கு திரும்புங்கள்" என புலம்புகிறார்கள்; சமரசம் செய்து கொள்ள முயல்கிறார்கள்.

என்னதான் இவர்கள் கூச்சல் போட்டாலும், புலம்பினாலும் மக்கள், நேர்மையும் - உறுதியும் - தியாகப் பற்றும் - தெளிவான சித்தாந்தமும் கொண்ட புரட்சியாளர்களின் பின்னே திரள்திரளாக அணி வகுக்கிறார்கள். மார்க்சிய - லெனினிய - மாவோ சித்தாந்தத்தை உயர்த்தி பிடித்து புரட்சியாளர்கள் முன்னேறுகிறார்கள் - இது தவிர்க்க முடியாதது. இதை மீண்டும் நிரூபித்துக் காட்டியது, இந்த வாரங்கல் மாநாடு.

ஆம். வாரங்கல் சிவந்தது! இதன் தீ எதிரிகளைச் சுட்டது; அலறினார்கள்! மக்கள் மனதை தொட்டது; புரட்சிகர உணர்வு பொங்க அவர்கள் இறுக்கிய முஷ்டியுடன் கரங்களை உயர்த்துகிறார்கள்!

---

தோழர் மதியழகனும், வடலூர், உழைக்கும் மக்கள் விடுதலை முன்னணி தொழிற்சங்கத் தோழர் இராசேந்திரனும் சிறப்புரையாற்றினர். பிற புரட்சிகர அமைப்புகளின் தோழர்களும் உழைக்கும் மக்களும் திரளாக வந்திருந்து நிகழ்ச்சியை சிறப்பித்தனர். இறுதியில் ம.க.இ.க. தோழர்கள் நடத்திய 'ஐயோ! சாராயம்' என்ற சிறு நையாண்டி நாடகமும் புரட்சிகர பாடல்களும் மே நாள் நிகழ்ச்சிக்கு மேலும் மெருகூட்டின.

★ அம்மாபேட்டை வி.வி.மு. சார்பில், மாத்தூரில் மே நாளன்று மாலையில் ஏறத்தாழ 200 பேர் பங்கேற்ற எழுச்சிமிகு ஊர்வலம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து, தோழர் சுப்பிரமணி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் மணி, மாது, ராசு ஆகியோர் சிறப்புரையாற்றினர். புரட்சிகர இசைநிகழ்ச்சியுடன் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்திற்கு ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் திரண்டிருந்தனர். தோழர் மாது உரையாற்றத் தொடங்கிய போது இடைவிடாமல் மழை பெய்ததால் கூட்டம் அடுத்த நாள் தள்ளி வைக்கப்பட்டது.

மே 2ம் தேதியன்று மாத்தூரில் மழையால் தடைபட்ட கூட்டம் மாலை 7 மணிக்கு புரட்சிகரப் பாடல்களுடன் தொடங்கியது. இன்றைய தேசிய, சர்வதேசிய நிலைமையை விளக்கி மக்களை புரட்சிக்கு அணிதிரள அறைகூவல் விடுத்து தோழர் மாது சிறப்புரையாற்றினார். இறுதியில் வி.வி.மு. தோழர்களின் புரட்சிகர கலைநிகழ்ச்சி நடைபெற்றது. இம் மே நாள் நிகழ்ச்சி இப்பகுதி மக்களிடம் புரட்சிகர அமைப்புகளின் மீதான நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

★ சென்னையில் ம.க.இ.க. சார்பில் மே நாள் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் எழுச்சிகரமாக நடைபெற்றது. ரயில் பெட்டித் தொழிற்சாலை (ஷெல்) வாயில் அருகிலிருந்து செங்கொடிகள் விண்ணில் உயர, புரட்சிகர முழக்கங்கள் எதிரொலிக்க எண்பதுக்கும் மேற்பட்ட தோழர்களுடன் புறப்பட்ட ஊர்வலம் வில்லிவாக்கம் செங்குன்றம் சாலையை சென்றடைந்தது. பின்னர் அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு தோழர் சீராளன் தலைமையேற்க, சென்னை கிளை அமைப்பாளர் தோழர் சீனிவாசன், சிறப்புரையாற்றினார். இடையிடையே தோழர்கள் நடத்திய புரட்சிகர இசை நிகழ்ச்சியும் குறிப்பாக பெண் தோழர்கள் பாடிய சாராய எதிர்ப்பு, மதவெறி எதிர்ப்பு பாடல்களும் மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

★ ☆ ★

படிப்பகம்

www.padippakam.com

## அமெரிக்காவின் சூப்பர் 301 வர்த்தகச் சட்டம்:

# இந்திய மக்களை ஒட்டச் சுரண்டுவதற்கான உரிமம்

**சூப்பர் 301 வர்த்தக சட்டத்தால் தென்கொரியாவைப் போல், இந்தியாவும் அமெரிக்காவின் வேட்டைக்காடாக சீரழியும்; அல்லது பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்ட எத்தியோப்பியாவாக மாற்றப்படும்.**

நான் குடிக்கும் நீரை நீ எச்சில் படுத்தி விட்டாய் என்று ஆட்டின் மீது குற்றஞ்சாட்டி, 'நியாயப்படி' அதை நரி விழுங்கியது பழைய கதை. இந்தியப் பொருளாதாரத்தைத் தன் இரும்புப் பிடியில் வைத்துள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம், முறையற்ற வர்த்தகம் செய்வதாக இந்தியா மீது குற்றஞ்சாட்டி அதன் குரல்வளையை நெறிக்கத் தொடங்கியிருப்பது புதியகதை. கடந்த ஆண்டில் அமெரிக்கா வகுத்துக் கொண்டுள்ள "சூப்பர் 301" வர்த்தகச் சட்ட விதிகளின் படி, இந்தியா, ஜப்பான், பிரேசில் ஆகிய மூன்று நாடுகளும் முறையற்ற வர்த்தகம் செய்து, அமெரிக்காவின் தொழில் முதலீட்டுக்குத் தடைகளை ஏற்படுத்தியுள்ளதாகக் குற்றம் சாட்டியது. இப்போது ஜப்பானும் பிரேசிலும் அமெரிக்காவுடன் வர்த்தக உறவில் முன்னேற்றம் கண்டிருப்பதாகக் கூறி அவற்றைக் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கி விட்டது. இன்று தனியாக மாட்டிக் கொண்டு தவிப்பது இந்தியா மட்டும்தான்.

"சூப்பர் 301" சட்டம் என்றால் என்ன? உலகை ஆதிக்கம் செய்து வந்த அமெரிக்க வல்லரசு இன்று பொருளாதார ரீதியில் அடிபட்ட கிழட்டுப் புலியாகி விட்டது. அதனுடன் போட்டியிடும் அளவுக்கு இன்று ஜெர்மனியும் ஜப்பானும் வேகமாக வளர்ந்து வருகின்றன. எனவே தனது நிலையைத் தக்க வைத்துக் கொள்ள நவீன காலனியாதிக்கச் சுரண்டலை மேலும் தீவிரப்படுத்துகிறது, அமெரிக்கா. அதன் வெளிப்பாடாக வந்துள்ளதுதான் "சூப்பர் 301" மற்றும் "ஸ்பெஷல் 301" வர்த்தகச் சட்டங்கள்.

இச் சட்டத்தின்படி, அமெரிக்க முதலீடுகளுக்கு தாராள அனுமதி தரப்பட வேண்டும். பெயரளவுக்கு உள்ள தடைகள் அனைத்தும் நீக்கப்பட வேண்டும். இந்தியாவின் உள்நாட்டுத் திட்டங்களுக்கு ஏற்ப முதலீடு செய்யுமாறு அன்னிய முதலீட்டாளர்களை இந்தியா நிர்பந்திக்கக் கூடாது. இந்தியாவில் கிடைக்கும் கச்சாப் பொருட்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற விதியை நீக்கிவிட்டு, அன்னிய நாடுகளிலிருந்து கச்சாப் பொருட்களை இறக்குமதி செய்து கொள்ள தாராளமாக அனுமதிக்க வேண்டும். இந்திய - அமெரிக்க கூட்டுப் பங்கு நிறுவனங்களில் அமெரிக்காவின் நேரடி முதலீடு 40%க்கு மேல் அனுமதிக்க வேண்டும். அன்னிய முதலீட்டைக் கட்டுப்படுத்தும் சட்ட திட்டங்களை நீக்க வேண்டும்.

இந்தியாவில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும், எல்.ஐ.சி., ஜெனரல் இன்சூரன்ஸ் ஆகிய அரசுத்துறை நிறுவனங்களும் ஏகபோகமாக உள்ளன. இதனால் அன்னிய வங்கி, இன்சூரன்சு நிறுவனங்கள் தமது தொழிலைச் செய்ய முடியாத அளவுக்கு சந்தை அடைக்கப் பட்டுள்ளது. இத்தடைகளை நீக்க வேண்டும்.

இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு குறிப்பாக, மருந்துப் பொருட்களுக்கு 14 ஆண்டுகளுக்கு "பேடண்ட்" உரிமை வழங்கப்பட்டுள்ளது. அதாவது, ஒரு நிறுவனம் தயாரிக்கும் குறிப்பிட்ட மருந்தை வேறெந்த நிறுவனமும் 14 ஆண்டுகளுக்குத் தயாரிக்கக் கூடாது என்ற விதி உள்ளது. இந்த விதியின் கால அளவைக் குறைக்க வேண்டும். இதோடு, சித்த, ஆயுர்வேத, யூனானி முறைகள் என்று பாரம்பரிய மருத்துவத்தில் குறிப்பிடத்தக்க அனுபவத்தைப் பெற்றுள்ள இந்தியா, அதை இன்னொரு நாட்டுடன் பரிமாறிக் கொள்ளக் கூடாது.

- இப்படி அடாவடித்தனமான நிர்ப்பந்தங்களையே விதிகளாகக் கொண்டுள்ளது தான், சூப்பர் 301 வர்த்தகச் சட்டம். "பரஸ்பர பேச்சுவார்த்தைகள் மூலம் இந்தியா தனது வர்த்தகத் தடைகளை நீக்க வேண்டும். இல்லையேல் இந்தியா ஏற்றுமதி செய்யும் பொருட்களின் மீது அமெரிக்கா 100%க்கும் மேலாக சுங்கத்தீர்வை விதிக்கும். அதுதவிர இதர பொருளாதார தண்டனைகளும் விதிக்கப்படும்" என்று கொக்கரிக்கிறார், அமெரிக்காவின் தலைமை வர்த்தகப் பிரதிநிதியான கார்லா கில்ஸ் என்ற பெண்மணி. இச்சட்டம் கொண்டு வரப்பட்டு ஓராண்டாகியும், இதுவரை இந்தியா உருப்படியாக எந்தவொரு சாதகமான உடன்பாட்டுக்கும் வராததால், வரும் ஜூன் மாதம் 16-ம் தேதி முதல் அமெரிக்கா தனது சூப்பர் 301 சட்டத்தை இந்தியா மீது ஏவும் என்று அச்சுறுத்துகிறார் அவர்.

அமெரிக்காவின் அடாவடித்தனத்துக்கு பணிந்தால், இந்தியா இன்னுமொரு தென்கொரியா அல்லது தைவானாகிப் போகும். அதாவது அமெரிக்காவின் தங்குதடையற்ற வேட்டைக்காடாக மாறி சீரழியும். இக்கொடிய வர்த்தக சட்டத்தை ஏற்க மறுத்தால், அதன் விளைவுகள் இன்னும் கொடூரமாக இருக்கும். இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் பொருட்கள் மீது அமெரிக்கா 100% சுங்கத் தீர்வை விதித்தால், சர்வதேச சந்தையில், இந்தியப் பொருட்களின் விலை மிக அதிகமாகி அதற்கு சந்தையே இல்லாமல் போய்விடும். இந்தியப் பொருட்கள் பெருமளவுக்கு ஏற்றுமதியாவது அமெரிக்காவுக்குத்தான். எனவே ஏற்றுமதிக்கே வாய்ப்பில்லாமல் போய் இந்தியப் பொருளாதாரமே திவாலாகி விடும்.

அமெரிக்காவின் இந்த அடாவடித்தனங்களை ஏற்றாலும் சரி, ஏற்காவிட்டாலும் சரி; இதனால் ஏற்படும் பொருளாதாரச் சுமைகள் அனைத்தும் இந்திய மக்களின் மீதே சுமத்தப்படும். மொத்த மக்கட்தொகையில் பாதிக்கும் மேற்பட்ட இந்திய மக்கள் வறுமைப் படுகுழியில் சிக்கியுள்ள நிலையில் புதிதாகத் திணிக்கப்படும் இச்சுமைகள் இந்திய மக்களை பட்டினிச் சாவுக்குத் தள்ளி, இந்தியாவை இன்னுமொரு எத்தியோப்பியாவாக மாற்றிவிடும்.

"அமெரிக்க முதலீடுகளுக்கு நாங்கள் தடையேதும் ஏற்படுத்தவில்லை. 1987-ஐ விட 1988-ல் இந்தியாவில் அமெரிக்க முதலீடு ரூ.100 கோடிக்கு மேல் உயர்ந்துள்ளது. இந்தியாவுக்கான அமெரிக்க ஏற்றுமதி 70% அதிகரித்துள்ளது. இந்தியாவிலிருந்து






படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் பொருட்கள் கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு 12.8% உயர்ந்துள்ளது. இந்தியாவுடனான வர்த்தகத்தின் மூலம் 1989-ல் மட்டும் ஏறத்தாழ 600 கோடி ரூபாயை அமெரிக்கா உபரி லாபமாகப் பெற்றுள்ளது. பத்தாண்டுகளுக்கு முன் ஏற்றுமதியான மருந்துப் பொருட்களின் மதிப்பு வெறும் 5 கோடி ரூபாய்தான். ஆனால் கடந்த ஆண்டில் மட்டும் ரூ.200 கோடிக்கும் மேலாக ஏற்றுமதியாகியுள்ளது. குறிப்பிட்ட சில துறைகளில் அமெரிக்கா நேரடியாக 100% முதலீடு செய்யவும் நாங்கள் அனுமதித்துள்ளோம். ஆனாலும் அமெரிக்கா இந்தியாவைக் கருப்புப் பட்டியலில் சேர்த்திருப்பது மிகவும் வேதனைக்குரியது'' என்று இந்தியத் தரகு முதலாளிகளின் சங்கத் தலைவரான ரனாக் சிங் புலம்புகிறார்.

''சர்வதேச நிலைமைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் விளைவாக, பலநாடுகள் தமது வர்த்தகக் கொள்கையை கண்டபடி மாற்றிக் கொண்டுள்ளன. ஆனால் இந்தியா தனது நலன்களுக்கும் நோக்கங்களுக்கும் ஏற்ப நிலையான ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டுள்ளது. இதை எக்காரணம் கொண்டும் நாம் மாற்ற விரும்பவில்லை'' என்கிறார் இந்திய அரசின் நிதித்துறைச் செயலரான பிமல் ஜலான். இந்திய வர்த்தக மந்திரி அருண்நேரு, இன்னும் ஒரு படி மேலேபோய், ''அமெரிக்காவின் அச்சுறுத்தலுக்கு நாம் ஒருக்காலும் பணிய மாட்டோம்'' என்று சவால் விடுக்கிறார்.

இந்திய அரசும் மந்திரிகளும் விடுக்கும் சவால்கள் வெற்றுச் சவடாலாக உள்ளன. அமெரிக்கா தனது சூப்பர் 301 சட்டத்தை இந்தியா மீது ஏவினால் அதிலிருந்து இந்தியப் பொருளாதாரத்தை எப்படி மீட்பது என்கிற அடிப்படை ஏதுமின்றி அவர்கள் வெற்றுக் கூச்சல் போடுகின்றனர். நாட்டின் மீதும் மக்களின் மீதும் அக்கறை கொண்டவர்களைப் போல நாடகமாடுகின்றனர். அதே சமயம் இந்தியத் தரகு முதலாளிகள் இந்த அளவுக்கு எதிர்ப்பைக் காட்டாமல் ''துரதிருஷ்டவசமானது'', ''கவலைக்குரியது'', ''தவிர்க்கப்பட வேண்டியது'' என்று அடக்கியே வாசிக்கின்றனர். அவர்களுடைய வாழ்வும் வளர்ச்சியும் ஏகாதிபத்தியங்களுடன் பின்னிப் பிணைந்திருப்பதால், கெடுபிடிகள் - மிரட்டல்கள் இல்லாமல் பரஸ்பரம் இருதரப்பினரும் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டுமென விரும்புகின்றனர்.

அமெரிக்காவின் மொத்த வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு வெறும் 0.7% தான். ஆனால் ஜப்பானியர் பங்கு 20%க்கும் அதிகமானது. இருப்பினும் ஜப்பானை கருப்புப் பட்டியலிலிருந்து நீக்கிவிட்டு, இந்தியாவை மட்டும் அமெரிக்கா நெருக்குவது ஏன்?

முதலாவதாக, போலி சோசலிசத்தைக் கைவிட்டு முதலாளித்துவ உற்பத்தி முறைக்குத் தாவியுள்ள கிழக்கு ஐரோப்பிய நாட்டுச் சந்தையைக் கைப்பற்றுவதில் அமெரிக்காவுக்குப் போட்டியாக ஜெர்மனியும் ஜப்பானும் களத்தில் உள்ளன. அச்சந்தையைக் கைப்பற்றுவதோடு, ஏற்கனவே உள்ள ஏழை நாடுகளது சந்தையைத் தக்கவைத்துக் கொள்ளவும், பூதாகரமான தனது பட்ஜெட் பற்றாக்குறையை ஈடுகட்டவும், முன்னிலும் கடுமையாக ஏழை நாடுகளைச் சுரண்ட வேண்டிய கட்டாயத்தில் அமெரிக்கா உள்ளது. அதனாலேயே, அமெரிக்க கொள்ளைக்கு கதவை அகலத் திறக்குமாறு இந்தியாவை நிர்பந்திக்கிறது.

இந்தியாவோடு ஏழை நாடான பிரேசிலை கருப்புப் பட்டியலில் சேர்த்திருந்த அமெரிக்கா, இப்போது அதைவிடுவித்து இந்தியாவை மட்டும் பிடித்து உலுக்குவதற்கு காரணம் இல்லாமல் இல்லை. இரண்டுமே ஏழை நாடுகள்தான் என்றாலும், பிரேசில் ஏற்கனவே ஏராளமாகக் கடன்வாங்கி திவாலாகிவிட்டது. ஆனால் இந்தியாவின் பொருளாதாரம் திவாலாகும் நிலையில் தான் உள்ளது. இந்தியாவின் மக்கள் தொகையில் குறைந்தது 10% பேராவது இன்னமும் வாங்கும் சக்தி உடையவர்களாக உள்ளனர். தென்கிழக்காசியாவில் ஒப்பீட்டளவில் இந்தியாவில்தான் ஓரளவுக்குச் சந்தை உள்ளது. எனவேதான் அமெரிக்க கழுகுகள் இந்தியாவைக் குறிவைத்துக் கொத்திக் குதறுகின்றன.

இரண்டாவதாக நீண்டகாலமாக இந்தியா அணிந்துள்ள சோசலிச முகமூடியைக் கழற்றி எறியுமாறு நிர்பந்திப்பதே அதன் முக்கிய நோக்கமாகும். நேரு காலத்திலிருந்தே ரஷிய ஏகாதிபத்தியத்துடன் நட்புறவு ஏற்படுத்திக் கொண்டு உலக அரங்கில் இந்தியா சோசலிச - முற்போக்கு நாடக மாடி வருகிறது. பாசிச இந்திரா காலத்தில் இந்தக் கொள்கை இன்னும் தீவிரமாகி, ரஷிய சார்பு அணிசேரா நாடுகளின் தலைமைப் பொறுப்பேற்கும் அளவுக்கு முன்னேறியது. காலனியாதிக்க எதிர்ப்பு, நிறவெறி எதிர்ப்பு, விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு என்ற புரட்சி சொல்லடுக்குகளின் பின்னே, அரசில் பித்தலாட்டங்களையே கொள்கையாகக் கொண்ட இந்தியா தெற்காசிய நாடுகள் மீது செல்வாக்கு செலுத்தவும் தொடங்கியது.

ஆனால் இன்று ரஷிய சமூக ஏகாதிபத்தியம் திவால் நிலைக்குத் தள்ளப்பட்டு, சோசலிச உச்சாடனங்களைக் கைவிட்டு, முதலாளித்துவத்தை சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கத் தொடங்கிவிட்டது. அதன் தொங்குசதை கிழக்கு ஐரோப்பிய நாடுகள் போலி சோசலித்துக்கு முழுக்கு போட்டுவிட்டு, முதலாளித்துவப் பாதைக்கு மாறிவிட்டன. முன்பெல்லாம் அமெரிக்கா நிர்பந்தித்தால், ரஷிய மாமாவின் பின்னே நின்றுகொண்டு அமெரிக்காவை இந்தியா எச்சரிக்க முடிந்தது. ஆனால் இன்று ரஷிய வல்லரசே பலவீனப்பட்டு போயிருப்பதால் அமெரிக்க எதிர்ப்பில் இந்தியாவால் உறுதியாக நிற்க முடியாது. எனவே இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு இந்தியாவின் ரஷிய சார்பு - போலி சோசலிச அரசியல் கொள்கைகளைக் கைவிடுமாறு 'சூப்பர் 301' சட்டத்தைக்காட்டி அமெரிக்கா மறைமுகமாக நிர்பந்திக்கிறது. தெற்காசியாவில் பெரிய, பலமான நாடாக உள்ள இந்தியாவின் போலி சோசலிசக் கொள்கைகளைக் கைவிடச் செய்வதன் மூலம், தெற்காசியாவில் அமெரிக்க கொள்கைக்கும் ஆதிக்கத்துக்கும் தார்மீக ஆதரவை வலுப்படுத்த முடியும் என்பதாலேயே இவ்வாறு அச்சுறுத்துகிறது.

> அமெரிக்காவின் அடாவடித்தனங்களை ஏற்றாலும் சரி, ஏற்காவிட்டாலும் சரி; இதனால் ஏற்படும் பொருளாதாரச் சுமைகள் அனைத்தும் உழைக்கும் மக்களின் மீதே சுமத்தப்படும். வேறு வார்த்தைகளில் சொன்னால், இந்திய மக்களின் கடைசி சொட்டு ரத்தத்தை உறிஞ்சுவதற்கான உரிமம்தான் ''சூப்பர் 301'' சட்டம்.

நீண்டகாலம் அமெரிக்க எதிர்ப்புக் கொள்கையைக் கடைபிடித்து வந்துள்ள இந்தியா திடீரென அதைக் கைவிட்டால் அம்பலப்பட நேரிடும் என்பதால், வறட்டு கெளரவத்திற்காக எதிர்ப்பு காட்டுகிறது. அதே சமயம் இந்தியத் தரகு முதலாளிகளில் ஒரு பிரிவினர் அமெரிக்காவின் நிர்பந்தங்களை ஆதரித்து அனுசரித்துப் போகவும் தயாராக உள்ளனர். அவர்களது கருத்தைப் பிரதிபலித்து சில ஆங்கிலப் பத்திரிகைகளும் ஆதரித்து எழுதுகின்றன.

ஒருபுறம் அமெரிக்கா தனது அடாவடித்தனமான நிர்பந்தங்களால் இந்தியாவை தனது ஆதிக்கப் பிடிக்குள் வைத்துக் கொள்ளத் துடிக்கும் அதேசமயம், அதற்குப் போட்டியாக உள்ள ஜப்பானிய ஏகாதிபத்தியமும் களத்தில் இறங்கியுள்ளது. அண்மையில் ஜப்பானியப் பிரதமர் இந்தியா மற்றும் பிற தென்கிழக்காசிய நாடுகளுக்குத் திக்விஜயம் செய்து, வர்த்தக உறவுகளை வலுப்படுத்த முயல்கிறார். அந்த நோக்குடன் இந்தியாவுக்கு ரூ.1250 கோடி உதவியும் அளித்துள்ளார். ஜப்பானிய உறவை இந்தியப் பெருமுதலாளிகளும் பத்திரிகைகளும் வரவேற்று புகழ்பாடுகின்றன.

சுருக்கமாகச் சொன்னால், ரஷிய சமூக ஏகாதிபத்தியம் பலவீனப்பட்டிருப்பதாலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் புதிதாக கிடைத்துள்ள சந்தையின் காரணமாகவும் ஏகாதிபத்தியங்களிடையே உலகை மறுபங்கீடு செய்வதற்கான போட்டி தீவிரப்பட்டுள்ளது. ''சூப்பர் 301'' சட்டத்தை ஆயுதமாகக் கொண்டு இந்திய மக்களின் கடைசி சொட்டு ரத்தத்தையும் உறிஞ்சுவதற்கான உரிமையை அமெரிக்கா கேட்கிறது. அதற்குப் போட்டியாக ஜப்பானும் நுழையத் துடிக்கிறது. ஏகாதிபத்திய தாசர்களான இந்திய ஆட்சியாளர்களின் வீரதீர சவடால்களால் ஆதிக்கவாதிகளின் பகற்கொள்ளையை முறியடிக்கமுடியாது. ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான தேசியப் புரட்சி யுத்தத்தைத் தொடுக்காமல், அதை சாதிக்கவும் முடியாது.

● பாலன்

படிப்பகம்

www.padippakam.com

● *ருசியாவில் தேசிய இனப்பிரச்சினை வெடித்திருப்பது அங்கே முதலாளித்துவம் வளரும் கட்டத்தில் உள்ளது என்பதைக் குறிக்கிறதா? அதாவது சந்தைக்கான போட்டி என்பதுடன் தொடர்புடையதா?*

சாருமதி, சென்னை

○ இல்லை. அங்கு முதலாளித்துவம் வளர்ந்து ஏகபோகக் கட்டத்துக்குள்ளும் நுழைந்துவிட்டது. இந்த நிலையிலும் ருசிய பெருந்தேசிய இன ஒடுக்குமுறை இருப்பதால், அங்கு தேசிய இனப்பிரச்சினை வெடித்துள்ளது. போலிக் கம்யூனிஸ்டுகள் வாதிடுவது போல, முதலாளித்துவம் வளரும் கட்டத்தில் மட்டுமே தேசிய இனப்பிரச்சினை வெடிக்கும் என்று மார்சிய - லெனினியவாதிகள் கருதவில்லை.

''இந்த ஏகாதிபத்திய காலகட்டத்தில், ஐரோப்பாவிலும் கூட தேசியப் போராட்டங்கள் சாத்தியமில்லை என்று கூறிவிட முடியாது. இந்தக் காலகட்டம் கிழக்கு ஐரோப்பாவில் பெரிய அளவிலான தேசிய இயக்கங்கள் தோன்றுவதை எவ்வாறு தடுக்கவில்லையோ, அதைப்போலவே (இணைத்துக் கொள்ளப்பட்ட அல்லது தேசிய ரீதியில் ஒடுக்கப்பட்ட) சிறிய நாடுகள் ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிரான தேசிய போராட்டங்கள் நடத்த முடியும். நடக்கும் என்பது மட்டுமல்ல; அவை தவிர்க்க முடியாதவையும், முற்போக்கானவையும் புரட்சிகரமானவையும் ஆகும்'' என்கிறார் லெனின். பலாத்காரமாக இணைக்கப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் சுதந்திரம், விடுதலைக்கான போராட்டம் நியாயமானது; ஏகாதிபத்தியத்தை அது பலவீனப்படுத்தும். தற்போது ருசியாவில் நடக்கும் தேசிய இனப்போராட்டம் ருசிய சமூக ஏகாதிபத்தியத்தைப் பலவீனப்படுத்தும் என்பதால் அதை ஆதரிக்க வேண்டும்.

***கோர்பியின் கிளாஸ்நாஸ்ட் என்பது ஏகபோக முதலாளித்துவத்துக்கும், கம்யூனிச எதிர்ப்புக்கும்தான் ஜனநாயக உரிமை அளிக்கிறதே தவிர அவற்றுக்கு எதிராகப் போராடும் சக்திகளுக்கு பாசிச ஒடுக்குமுறைதான்.***

முதலாளித்துவம் வளர்ந்த நிலையில் தேசிய இனப்பிரச்சினை வெடிப்பதும்கூட சந்தைக்கான போட்டியை அடிப்படையாகக் கொண்டதுதான். ''ஏகாதிபத்தியம், விவசாயப் பிரதேசங்களை மட்டுமின்றி மிக உயர்ந்த அளவில் தொழில் மயமான பகுதிகளையும் கபளீகரம் செய்ய முயற்சிக்கிறது. இதுதான் ஏகாதிபத்தியத்தின் சிறப்பான குணாம்சமாகும்'' என்கிறார், லெனின்.

● *தற்போது கிழக்கு ஐரோப்பா மற்றும் ரசியாவில் நடந்துவரும் மக்கள் போராட்டங்கள் பிற்போக்கானதா? எப்போதும் மக்கள் போராட்டங்கள் பிற்போக்கானதாக இருக்க முடியாது என்று கருதுகிறேன். 'கம்யூனிசப் போர்வையில் நடந்துவந்த சர்வாதிகாரத்தை விட முதலாளித்துவ ஜனநாயகம் முற்போக்கானது இல்லையா?*

சாருமதி, சென்னை

○ பெருமளவில் மக்கள் பங்கேற்கிறார்கள் என்பதற்காக, ''மக்கள் போராட்டங்கள் ஏப்போதும் பிற்போக்கானதாக இருக்கமுடியாது'' என்று கருதுவது சரியானதல்ல. நமது நாட்டில்கூட சாதி, மத, 'தேசிய', யுத்த வெறியினால் தூண்டப்பட்ட பல 'மக்கள் போராட்டங்கள்' நடக்கின்றன. அவையெல்லாம் பிற்போக்கானவை இல்லையா? ஆகவே, எத்தகைய கோரிக்கை - முழக்கம் - கொள்கை, திட்டம் - இலட்சியத்தை முன்வைத்து, யாருடைய தலைமையில் போராடுகிறார்கள் என்பதை கொண்டுதான் முற்போக்கானதா, பிற்போக்கானதா என்பதை பரிசீலித்து முடிவுக்கு வரவேண்டும்.

''கம்யூனிசப் போர்வையில் நடந்துவந்த சர்வாதிகாரத்தைவிட முதலாளித்துவ ஜனநாயகம் முற்போக்கானது'' என்கிற அடிப்படையில் சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பிய 'மக்கள் போராட்டங்களை' சில மார்க்சிய - லெனினியவாதிகள்கூட கருதுகின்றனர். ஆனால் அப்படி ஒப்பீடு செய்து முடிவுக்கு வருவது தவறானதாகும்.

1917 பிப்ரவரி ருசியப் புரட்சிக்கு முன்பு, அங்கு ஜாரிச நிலப்பிரபுத்துவக் கொடுங்கோன்மை அரசு இருந்தது. அதை மாற்றிவிட்டு முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயக அரசு அமைப்பது என்ற திட்டம் - முழக்கம் முன்வைத்து ருசிய கேடட் கட்சியினர் போராடினர். அதை மென்ஷவிக் திரிபுவாதிகள் ஆதரித்தனர். ஆனால், ஜாரிச நிலப்பிரபுத்துவ கொடுங்கோன்மையைவிட முதலாளித்துவ ஜனநாயகம் முற்போக்கானது என்று கருதி லெனின் தலைமையிலான போல்ஷ்விக்குகள் அதை ஆதரிக்கவில்லை. முதலாளிகள் மென்ஷ்விக்குகளது சமரசத் திட்டங்களை அம்பலப்படுத்தி, ஜாரிச நிலப்பிரபுத்துவ கொடுங்கோன்மையைத் தூக்கி எறிந்து தொழிலாளர் - விவசாயிகள் சர்வாதிகாரத்துக்கான திட்டம் - முழக்கத்தை முன்வைத்துப் போராடினர் (பார்க்க சமூக ஜனநாயகத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள்)




அதேபோல, அரைக்காலனிய - அரை நிலப்பிரபுத்துவ சீனத்தில் தரகு அதிகாரமுதலாளிகள் - நிலப்பிரபுக்களின் சர்வாதிகாரத்தை விட முதலாளித்துவ ஜனநாயகம் முற்போக்கானது என்ற சென்டுசியு பாட்டாளிகளின் நிலைப்பாட்டை வைத்துப் போராடாது, சியாங்கேஷேக் தலைமையை ஆதரித்தார். ஆனால் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் என்ற முழக்கம் - திட்டத்தை முன் வைத்தார் மாவோ. இதையே புதிய ஜனநாயகப் புரட்சி என்றார். முதலாளிகள் தலைமையிலான பழைய வகைப்பட்ட ஜனநாயகப் புரட்சி காலாவதியாகிப் போய்விட்டது, என்று வரையறுத்தார்.

ஏகாதிபத்தியமும் பாட்டாளிவர்க்கப் புரட்சியும் என்ற இந்த சகாப்தத்தில், முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குத் தலைமையேற்கும் திராணியை முதலாளிகள் இழந்துவிட்டார்கள். பாட்டாளி வர்க்கம் மட்டுமே இனி அந்தக் கடமையை நிறைவேற்ற முடியும் என்று லெனினும் மாவோவும் வரையறுத்தனர். ஏனெனில் ஜனநாயகத்துக்கான புரட்சியைக் கைவிட்டு துரோகமிழைத்து எதிரிகளுடன் சமரசம் செய்து கொள்வது முதலாளித்துவ வர்க்கத்தின் பொதுக் குணாம்சமாகிவிட்டது என்கின்றனர்.

***தற்போது ருசியாவில் நடக்கும் தேசிய இனப்போராட்டம் ருசிய சமூக ஏகாதிபத்தியத்தைப் பலவீனப்படுத்தும் என்பதால் அதை ஆதரிக்க வேண்டும்.***

அதுமட்டுமல்ல. முதலாளித்துவத்தின் கீழ், மூலதன ஆதிக்கத்தின் கீழ் ஜனநாயகம் என்பதே உண்மையில் முதலாளித்துவ சர்வாதிகாரம்தான் என்பது பொதுவிதி. குறிப்பாக நிதி மூலதன ஏகபோகத்தின் கீழ், ஏகாதிபத்திய சக்திகளின் ஆதிக்கத்தின் கீழ் போட்டி முதலாளித்துவத்தின் போதிருந்த சட்டபூர்வ, முதலாளித்துவ ஜனநாயகம் கூட போலியானதாகவும், பாசிச கும்பல்களின், அரசுகளின் கீழ் நசுக்கப்பட்டுவிடுகிறது. ஜெர்மனியில் புதிய நாஜிக்கள், இங்கிலாந்தில் பல நிறவெறி அமைப்புகள், அமெரிக்காவில் கூகுளக்ஸ்கிளான் போன்றவை நிதிமூலதன ஏகபோகங்களால் இதற்காகவே ஊட்டி வளர்க்கப்படுகின்றன.

கிழக்கு ஐரோப்பிய ஜனநாயகப் போராட்டங்களுக்கு முன்னோடியாக விளங்கும் கோர்பியின் கிளாஸ் நாஸ்ட் - ஜனநாயகப்படுத்துதலை இங்குள்ள பல பண்டிதர்களும் ஒப்பீட்டு ரீதியில் முற்போக்கானது என்று வரவேற்கிறார்கள். ஆனால் கோர்பியின்



படிப்பகம்

www.padippakam.com

கிளாஸ் நாஸ்ட் என்பது ஏகபோக முதலாளித்துவத்துக்கும், கம்யூனிச எதிர்ப்புக்கும்தான் ஜனநாயக உரிமை அளிக்கிறதே தவிர அவற்றுக்கு எதிராகப் போராடும் சக்திகளுக்கு பாசிச ஒடுக்குமுறைதான். செர்னோபில் அணுஉலை விபத்து பற்றிய உண்மைகளை மறுத்தது, போராடும் தேசிய இனங்கள் மீது இராணுவத்தை ஏவியும் - விஷவாயு குண்டுகளை வீசியும் படுகொலைகள் செய்தது, ஸ்டாலின் ஆதரவு இயக்கங்களுக்குத் தடைவிதித்தது ஆகியன இதற்கான சான்றுகளாகும்.

ஆகவே, 'கம்யூனிசப் போர்வையில் நடந்துவந்த சர்வாதிகாரத்தை விட முதலாளித்துவ ஜனநாயகம் முற்போக்கானது' என்று வெறுமனே ஒப்பீடு செய்து முடிவுக்கு வருவது சரியானதல்ல. அதாவது ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளிகள் தலைமையிலான முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி சாத்தியமற்றது; ஏகபோக நிதிமூலதனத்தின் கீழ் போட்டி முதலாளித்துவ கட்டத்துக்குரிய ஜனநாயகம் இருக்க முடியாது; பல்வேறு வடிவங்களிலான பாசிச ஒடுக்குமுறையே நிலவும். எனவே முன்னாள் சோசலிச நாடுகளில் நடக்கும் 'மக்கள் போராட்டம்' முற்போக்கானவை என்று கருதி ஆதரிப்பது அல்ல புரட்சியாளர்களின் கடமை. மீண்டும் பாட்டாளிவர்க்க சோசலிசப் புரட்சிக்கான பாதை வகுத்துப் போராடுவதையே முன் வைக்க வேண்டும்.

***இந்தியாவின் அரசியல், பொருளாதாரம், சமூகம், கல்வி - கலாச்சாரம், இராணுவம், அயலுறவு போன்ற சகல துறைகளிலும், அதன் சுயாதிபத்திய உரிமை மறுக்கப்பட்டு ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கம் நீடிக்கிறது. பெயரளவிலான சுதந்திரமே நிலவுகிறது ஆகவே, இது ஒரு அரைக்காலனி.***

● *சுதந்திரம் என்பது எப்படி இருக்க வேண்டும்?*

**இரா.கதிரவன், நல்லம்பள்ளி**

○ ஒரு தேசம் அல்லது நாடு அதன் அரசியல், பொருளாதார சமூக, கல்வி - கலாச்சார மற்றும் இராணுவத்துறைகளிலும் அயலுறவுகளிலும் சுயாதிபத்திய உரிமை பெறுவதைத்தான் சுதந்திரம் என்கிறோம்.

'இந்தியா அரசியல் சுதந்திரம் அடைந்துவிட்டது; பொருளாதார ரீதியில் சார்பு நிலையில் இருக்கிறது' என்று கூறும் சிலர் சுதந்திரம் கிடைத்துவிட்டது; அதாவது இந்திய மக்களுக்குச் சுதந்திரம் இல்லை; ஆளும்வர்க்கங்களுக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டது. அவர்கள் சொந்த அரசைப் பெற்றிருக்கிறார்கள்; ஏகாதிபத்தியங்களிடம் பேரங்கள் பேசி ஆதாயம் அடைவதற்கான சுதந்திரம் உள்ளது என்கின்றனர். இது முற்றிலும் தவறானது.

அரசியல், பொருளாதாரம் உட்பட சகல துறைகளிலும் சுயாதிபத்தியம் உடைய நாடுகளில்கூட, ஏகாதிபத்திய, காலனிய ஆதிக்க நாடுகளில் கூட ஆளும் வர்க்கங்களுக்குத் தான் சுதந்திரம் இருக்க முடியுமே தவிர ஆளப்படும் வர்க்கங்களுக்கு இருக்க முடியாது. எனவே அது விவகாரமோ, விஷயமோ அல்ல. அதேபோல காலனிய அடிமை நாடுகளுடன் முரண்பாடு கொள்வதும், பேரம்பேசி ஆதாயம் பெறுவதும் உண்டு. ஆகவே ஒரு தேசம் அல்லது நாட்டின் சுதந்திரத்தை இவ்விரு அம்சங்களைக் கொண்டு தீர்மானிப்பது தவறு.

ஆகவே ஏகாதிபத்திய, காலனிய ஆதிக்கத்தில் இருந்து ஒரு தேசம் அல்லது நாடு என்கிற கட்டமைவு முழுவதற்குமான அரசியல், பொருளாதார, சமூக, இராணுவ, கலாச்சார, அயலுறவுத்துறைகளில் சுயாதிபத்திய உரிமை பெறுவது மட்டுமே உண்மையான சுதந்திரம் ஆகும். மற்ற நாடுகளின் அரசியல், பொருளாதாரம் போன்ற சகல துறைகளிலும் அவற்றின் சுயாதிபத்தியத்தைப் பறித்துத் தமது மேலாதிக்கத்தை நிறுவவுதே ஏகாதிபத்தியங்களுக்கு அதிகபட்சம் ஆதாயம் தரக்கூடியது. அதற்காக ஏகாதிபத்தியங்கள் அந்நாடுகள் மீது பல்வேறு வடிவங்களிலான தாக்குதல்களில் ஈடுபடுகின்றன. அத்தகு தாக்குதல்களை எதிர்த்துப் போராடி முறியடிக்கிறதா? இல்லை சமரசம், சரணடைவுகள் மூலம் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்கிறதா என்பதே ஒரு நாடு அல்லது தேசத்தின் சுதந்திரத்தைத் தீர்மானிப்பதாகும்.

● *அரசியல் சுதந்திரம் பெற்று ஒரே ஆட்சியின் கீழ் உள்நாட்டு முதலாளித்துவவாதிகளாலும் அந்நிய ஏகாதிபத்தியவாதிகளாலும் சுரண்டலுக்கு உள்ளாகியுள்ள இந்தியாவை எவ்வாறு காலனி, அரைக்காலனி என்று கூறமுடியும்?*

**ஏ.வீ அண்ணாதுரை, ஆலத்தூர்**

○ இந்தியாவைக் காலனி, அரைக்காலனி என்று யாருமே கூறவில்லை. நவீன காலனி, சார்புநிலை முதலாளித்துவ நாடு, முதலாளித்துவ நாடு என்று பல போலிக் கம்யூனிஸ்டுகளும், போலிப் புரட்சியாளர்களும் கூறி வருகின்றனர். அரைக்காலனி நாடுஎன்று மார்சிய - லெனினியப் புரட்சியாளர்கள் வரையறுத்துள்ளனர்.

இந்தியா பல்வேறு ஏகாதிபத்தியங்களின் வேட்டைக்காடாக உள்ளது. இந்தியாவின் அரசியல், பொருளாதாம், சமூகம், கல்வி - கலாச்சாரம் இராணுவம், அயலுறவு போன்ற சகல துறைகளிலும் அதன் சுயாதிபத்திய உரிமை மறுக்கப்பட்டு ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கம் நீடிக்கிறது. பெயரளவிலான சுதந்திரமே நிலவுகிறது. (மேற்படி பதிலைப் பார்க்கவும்.) ஆகவேதான் இதை அரைக்காலனி என்று வரையறுத்துள்ளோம்.

அரைக்காலனி என்றால் அந்நாட்டின் சில பகுதிகளைப் பல்வேறு ஏகாதிபத்தியங்களின் படைகள் பிரதேசவாரியாகக் கைப்பற்றிக் கொண்டிருக்கும்; இந்த நிலையில் இருந்து தமது முழுக்காலனியாக்கிக் கொள்வதற்கு பல்வேறு ஏகாதிபத்தியங்கள் முயலும்; அப்படி மாறுதலடைவதற்கு இடைப்பட்ட கட்டமே அரைக்காலனி; மேலும் அது ஒரே ஆட்சியின் கீழ் இருக்காது - என்று சிலர் வாதிடுகின்றனர். இவை தவறானவையாகும்.

''பல்வேறு ஏகாதிபத்தியங்களின் கூட்டு - போட்டி ஆதிக்கத்தின் கீழ் உள்ளது - அரைக்காலனி'' என்கிற சாராம்சத்தை விட்டுவிட்டு சீனாவில் முன்பு இருந்த வடிவங்களை மட்டும் இவர்கள் தொகுத்துக் கொண்டு எந்திர ரீதியில் பிரயோகிக்கிறார்கள். ஆகவே ஒரே ஆட்சியின் கீழ் இல்லாத பிரதேச வாரியான ஆக்கிரமிப்புப் பகுதிகளைத் தேடுகிறார்கள்.

நவீன காலனி என்பது ஒரு குறிப்பிட்ட ஏகாதிபத்தியம் தனது காலனிய ஆதிக்கத்தை மறைமுகமான புதியமுறையில் தொடர்வதாகும். ஏகாதிபத்திய, காலனிய நேரடி ஆட்சிக்குப் பதிலாக ஒரு கைப்பாவை அரசைக் கொண்டு ஆதிக்கம் செலுத்துவதாகும். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஏகாதிபத்தியங்கள் இந்த முறையைப் பிரதானமாகக் கடைப்பிடிக்கின்றன. ஆகவே ''பல்வேறு ஏகாதிபத்தியங்களின் கூட்டு - போட்டி ஆதிக்கத்தின் கீழ் உள்ள அரைக்காலனி நாடுகளை, தமது பழையபாணி காலனிகளாக மாற்றுவதற்குப் பதிலாக நவீன காலனிகளாக்கவே முயலுகின்றன. ஆகவே நவீன காலனி நாடாக மாற்றுவதற்காகப் பல்வேறு ஏகாதிபத்தியங்களின் போட்டி ஆதிக்கத்தின் கீழ் உள்ள நாடும் அரைக்காலனிதான் என்கிறோம்.

''உள்நாட்டு முதலாளித்துவவாதிகள்'' என்று அவர்களது பிறப்பு, தோற்றம், ரத்தத்தை வைத்து முடிவு செய்யக்கூடாது. அவர்களுடைய குணாம்சங்களை வரையறுப்பதற்கு அது போதாது. அவர்களது அரசும் தொழிலும் பிரதானமாக உள்நாட்டு உற்பத்திமுறையின் விரிவாக்கப்பட்ட மறு உற்பத்திக்காக நடத்தப்படுகிறதா? அல்லது ஏகாதிபத்திய உற்பத்திமுறையின் விரிவாக்கப்பட்ட மறு உற்பத்திக்காக நடத்தப்படுகிறதா? என்பதை வைத்தே தீர்மானிக்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது இந்தியா தரகு அதிகார முதலாளிகளின் சுரண்டலுக்கு உள்ளாகியுள்ளதாகக் கூறுவதுதான் சரியானது.

● *ஒவ்வொரு நாட்டின் வரலாற்றிலும் நடந்த புரட்சிகர மாற்றங்களில் எல்லாம் துடிப்புமிக்க உணர்ச்சிகொண்ட மாணவர்கள் பங்கு கொண்டு அவற்றை வெற்றியடையச் செய்துள்ளனர். அம் மாணவர்களின் வழியில் புரட்சிக்காக தங்களை அர்ப்பணிக்க ஆவலாய் உள்ள மாணவர்களை அணிதிரட்ட மாணவர் முன்னணியைக் கட்டியமைத்து செயல்படவைத்தால் என்ன?*

**ஏ.வீ.அண்ணாதுரை, ஆலத்தூர்**

★ புரட்சிக்காக மாணவர்களை அணிதிரட்ட வேண்டியது முக்கியமான பணிதான். இதை உணர்ந்திருக்கிறோம். ஆனால் அமைப்பின் பலத்துக்கு ஏற்ப முக்கியத்துவம் - முன்னுரிமையைத் தீர்மானித்து செயல்படுகிறோம். எனவே இப்போதைக்கு மாணவர் மத்தியில் பிரச்சாரம் மூலம் அணிகளை வென்றெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். போதிய அளவு அணிகள் அமைப்பு பலம் பெற்ற பிறகு மாணவர்களுக்கான மக்கள் திரள் அமைப்பைக் கட்டும் முயற்சியில் இறங்குவோம்.

[illegible] வெளியிடுபவரும்: [illegible] 21 [illegible] தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

இதோ குஜராத் மதக் கலவரத்தில் சிக்குண்டு அகதிகளான குழந்தைகளைப் பாருங்கள்! தம்பிக்கு கொடுத்தது போக தமக்கும் ஏதாவது ரொட்டி மிஞ்சுமா என்று துழாவுகிறாள் அச்சிறுமி! இந்துமத வெறியர்கள் கிளப்பிவிட்ட மதவெறியில் 5000 குடும்பங்கள் தப்பித்து சொந்த நகரத்திலேயே அகதிகள் முகாமில் தஞ்சம் புகுந்தனர்! அகமதாபாத் - வதோதரா நகரங்களில் எங்கு பார்த்தாலும் வெட்டப்பட்ட மனித உடல்கள். சாலையில் நடமாடிக் கொண்டிருந்த தாடி வைத்த முஸ்லீம்கள் கதறக்கதற வெட்டி வீசப்பட்டனர். இதுவரையில் ராமஜென்ம பூமி விவகாரத்தை கிளப்பிவிட்ட இந்துமத வெறியர்கள் இப்போது 'காஷ்மீரை காப்பாற்றுவோம்' என்று முஸ்லீம்களைக் கொல்லுகிறார்கள். கடந்த மார்ச்சு மாதத்தில் அகமதாபாத் நகரத்தில் மட்டும் 220 பேர் வெட்டி கொல்லப்பட்டனர். 282 பேர் ரத்த காயத்துடன் தப்பித்தனர். பெயருக்கு அகதிகள் முகாமை அரசு திறந்தது. உணவு, இருப்பிடம், சுகாதாரம் எதுவும் இல்லாமல் பாதிக்கப்பட்ட முஸ்லீம் மக்களை, அவர்களின் குழந்தைகளை முகாம்கள்களில் மந்தைகளாக அடைத்து வைத்து அவமானப்படுத்தியது!

இதோ இவர்களை பாருங்கள்! உல்லாசப் பயணம் சென்ற சுற்றுலா பயணிகள் போல் குடும்பத்துடன் உணவருந்துகிறார்கள்! இவர்கள் காஷ்மீர் மக்களின் விடுதலைப் போரை சபித்துவிட்டு டில்லி ஓடிவந்து அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் காஷ்மீரி பார்ப்பனர்கள்! பண்டிட் என்று கௌரவத்துடன் நடத்தப்படும் இவர்கள், காஷ்மீரில் அரசு உயர் பதவிகளில் இருந்தவர்கள். முஸ்லீம் போராளிகளைப் பற்றி அரசே இவர்களிடம் பீதியூட்டி தானே அரசு வாகனங்களில் ஏற்றி வந்து ஜம்முவில் பாதுகாத்து சம்பளமும் தர முன்வந்தது. அரசை உதாசீனப்படுத்திவிட்டு டில்லி ஓடிவந்த இவர்களை டில்லியிலும் பொத்திப் பொத்தி பாதுகாக்கிறது. பெரும் தனியார், அரசு மாளிகைகளில் தங்க வைத்து குடும்பம் நடத்த அனைத்தும் தருகிறது. ஸ்டவ், பாத்திரங்கள், தட்டு, டம்பளர்கள், இலவச ரேஷன், காய்கறி மற்றும் டாக்டர்கள் கவனிப்பு என்று பாதுகாக்கிறது. ஆர்.எஸ்.எஸ். இந்துமத வெறி அமைப்பும் தனியாக முகாம்களை நடத்தி இவர்களை பராமரிக்கிறது. மேலும் வி.பி.சிங் அரசை மிரட்டி இவர்களுக்கு அதிக நிதி ஒதுக்கச் சொல்கிறது.

அரசு எல்லாருக்கும் பொதுவானது என்று கூறிக்கொண்டே மேட்டுக்குடி உயர் சாதி பார்ப்பண அகதிகளுக்கு தனி சலுகை கௌரவம் அளிக்கிறது. சிறுபான்மை ஏழை முஸ்லீம்கள் - அவர்களின் குழந்தைகள் வாழ்விழந்த பிறகும் அவமதிப்பு! இந்த மதவெறி கைப்பாவை அரசை நாம் தகர்த்தெறிவது எப்போது?



படிப்பகம்